ஒன்றுமே புரியவில்லையே என்று எனக்கு இணையான நண்பர்கள் சொல்கிறார்கள். எனக்கு இவர்கள் பேச்சு ஆச்சரியமாக இருக்கிறது. இவர்களிடம் என்ன குறை?

★ எதையும் ஆழ்ந்து யோசிக்கிற மனப்பக்குவம் இவர்களுக்கு இவர்கள் வாழ்க்கை கற்றுத்தரவில்லை. ஆழ்ந்து யோசிக்க வேண்டிய அவசியம் இவர்களுக்கு இவர்கள் வாழ்க்கையில் இன்னும் ஏற்படவில்லை. எல்லாமும் மேலோட்டமாக இருந்தால் போதுமென்று நினைக்கிறார்கள். ஆழ்ந்து சிந்திக்க பலபேர் பயப்படுகிறார்கள். அப்போது அதிகம் சிரிக்க முடியாது. குதியலாக வாழ்க்கை இருக்காது. வீரமான வசனங்கள் பேசமுடியாது. அதிகம் மௌனமாக இருப்பது சிலருக்கு கலவரத்தை கொடுத்துவிடும். ஆகவே, உள்ளுக்குள் மௌனம் தோன்றும் போதே, இவர்கள் பிதற்ற ஆரம்பித்து விடுவார்கள். நிறைய பேச ஆரம்பித்து விடுவார்கள். அல்லது பிதற்றுபவர்களை ஆவலோடு பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

தமிழ் சினிமாக்கள் அதிகம் பிதற்றுகின்றன. ஒரு காதல் தோல்வியை, அல்லது காதலை எதுவும் அமைதியாக வெளிப்படுத்துவதேயில்லை. ஏகப்பட்ட வார்த்தைகள் போட்டு, உளறலாகத்தான் தமிழ் சினிமாக்கள் சொல்லுகின்றன. இது பிடித்துப் போய் விட்டால், ஆழ்ந்து யோசிப்பது, பிடிக்காது போய் விடும். நிறைய சினிமா பார்ப்பவர்கள் நாவல் படிக்க முடியாது. நாவல் ஆழ்ந்து படிக்கிறவர்கள், தமிழ் சினிமா பார்க்க முடியாது.

நீங்கள் சொல்லுகிற நபர்கள் ஆழமில்லாதவர்களாக இருக்கலாம். விட்டுவிடுங்களேன். அவர்களாக வரட்டும்.

கே. சரவணன்,
சென்னை.

□ 'ஆங்க்ரி யங்மேன்' - கோபமுள்ள இளைஞர்கள் என்கிற வார்த்தை இருபது வருடங்களுக்கு முன்பு அடிக்கடி சொல்லப்பட்டது. இப்போது அந்த வார்த்தையை யாரும் உபயோகிப்பதில்லையே.

★ இளைஞர்களுக்கு கோபத்தை விட ஆத்திரம் தான் அதிகமாக இருக்கிறது. ஆத்திரத்தின் அடிப்படை பேராசை, பொறாமை. பொறாமையும் ஆத்திரமும் இருக்குமிடத்தில் தெளிவு இருக்காது. தெளிவு இல்லையென்றால் உங்கள் கோபம் உங்களை சீரழித்துவிடும்.

முன் அட்டைப்படம்:
'WIDE ANGLE' ரவிசங்கர்



# மரக்கால்

## பாலகுமாரன்

“என்னைக் கல்யாணம் பண்ணிக்கறயா உமா...?” கேள்வியைக் கேட்ட பிறகு முரளிதரன் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். துடைத்த நிமிடமே மறுபடி வியர்த்தது. இந்த முறை கோடை வெய்யில் அதிகமாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். எல்லா கோடையிலும் இப்படித்தான் நினைத்துக் கொள்கிறோம் என்கிற யோசனையும் வந்தது. பருவ நிலை பற்றிய சலிப்பே ஓய்வாக இருக்கிற நேரம்தான் எழுகிறது. வேலை மும்முரமாய் இருந்தால் வெய்யில், மழை, இரவு, பகல் எதுவும் தெரிவதில்லை. செய்ய ஒன்றுமே இல்லாதபோது சூழ்நிலையை குறை சொல்லும் குணம் வந்து விடுகிறது. ஏதாவது யோசிக்கத் தோன்றுகிறது. ஏதாவது பேசத் தோன்றுகிறது.

நான் இப்போது பேசினதுகூட அப்படித்தானோ... 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கறயா உமா...?' என்று கேட்டது இந்த ஒரு மணி நேரம் ஊர் கதையெல்லாம் பேசி இனி பேச ஒன்றுமேயில்லை என்று வெறுமே உட்கார்ந்திருந்தபோது கேட்டுவிட்டேனோ. கேட்காமல் இருந்திருக்கலாம். அப்ப நான் வரேன் என்று கதவைப் பிடித்து நடந்து வெளியே போயிருக்கலாம்.

இனி போக முடியாது. இங்கே உட்காரவும் முடியவில்லை. இவ்வளவு பெரிய கேள்வியைக் கேட்டுவிட்டு எழுந்து போவது அபத்தம். பதில் என்ன வருமோ என்கிற அச்சத்தில் நெளிந்து கொண்டு உட்கார்ந்திருப்பது இன்னும் பெரிய இம்சை.

முரளிதரன் கையில் கர்சீஃபையே பார்த்துக் கொண்டிருந்தான். மனசு கம்ப்யூட்டர் நாலு பக்கமும் விளக்கெரிய பறந்தது. சம்பந்தமில்லாத யோசனைகளை எல்லாம் தொடுத்திருப்பிற்று.

அறையில் அதுவரை பாவியிருந்த தம்பூர் சுருதி பட்டென்று நின்றது.

"என்ன கேட்டேள்?" உமா தம்பூரின் அடிவயிற்று மணிகளை நெருடியபடி விழி உயர்த்தி இவனைக் கேட்டாள். முரளிதரனுக்கு அந்தத் தம்பூர் அருகில் சென்று விண்ணென்றிருந்த அதன் நரம்புகளை மெல்ல நீவி மீண்டும் சுருதி பரப்ப ஆசை வந்தது.

"என்னைய்யா கேட்டேள் கல்யாணம் பண்ணிக்கறயான்னு கேட்டது என்னையா?"

முரளிதரன் ஆமென்று தலையசைத்தான். தம்பூரின் அடிவயிற்றில் இரண்டு வட்டங்கள் வரையப்பட்டிருந்தன. அவை இரண்டும் கண்களைப் போல் அவனை முறைத்துப் பார்த்தன.

"என் தங்கையை நீங்க லவ் பண்றேள்னு நினைச்சுண்டிருக்கேன். என்னைப் பார்த்து என்ன திடீர்னு இப்படி ஒரு கேள்வி?"

தம்பூரை இரண்டு கைகளிலும் தூக்கிக் கொண்டு உமா எழுந்திருந்தாள். சுவரோரம் நிறுத்தி அதற்கான மெத்தையை அண்டக் கொடுத்தாள்.

"பாடலையா?"



"சுருதி சேக்கறதுக்கே இத்தனை நாழியாயிடுத்து. இதுவே பாடிண்டிருந்தா பாட்டு கேக்கணும்னு வந்தேளா?"

"அதுக்கில்லை. சட்டுன்னு நிறுத்தி வச்சுட்ட மாதிரி பட்டுது. நான் கெடுத்துட்டேனோன்னு கேட்டேன்."

"கேக்கணும்னு தோணித்துன்னா பாடறேன்."

"கேள்விக்கு பதிலே சொல்லலையே."

"நான் கேட்டது மறந்து போயிடுத்து போல இருக்கு."

"யார் சொன்னா... நான் உன் தங்கையை லவ் பண்றேன்னு?"

"யாராவது சொல்லணுமா? சொல்லி தெரிஞ்சுக்கற அளவு தூரமா...? கண்ணெதிர்க்கத்தானே நடக்கிறது?"

"என்ன நடக்கிறது?"

"பீச்சு."

"உச்சக் கொட்டினா என்ன அர்த்தம்?"

"கொட்டவும் இல்லை. வாரவும் இல்லை. இது உங்க விஷயம். அவ விஷயம். இது நடந்தது அது நடந்ததுன்னு பட்டியல் போடற அளவுக்கு உத்து உத்து நான் பார்க்கவுமில்லை."

"அப்புறம்."

"மனசுல பட்டது சொன்னேன்."

"சிரிச்சுப் பேசினா லவ்வா?"

"இல்லை."

"சேர்ந்து வெளியே போனது உறுத்தித்தாக்கும்?"

"நோ. நெவர்."

"டபார்னு அதென்ன கேள்வி? எப்படி வரும் ஒரு வார்த்தை அந்த மாதிரி. இத்தனை வருஷம் பழகிட்டு?"

"அடிசக்கை. டபார்னு கேட்டது நீங்களா? நானா? வந்து ஒரு மணி நேரம் என்னென்னவோ ஊர் கதை பேசிட்டு கர்சீஃபைப் பார்த்து 'கல்யாணம் பண்ணிக்கறயா உமா'ன்னு கேட்டது நீங்கதானே?"

"சரி. உன் கண்ணைப் பார்த்து கேக்கறேன். என்னைக் கல்யாணம்..."

"ஒரு செகண்ட். உங்க கேள்வி எனக்குப் புரிஞ்சு போச்சு. நான் கேட்டதுக்கு நேர் பதிலா வரலியே."

"சந்திராவும் நானும் ஃப்ரெண்ட்ஸ். லவ்வும் பண்ணலை. ஒரு மண்ணும் பண்ணலை."

"ஏன்?"

"இதென்ன கேள்வி? என்னா என்ன சொல்றது?"

"அவளைத்தானே உங்களுக்கு முதல்ல பழக்கம். அவளைத் தெரிஞ்ச பிறகுதானே நான். இந்த வீடு. இந்த வீட்டு மனுஷா பழக்கம். இன்னிக்கும் உங்களுக்கு சந்திராவோ... ஃப்ரெண்டுன்னுதானே இந்த வீட்ல பேர். வாசப்படில நுழையறச்சயே அவ பேரை சொல்லிண்டு தானே வரேள்."

"ஸோ வாட்?" முரளி முகம் சுருங்கி இரைந்தான்.

"இன்னொரு காபி சாப்பிடறேளா? எனக்குக் கலக்கப் போறேன்."

முரளி பேசாதிருந்தான். உமா அவனைத் தாண்டி நகர்ந்தாள். ஹால் ஃபேனை முழு வேகத்தில் சுழலவிட்டு சமையலறைக்குப் போனாள்.

காற்று, பத்து வயசுப் பெண்போல பின்விசிறி இறக்கைகளோடு கோத்துக் கொண்டு தட்டாமாலை ஆடிற்று. முரளீதரன் தலையைக் கலைத்தது.

"சுருதி சேர்க்கணும்னு விசிறியை ஒன்னுல போட்டிருக்காப் போலிருக்கு. அதான் இத்தனைப் புழுக்கம்."

"பாதி போறுமா? இல்லை... முழு டம்ளர் வேணுமா? நான் கொஞ்சம் ஸ்ட்ராங் காபியா கலப்பேன்." உள்ளேயிருந்து குரல் கேட்டது.

"பாதி போறும்."

"காபி மட்டும் எத்தனை சாப்பிட்டாலும் எனக்கு போரடிக்கறதேயில்லை. உங்களுக்கு?" வெளியே வந்தாள்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கறியா உமா?"

"இதென்ன கூத்து மூணு மணி வெயில்ல...? இன்னிக்கு ஆபீஸ் போகலையா?"

"இல்லை. லீவு போட்டுட்டேன்."

"இதை கேக்கறதுக்கா?"

"சரி, நான் வரேன்."

"ஏன்?"



"இதைவிட எழுந்து போடா வெளியேன்னு சொல்லியிருக்கலாம்."

"இந்த வீட்ல ஒரு நாளும் ஒருத்தரும் 'வாய்த்தெறந்து' உங்களை அப்படி சொல்லமாட்டா."

"சொல்லும்படியா நான் நடந்துண்டதில்லை."

"வாஸ்தவம்."

"இன்னிக்கு என் நடவடிக்கை பிடிக்காம போயிருக்கலாம்."

"யார் சொன்னா?"

"பருப்பு இருக்கான்னு கேட்டா அரிசி இருக்குன்னு சொன்னா என்ன அர்த்தம்? இடத்தைக் காலி பண்ணுடா முண்டம்னுதானே."

"ச்சே... எதுக்குக் கெட்ட வார்த்தை... காபி ஆறுது."

"என்னைக் கல்யாணம்...?"

"நீங்க என் தங்கை சந்திராவை லவ் பண்ணலை?"

"எப்படி பண்ணுவேன்? என்ன கேள்வி இது? சந்திராவை லவ் பண்ணிட்டு உங்கிட்ட வந்து கல்யாணம் பண்ணிக்கோன்னு... சந்திரா எங்கே... நான் எங்கே... எப்படி கேக்க முடியும்? அவ அழகு... படிப்பு... சாதுர்யம் ஊர் முழுக்கக் கொடி கட்டிப் பறக்கற அவ கெட்டிக்காரத்தனம். லவ் யூன்னு நான் என்னமா கேக்க முடியும்?"

"ஏன் கேட்டா என்ன... என்ன குறைச்சல் உங்களுக்கு?"

"ஒரு கால் குறைச்சல். வலது முழங்கால் கீழ் மரக்கால கட்டிண்டு நடக்கிற ஜனம். நொண்டி முடம். சபோதி. விந்தி விந்தி நடக்கறதைப் புதுசா பாக்கறவன் கூட உடனே கண்டு பிடிச்சுடுவான். சாருக்கு மரக்காலான்னு கேட்ருவான். நான் போய் சந்திராகிட்ட..." முரளிதரனுக்கு தொண்டை அடைத்தது.

"ஸோ..." உமா சுவரில் சாய்ந்தபடி கைகளை மார்புக்குக் குறுக்கக் கட்டிக் கொண்டாள். விட்டம் பார்த்தாள்.

"ஸோ... நான் சந்திராவைவிட அழகு கம்மி. படிப்பு குறைச்சல், சாமர்த்தியம் போதாது. ஊர் மெச்சற கெட்டிக்காரத்தனம் இல்லை. ஆவரேஜ். பிலோ ஆவரேஜ். அதனால சரி கேட்டுப் பார்க்கலாமேன்னு கேட்டேள் இல்லையா?"

முரளி தவித்தான். கைக்குட்டையை வலது உள்ளங்கையில் அழுத்தி கசக்கினான். விரித்தான். உதறி முகத்தை மறுபடி துடைத்துக் கொண்டான்.

"யெஸ். நீ சொல்றது கரெக்ட் அதுதான். அதனாலதான் என் போக்கியதைக்கு நீகூட ஜாஸ்திதான். இந்த ஆசைகூட என் வரைல பேராசைதான். என் கல்யாணத்தை நான்தான் பாத்துக்கணும். எனக்கு யாரும் போய் பெண் தேட மாட்டாங்க. தேடுன்னு நான் கேக்கவும் முடியாது. கேட்டு யாரையும் தர்மசங்கடத்தில் வைக்க முடியாது. வைக்க இஷ்டமில்லை. அதனால்தான் குடும்ப ஸ்நேகிதன்னு நுழைஞ்ச வீட்ல வாயத் தொறந்து வெட்கமில்லாம கேக்கறேன். எனக்கும் கல்யாணம் பண்ணிக்கணும். பொண்டாட்டியோட வெளில வாசல்ல போகணும்னு ஆசை இருக்கு. என் ஆசைக்கு ஏத்தபடியா என் தகுதிக்குத் தகுந்த பொண்ணா நான் பாக்கறேன். நீ உன்னைப் பத்தி சொல்றதும் கரெக்ட். நீ அத்தனை அழகில்லை. படிப்பு பி.யூ.சி. வெளிவாசல்ல புகுந்து வானத்தை வில்லா வளைச்சு, மணலைக் கயிறா திரிச்சு எதுவும் உனக்கு முடியாது. சமைப்பே, சாதம் போடுவே. பாட்டுப் பாடுவே. குடித்தனம் பண்ணுவே. இது போதும். இப்படி ஒரு பொண் போதும்னு நியமிச்சுதான் கேட்டேன். தப்புன்னு பட்டுருந்தா ஸாரி. வெரி ஸாரி. மறந்துடலாம். சுருதி மட்டும் சேர்த்துட்டு தம்பூரை சாத்தி வைச்ச மாதிரி. அதுவே போதும்னு பட்டா மாதிரி கேள்வி கேட்க அலெளவ் பண்ணதோட நிறுத்திக்கிறேன். பாட்டா சங்கீதமா அமிர்த வர்ஷிணியா பொழியாமலே போதும் போய்ட்டுவான்னு அனுப்பிடலாம்."

"இதென்ன கோபம்?"

"கோபமில்லை... உமா."

"பிறகு?"

"வேதனை."

"ப்ச்ச. இப்படி தாழ்த்திக்கறது தான் வேதனை. கேட்டதுல என்ன தப்பு?"

"கேட்டது சரிங்கறியா?"

"நிச்சயமா சரி. யார்வேணா கேட்கலாம். வார்த்தை தானே. கையைப் பிடிச்சா இழுத்தேள்... குய்யோ முறையோன்னு கத்தறதுக்கு. கல்யாணம் பண்ணிக்கறயான்னுதானே கேட்டேள். லவ் பண்றியா, லவ் பண்ணட்டுமான்னு



கேக்கலையே."

"கேள்விக்கு இதுவரைக்கும் பதில் வரலையே?"

"கேள்வி சரியா இல்லை. அதனால விவரமா கேட்டேன். சொல்லிட்டேன்."

"என்ன சொன்னேள்?"

"நான் அழகில்லை. எனக்கு படிப்பில்லை. சமர்த்தும் போறாதுன்னு."

"அது... அது... அது வந்து சந்திராவை கம்பேர் பண்றபோது."

"கேட்ட கேள்விக்கு நிஜம் சொன்னது எனக்குப் பிடிச்சிருந்தது. ச்சீ. நீ சந்திராவை விட அழகு. அவ ஒரு மாதிரி ப்யூட்டி. நீ ஒரு மாதிரி ப்யூட்டின்னு ஆரம்பிச்சிருக்கலாம். சரி இது புத்தி சொல்றதல். ஆள் மயக்கறதுக்கு ரீல் விடறான்னு ஒதுக்கியிருப்பேன். நீ எல்லா இடத்துலயும் சுமார்தான் எனக்கு நீ போறும்னு சொன்னேள பாருங்கோ..."

முரளி விழித்தான். அசையாது அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஐ லவ் யூ முரளி... ஹானஸ்டிதான் முக்கியம் மனுஷாளுக்கு. கல்யாணத்தை யாராவது பொய்ல ஆரம்பிப்பாளா? பொய்ல ஆரம்பிச்சா உருப்படுமா? நிஜத்தை சொல்லிடணும் முரளி. நிஜத்தை ஒத்துக்க முதல்ல தெரிஞ்சுக்கணும். எனக்கு ஒரு கால் இல்லை. மரத்துல கால பண்ணிவச்சுண்டு நடக்கறேன். எனக்குப் பொண் கிடைக்கறது கஷ்டம். இந்த நிஜம் மட்டும் போறாது. எனக்கு இந்த சுமார் ரகம் போறும்னு வாய் திறந்து சொன்ன க்ருயல் நிஜம்தான் உசத்தி. நாளைக்கு என்டா இவளைப் பண்ணின்டோம்னு உங்களுக்கு வருத்தமே வரக் கூடாது. இது ரொம்ப முக்கியம்."

"வராது உமா."

"தேங்க் யூ முரளி. ஆனா எனக்கு நீங்ககூட ஜாஸ்திதான். இதுவும் நிஜம்."

"ரீல் விடறு."

"நெவர், நெவர் இன் மை லைஃப். என் போக்கியதை எனக்குத் தெரியும். நாலு பேர் என்னையும் பொண் பாத்துட்டுப் போயிருக்கா. சாமஜ வரகமனா சினிமால வேற

மாதிரி பாடினானென்று சந்தேகம் கேட்டுட்டுப் போய்ட்டான். எனக்கு அவன் பொண் பார்க்க வந்தவன்கிறது மறந்துபோய் வேற எப்படி சாமஜ வரகமனா பாட முடியும்கற கேள்வியே முக்கியமாயிடுத்து. இதுக்கு என்ன அர்த்தம்? அவனுக்கும் என்னைப் பிடிக்கலை. எனக்கும் அவனைப் பிடிக்கலை. நீட்டின வெத்தலைக் கவுளியிலிருந்து வெறும் ஒத்தக்காம்பு கிள்ளிப் போட்டுக்கற மாதிரி அப்படி வெத்தலைக்காம்பா யாருக்கும் போய் வாழ்க்கைப்படலாமா?"

"அப்பா... என் கேள்விக்கு இன்னும் நேர் பதில்..."

"நான் ரெடி. நீங்க உங்கப்பா கிட்ட சொல்லலாம். அழைச்சிண்டு வரலாம். நான் பார்க்கலாம். விவகாரம் பேசலாம். நம்ம மாதிரி ஆட்களுக்கெல்லாம் ஐ லவ் யூன்னு சொன்னா பொறலை பாத்தேளா. எத்தனை சினிமா டிராமா வந்தாலும் நமக்குக் கல்யாணம், குடித்தனம் முக்கியம். லவ் வெல்லாம் அப்புறம்தான்."

முரளி கண்களை மூடிக் கொண்டான். தேன் ஆடும் முல்லை நெஞ்சில் என்னவோ... முரளி மனசுள் ஒரு பெண் கூந்தல் பறக்க சீராய் ஓடினாள். பெரிய தோட்டம் வழியே புல்மேடு ஏறி விடிகாலைப் பொழுதில். குளிர்காற்றைக் கிழித்தபடி புன்னகையோடு. தெளிவோடு சீராய், வெகு சீராய் ஒரு பெண் ஓடினாள்.

டக் டக் டக் டக். பிள்ளையாய் முரளியின் இருதயம் துடித்துக் கொண்டிருந்தது. காது லொட்டம் குறைந்து உடல் முழுவதும் ஒரு குளிர்பரவிற்று. கடவுளே உனக்கு வந்தனம். முரளி நிம்மதியாய் உள்ளே கை கூப்பினான்.

தேனாடும் முல்லை... நெஞ்சில் என்னவோ...

முரளி வேகமாய் நடந்தான். வலது பக்க மரக்கால் தரை தொடும் போதெல்லாம் ஏற்பட்ட பாட்டுக்குத் தாளமாகும் வேகத்தில் நடந்தான். வீட்டு வாசலில் அப்பா உட்கார்ந்து கொண்டிருந்தார். முரளிக்கு அவரை நமஸ்கரிக்க வேண்டும் போலிருந்தது. உள்ளே ஒரு சந்தோஷம் மிதந்தது.

"அப்பா என்ன வெய்யில்..." கர்ச்சீப்பால் முகம் துடைத்தபடி அவருக்கு அருகே உட்கார்ந்தான்.

அடுத்தபடி என்ன செய்வது என்று தெரியாமல் முழிக்கும்போது வெய்யில், மழை, இரவு, பகல் என்று ஏதாவது பேச நேரிட்டு விடுகிறது. ஆனால், இப்படி ஏதாவது பேசுவதுகூட சந்தோஷமாய்த்தான் இருக்கிறது.



# 2

அவனைப் பார்த்ததும் அப்பா நிமிர்ந்து உட்கார்ந்தார். திண்ணையைத் தாண்டி ரேழி. ரேழியைக் கம்பிகள் போட்டு காபந்து செய்யப்பட்டிருந்தது. வாசற் கம்பிக் கதவை தாள்போட்டு விட்டு பெண்டுகள்கூட ரேழியில் உட்கார்ந்து கொள்ளலாம். தெருவை பகல் பூராவும் வேடிக்கை பார்க்கலாம்.

பெண்டுகள் மட்டுமில்லை. அப்பாவும் அப்படித்தான். வாசலில் உட்கார்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருப்பார். கையில் எப்பொழுதும் திவ்யப்ரபந்தம் இருக்கும். அப்பாவுக்கு நாலாயிரம் பாட்டும் மனப்பாடம். பெரிய திருமடல் படிக்கிறபோது கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாய் வழியும். தன்னைப் பெண்ணாய்ப் பாவித்து விஷ்ணுவை புருஷனாய் வரித்து மடல் ஏறி என்னை ஆட்கொள் என்று அடம் பிடித்து அழுது புலம்பி. அப்பாவுக்கு சோறே வேண்டாம் நாலாயிரம் போதும்.

தடித்த மூக்குக் கண்ணாடி. பின்பக்கம் வெள்ளியாய் சிறிய குடுமி. நெற்றியில் ஒற்றைத் திருமண். கைபனியன். மல்வேட்டி. வற்றலாய் உடம்பு. எழுபது வயதுக்கு எந்த அனுஷ்டானமும் இல்லை. கூட்டமில்லை என்றால் மட்டும் கோவிலுக்குப் போவார். விறுவிறுவென்று இரண்டு சுற்று சுற்றிவிட்டு வீடு வந்து விடுவார்.

"ஸ்வாமி இங்கே இருக்கார்." குறுகிய மார்பை மெல்லிய கைகளால் தட்டிக் காட்டுவார். "சுவிட்ச் போட்ட லைட் எரியற மாதிரி வெளிச்சம் நெஞ்சுல இருக்கு. பூஜை எதுக்கு... எது சுவிட்ச்னு கேக்கறியா? இது... இந்த நாலாயிரம் சுவிட்ச். இதுக்கப்புறம் புஸ்தகமேயில்லை. இதுவரை படிச்சதெல்லாம் குப்பை."

முரளிதான் நிமிர்ந்து - என்று வீட்டுப் பொறுப்பை ஏற்றானோ அன்றே அப்பா திண்ணையில் உட்கார்ந்து விட்டார். "நான் ரெண்டு விஷயம் சொல்றேன். கேட்டுக்கோ முரளி." அப்பா ஒன்று என்று சொல்வதில்லை. சகலமும் ஒன்று என்பது அத்வைதம். த்வைதம் இரண்டாய் நிற்பது. அப்பா தீவிர வைஷ்ணவர். த்வைதக்காரர். ஆத்மா, பரமாத்மா என்று இரண்டாக விஷயம் உள்ளது என்று நம்புபவர். பேச்சில்கூட அவர் ஒரு விஷயம் என்று

சொல்வதில்லை. "நான் இரண்டு விஷயம் சொல்றேன் கேட்டுக்கோ முரளி. இனிமே நீ குதிரை ஓட்டு. நான் சாஞ்சுக்கறேன். உனக்கு எப்படி ஓட்ட முடியறதுன்னு ஒதுங்கி நின்னு பாக்கறேன். நீ ஓட்டப் பழகணும். நீ சரியா ஓட்டறயான்னு நானும் பாக்கணும். இந்தா சாவி. இது வெட்டுறா வரவு செலவு கணக்கு இனிமே உன் பொறுப்பு."

அப்பா அதற்குப் பிறகு திண்ணையை விட்டு எந்தப் பிரச்சினைக்கும் உள்ளே வருவதில்லை.

முரளி திண்ணையின் விளிம்பில் உட்கார்ந்ததும் அப்பா டேபிள் ஃபேனை அவன் பக்கம் திருப்பினார்.

"உள்ளே வெயில் தெரியலை. வெளியே போயிட்டு வந்தா குப்புனுதான் போயிடும். யாரு உள்ள... குடிக்க ஜலம் கொண்டு வா."

அம்மா சொம்பில் ஜலம் எடுத்து வந்தாள். அவன் வைரபேசரி ஒருமுறை சிரித்தது. முதன் முதலில் பெரிய தொகையாய் ஒரு வருமானம் வந்தபோது உனக்கென்ன வேணும் என்று அவளைக் கேட்டான். அம்மா தயங்காமல் வைரபேசரி என்றாள். எத்தனை வயசுக் கனவோ. பெண்களின் நகை ஆசைக்கு வயசேயில்லையோ என்னவோ...

"என்னப்பா... நாலாயிரம் படிச்சண்டிருக்கயா...?" முரளிக்கு ஏதாவது பேச வேண்டும். மழை வெய்யில் போதவில்லை. இது தாண்டி ஏதாவது அரட்டையடிக்க வேண்டும்போல் இருந்தது.

"பெரியாழ்வார் திருப்பிவேனேன்டா. இன்னிக்குக் கார்த்தாலேந்து படிக்கிறேன். போறலை. ஒரு பாசுரம் கேளேன். தூரத்துல கிருஷ்ணர் வரார். காட்டுக்குப் போய் மாடு மேச்சு எல்லாத்தையும் ஓட்டிண்டு, எல்லாத்துக்கும் கடைசில வரார். யசோதை வாசலேர்ந்து எட்டிப் பாக்கறா. காதுல இரண்டு வகை பூக்கள். இடுப்புல புதுத்துணி, தலைல முண்டாசு. அவனைப் பாக்கறச்சியே சந்தோஷம் பொங்கறது. யசோதைக்கு அந்தப் பையன் யார் தெரியுமா...? அவனுக்கு அம்மா யார் தெரியுமா? வேற யாருமில்லை. நான்தான். இந்த யசோதாதான்னு பொங்கறது அவளுக்கு. வந்து பாருங்களேன் எம்புள்ளையன்னு கூவத் தோன்றது.

"சீலைக் குதம்பை ஒரு காது

ஒரு காது செந்நிறமேல்
தோன்றிப் பூ கோலப்பணைக்
கச்சும் கூறை உடையும்
குளிர்முத்தின் கோடாலமும்
காலிப் பின்னே
வருகின்ற கடல் வண்ணன்
வேடத்தை வந்து
காணீர்ஞாலத்துப்
புத்திரனைப் பெற்றார்
நங்கைமீர் நானே
மற்றாருமில்லை."

"மனுஷாளுக்குத் தன் குழந்தை மேல பாசம் இருக்கே. மகா பொல்லாதது. அதுவும் அந்தக் குழந்தை நல்லவனா - கெட்டிக்காரனா இருந்துட்டா வர உரிமை இருக்கே. ரொம்ப வேகம். அது இன்னொருத்தர் கொஞ்சினா பொறுக்காது. வேற யாரும் உரிமை கொண்டாடக் கூடாது. எல்லா மனுஷாளும் பொம்மனாட்டிதான்டா. எல்லா ஆம்பளையும் பாதிபொம்மனாட்டி."

"புரியலைப்பா."

"குழந்தைகள் மேல வச்சிருக்கற அன்பு... அதுகள் கஷ்டப்பட்டா வர வேதனை... அதுகள் சரியா வீடு திரும்பணுமேங்கற கவலை... நல்லபடியா வளரணுமேன்ற ஆதங்கம். இதெல்லாம் பெண் மனசு. இது ஆம்பளைக்கும் உண்டு. பொண்டாட்டி செத்தா அழாதவன் புள்ளை போனா கதறிடுவான். புள்ளை கஷ்டப்பட்டு நாலு காசு சம்பாதிக்க அலைஞ்சாக்கா அப்பனுக்கு அது கர்வமாவும் இருக்கும். ரொம்ப கஷ்டப்படறானேன்னு கவலையாவும் இருக்கும்."

"உதாரணமா...?"

"உதாரணம் என்ன... உதாரணம்? நானும் நீயும்தான் உதாரணம். வீட்டுக்கு வீடு வாசப்படி. இங்க நடக்கறதுதான் எங்கேயும் நடக்கும். லொட்டு லொட்டுன்னு காலை விந்தி விந்தி நடந்து வெளிய போற. ஓஞ்சுபோய் வர. மனசு கஷ்டமா இருக்கு. இவனை உக்கார வச்சு சோறு திங்கும்படியா சம்பாதிக்கலையா நான்னு கவலை வருது. சும்மா உக்காந்தா வேலைக்குப் போடான்னு தாந்துவேன். அது வேற விஷயம். அடுத்த பாட்டுப் பாரு. இதையே சொல்றது

"கன்னிநன் மாமதிற்சூழ்தரு
    பூம்பொழில் காவிரித்தென்னரங்கம்
மன்னிய சீர்மதுசூதனா கேசவா
    பாவியேன் வாழ்வுகந்து
உன்னையிளங்கன்று மேய்க்கச்
    சிறுகாலேயூட்டி யொருப்படுத்தேன்
என்னின் மனம் வலியாளொரு
    பெண்ணில்லை என்குட்டனே முத்தம் தா."

"உன்னைப் போய நாள் விடி காலைல எழுப்பி காட்டுக்கு அனுப்பி மாடு மேய்க்கச் சொல்றேனே.. என்னைவிட கேடு கெட்டவ எவளாவது உண்டா... என்னை மன்னிச்சுடு கிருஷ்ணாங்கறா யசோதை. மன்னிப்பு நேரில கேக்கல பெத்தவளோன்னோ... நேரடியா மன்னிப்பு கேக்க வெக்கமாயிருக்கு. என் குட்டனே முத்தம் தான்றா-றா. இதைப் படிக்கறச்சயே அழுகை வந்துடுறது இது அம்மா மனசு. இது ஆம்பளைக்கும் உண்டு. அதான் சொல்றேன் ஆம்பளைங்கறவன் பாதி பொம்பளைடா."

"இந்த இரக்கம் இல்லாதவன்."

"மனுஷனாவே சேர்த்தியில்லை."

"அதிகமாப் படறது நீ பேசறது."

"மகா கெட்டவனுக்கும் தன் குழந்தைங்கறது ஒரு பாசம் தரும். இந்தப் பாசம் வேண்டாம்னு அழுக்க ஒன்னு ஞானம் வேணும் இல்லை.. பேய்த்தனம் வேணும். ஞானிக்கு உலகம் மொத்தமும் குழந்தை. பைசாசத்துக்குத்தான் எதுவுமே இல்லை."

"பாசுரம் படிச்சுப் படிச்சு ரொம்ப குழைஞ்சு போயிடறேப்பா."

"போறாதுடா குழைஞ்சது போறாது மனசு களிமண்ணா குழையணும்தான் இந்த நாலாயிரம் எழுதியிருக்கா. தும்பு தூசு இல்லாத மிருதுவான மண்ணா இருந்தா பானை வனைய முடியும். நல்ல களிமண்ல ஒரு சுகந்தம் உண்டு தெரியுமோ மனசு களிமண்ணா இருந்தா உடம்பு முழுக்க மணக்கும்.

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாகுங்கிறார் பூதத்தாழ்வார். அன்பு அகல் விளக்கு மாதிரி. படிப்பு குழைஞ்சு அனுபவம் கட்டு அகலா மாறணும். நல்லது செய்யணும்கற ஆர்வம் நெய். புத்தி இடுதிரி. ஞானம்தான



தெருப்பு" ஞானம் மனுஷனைத் தொடணும்னா இத்தனை வேண்டிருக்கு."

"அப்பா உன்கிட்ட கொஞ்சம் பேச வேண்டியிருக்கு."

"பேசேன்."

"டிபனை சாப்பிட்டுப் பேசேண்டா" உள்ளேயிருந்து அம்மாவின் குரல் கேட்டது.

"இதோ வரேம்மா" முரளி பதில் குரல் கொடுத்தான்.

"ஆறிப்போறது.. இதோ வரேன்னா என்ன அர்த்தம். விளக்கேத்தினப்புறம் உங்கப்பா சாப்பிட மாட்டார் சட்டுன்னு வா. இந்த டிபனுக்கு நீ வாட்டும், நீ வாட்டும்னு நாலு தடவை சொல்லியாச்சு. அவர் காலைல சாப்பிட்டது. கவாங் கவாஞ்னும் வா எழுந்து."

"அப்பா. உன்ன போலவமா எடுத்துண்டுவரச் சொல்லட்டுமா...? அம்மோவ்... இங்க எடுத்துண்டு வா. பேசிண்டே சாப்பிடறோம்."

அப்பா சிரித்தார்.

"என்னப்பா.. எதுக்கு சிரிக்கறே...?"

"இன்னொரு பெரியாழ்வார் பாட்டு ஞாபகம் வந்தது. இன்னிக்கு உங்கம்மா சொன்ன அதே விஷயம்... அவர் பாட்டிலேயும் இருக்கு. யசோதை பேசற மாதிரி பாட்டு."

"காடுகள் ஊடு போய் கன்றுகள்
    மேய்த்து மறிமோடி
கார்க்கோடல் பூச்சூடி வருகின்ற
    தாமோதரா கற்றுத்துளிகாண்
உன் உடம்பு பேடை மயிற்சாயல்
    பின்னை மணாளா
நீராட்டம் அமைத்து வைத்தேன்.
    ஆடி அமுது செய்.
அப்பனும் உண்டிலன் உன்னோடே
    உண்பான்."

"கிருஷ்ணா நீ மாடு மேச்சுட்டு வந்துருக்கே.. உடம்பு முழுக்க தூசா இருக்கு. வெந்நீர் ரெடி. போய் குளிச்சுட்டு சாப்பிட வா. உங்கப்பா கூட இன்னும் சாப்பிடல உன்னோடே உண்பார்ங்கறா. பெரியாழ்வாரோட காலம் கிறிஸ்துவுக்கு முன் 3056 வருஷம். அதாவது இது அஞ்சாயிர வருஷத்துக்கு முன்ன எழுதின பாட்டு. அஞ்சாயிர வருஷம். அதே தாண்டா

திருப்பித் திருப்பியும் பிள்ளை சாப்பிடாத அப்பா சாப்பிட மாட்டான். அப்பா சாப்பிடாத பிள்ளை சாப்பிட மாட்டான்.

அம்மா பூரியும் பயத்தம் பருப்புக் கூட்டும் கொண்டு வந்து வைத்தாள். அப்பா திருவண்ணாமலை என்று ஒரு விள்ளல் போட்டுக் கொண்டார். "என்னவோ பேசணும்னியே...?"

"ஒண்ணுமில்லை."

"சொல்லு."

"நம்ம கம்பெனி பேலன்ஸ்ஷீட் பாத்தியோ?"

"மேலோட்டமா பாத்தேன்."

"ஒன்னரை லட்சம் நெட் பிராஃபிட்."

"திருப்பி சரக்கு வாங்கணுமே. ஏழு எட்டு ரூபா வேணுமே."

"வாங்கறதுக்கு தனியே எடுத்து வச்ச மிச்சம் ஒண்ணரை."

"எடுத்து வச்சது என்ன. கடனைத் திருப்பிக் கட்டின பாங்குல."

"திருப்பிக் கேக்கப் போறேன்."

"தருவானா...?"

"நாலு வருஷமா லாபம் காமிச்சிருக்கேன்... ஏன் மாட்டேங்கப் போறான்."

"சொல்லு."

"ஏழு வருஷம் கூட தான் வியாபாரம் ஆகுமே தவிர குறையாது."

"வாஸ்தவம். எல்லா துறையும் எல்லாத்துக்கும் மாத்தினா சாப்பிட ஆரம்பிச்சுடுத்து. விக்கறவன்பாடு யோகம். சொல்லு."

"பால்பவுடர் ஏஜன்ஸி வேற கேக்கப் போறேன்."

"ம்ம்ம்."

"இன்டேன் காஸ் டீலர்ஷிப் கேட்டிருக்கேன்."

"ரிடையர்ட் மிலிட்டரி ஆள், மிலிட்டரி ஆபீஸர் விதவை மாதிரிதானே டீலர்ஷிப் தரான்."

"அப்படி யாரும் கேக்கலைன்னா ஹாண்டிகேப் ஆளுக்கும் தராங்க."



"காஸிலேன்னு கேக்கப் போறியா?"

"ஆமா."

"செய். நான் என்ன செய்யணும்?"

"இதெல்லாம் கவனிக்கக எனக்கு சரியான ஆள் வேணும்."

"என்னால முடியலையா?"

"நான் உன்னை கூப்பிடலை."

"ம்ம்."

"நம்பிக்கையா வியாபாரம் தெரிஞ்ச நம்ம மனுஷனா வேணும். வியாபாரத்துல யாரையும் நம்ப முடியாது. பெரியவா பாட்டனாதி இல்லே எனக்கு. பின்னால ஏதாவது மனைவியாய் வரணும் பிடிச்ச - பிள்ளைக்கு இப்படி ஆள் வேணும்."

"யாரையோ பாத்திருக்கியோ முரளி."

முரளி தலை கவிழ்ந்தான்.

"மனசுல இருக்கறதைச் சொல்லு."

"போஸ்ட்மாஸ்டர் பொண்ணைக் கேட்டேன். சரின்னுட்டா."

"யாரு சின்னவளா...?"

"இல்லை. பெரியவ உமா."

"பாட்டெல்லாம் படிப்பா."

"ஆமாம்."

"சாதுவானவருக்கும் பாட்டனம்பாளே அந்த மாதிரியா?"

"ஆமாம்."

"போஸ்ட்மாஸ்டர் என்ன சொன்னார்?"

"அவரைக் கேக்கலை. அந்தப் பொண் சரின்னுட்டா. உன்னைக் கூட்டிண்டு வந்து எங்கப்பாகிட்ட பேசச்சொன்னா."

"எப்ப கேட்ட...?"

"இன்னிக்குத்தான் சித்த முன்னாடி."

"முரளி."

"அப்பா."

"உனக்கு நான் வேணுங்கற உதவி செஞ்சுருக்கேன் இல்லையா?"

"நெறைய செஞ்சிருக்கேப்பா. பதினாறு வயசுல பூனா கூட்டிண்டு போய் மாக்காலு வச்சு, படிக்க வச்சு சி.ஏ. பாஸ் பண்ணவச்சி இருபத்திநாலு வயசுல க்ளாஸ்கோ கம்பெனில ஸ்காலர்ஷிப் வாங்கிக் குடுத்து- நிறைய செஞ்சுருக்கேப்பா."

"இன்னும் என்ன வேணா செய்வேன். இன்டெக்கால் ஸ்காலர்ஷிப்புக்கு அலையறேன். வியாபாரம் விருத்தி பண்ணு கூட மாட நிக்கறேன். இன்னும் நாலு ஸ்காலர்ஷிப்புக்குப் போய் கெஞ்சறேன்- ஆனா..."

"அப்பா."

"உனக்குப் போய் பொண் கேக்க மட்டும் என்னை அனுப்பாதடா. என்னால அது முடியாது. எம் புள்ளைக்கு வலது கால் இல்லை. உங்கப் பொண்ணை அவனுக்குக் குடுங்கோன்னு நான் யாரையும் கேக்க முடியாது."

"ஏப்பா..."

"என் மனசு ஒப்பலை."

முரளிதரன் வெளியேறினான். அப்பா கண்களை மூடிக் கொண்டார். வாய்விட்டுப் பாடினார்.

"தின்னார்வெண் சங்குடையாய்
திருநாள் திருவோணமின்றேழுநாள்
முன்பண்ணோர் மொழியாரைக் கூவி
முளையட்டிப் பல்லாண்டு கூறுவித்தேன்
கண்ணாலஞ் செய்யக் கறியும்
கலத்ததரிசியுமாக்கி வைத்தேன்
கண்ணா நீ நாளைத் தொட்டுக்
கன்றின்பின் போகேல் கோலஞ் செய்திங்கேயிரு."

கடைசிவரி பாடுகிறபோது அழுதார்.

## 3

"பரீட்சை முடிஞ்சுட்டா படிக்கப்படாதுன்னு உண்டா? எஸ்.எஸ்.எல்.சி.க்கப்புறம் எல்லாம் முடிஞ்சு போச்சா? விளக்கேத்தினா ஒரு பையனுக்கு உக்காந்து புஸ்தகம் படிக்கணும்னு தோண வேண்டாம்- காத்தால எட்டு மணிக்கு ஆரம்பிச்ச பேட்மிட்டன்- நிலாவா காயறது வெளில..?"



அம்மா வாசற்படியை மறித்துக் கொண்டு நின்றாள்.

"இப்ப வீடுதான்...? எதுக்கு இப்போ நீபோன்னு எழவெடுக்கற..?"

"குட்டைக் காய்ச்சி வாய்லயே இழுப்பேன். படவா. சந்தி வேளைல என்ன பேச்சு இது..?"

"வழி விடு நான் குளிக்கப் போறேன்."

"முரளி இங்க வா..." அம்மாவை முறைத்துக் கொண்டிருந்த முரளி திரும்பி அப்பாவைப் பார்த்தான். "இங்க வாடா- நான் சொல்றதக் கேட்டுட்டுப் போ. பசியாவை அழைஞ்சு நீ இப்படி ஃபேனுக்கு நேர உக்கார்." அப்பாவுக்கு வசியம் பண்ணத் தெரியும். பேச்சால்- செய்கையால்... எவ்வளவு முறைப்பையும் கரைத்து அசடு வழியும்படி செய்யத் தெரியும்.

"எஸ்.எஸ்.எல்.சி.க்கப்புறம் என்ன பண்ணப் போறே?"

"காமர்ஸ் எடுத்துக்கப் போறேன். அதுக்குத்தான் ஸ்கோப் ஜாஸ்தி."

"காமர்ஸ் உனக்குக் கிடைக்குமா? நீ ஜாதில பிராமணன். ஆனா உனக்கு நாலு பாசுரம் தெரியாது. அது வேற விஷயம். இருந்தாலும் நீ பிராமணன்."

"நைன்டி பர்சன்ட் கிடைக்கும்பா."

"நைன்டி எல்லாரும் வாங்கறான். நைன்டிஃபைவ் நிச்சயமா..."

"தெரியலைப்பா."

"காமர்ஸ் கிடைச்சா என்ன செய்யப் போற..?"

"சி.ஏ. படிக்கப் போறேன்பா. சார்ட்டட் அகௌண்டென்ட் ஆயிடறேன்."

"கிடைக்கலேன்னா..."

"காஸ்டிங் படிப்பேம்பா..."

"அதுக்கும் ரொம்பப் போட்டி. அதுவும் கிடைக்கலேன்னா?"

"பேசாம இன்ஸ்டியூட்ல சேர்ந்து அகௌண்டென்ஸி, ஷார்ட் ஹேண்ட்... எனக்கு காமர்ஸ் கிடைக்கும்பா."

"கிடைக்கவேன்னு வச்சுக்கோ. நீ ஜாதில பிராமணன். ஆனா உனக்கு நாலு பாசுரம் தெரியாது. அது வேற விஷயம்

குறைந்தபட்சம் ஸ்டெனோகிராஃபரா போலாம். அதுவும் சரியா உனக்கு வரலே."

"கல்யாணம் கார்த்தில சமையலுக்கு பீன்ஸ் நறுக்கற வேலைதான்..." அம்மா நொடித்தாள்.

முரளிக்கு எதிர்காலம் கண்முன்னே சுழன்று ஆடியது.

"பயப்படாதேடா... பீன்ஸ் நறுக்கறவனுக்கும் நாலு வேளை சாப்பாடு போட்டு இருபத்தைஞ்சு ரூபா..." - அப்பா ஆறுதலாய் பேசினார்.

"வெறும் சாப்பாடா... கல்யாணச் சாப்பாடு..." அம்மா எக்களித்தாள்.

"ரெண்டு பேரும் கூட்டா சேர்ந்துண்டு வெறுப்பேத்தறேளா..." முரளிக்கு உதடு துடித்தது. "எனக்கு எய்ட்டி பர்செண்ட் வரும்."

"நைன்ட்டிக்கு காமர்ஸ் கிடைக்காது."

"என்ன பண்ணச் சொல்ற என்னை...?" முரளி கத்தினான்.

"சாயந்தரமாச்சுன்னா கைகால் அலம்பிட்டு நாலு ஸ்லோகம் படி. பாசுரம் மனப்பாடம் பண்ணு." அம்மா முறைத்தாள். "அப்புறமா இங்கிலீஷ் இம்ப்ரூவ் பண்ணிக்க வாய்விட்டு ஹிண்டு பேப்பர் படி." அப்பா புத்திமதி சொன்னார்.

பிள்ளை பேட்மிட்டன் ராக்கெட்டை வேதனையுடன் வீசிவிட்டு கைகால் அலம்பிற்று.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று பாசுரம் மனனம் ஆரம்பித்தது. ஹிண்டு எடிட்டோரியல் எடுத்து வைத்துக் கொண்டு வலது பக்கம் டிக்ஷனரியோடு வாசலில் உட்கார்ந்து உரக்கப் படித்தது.

"இப்போ எவ்வளோ லக்ஷணமா இருக்கு." அம்மா காபியைக் கொண்டு வந்து வராண்டாவில் வைத்தாள்.

"ச்சீ போ... நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்" இரண்டும் கெட்டான் பிள்ளை தூக்கியெறிந்து பேசிற்று.

"பெரியவாளை இப்படித்தான் அவமரியாதையா பேசறதா?"

"பேசுவேன்."

"கால் ஆட்டிண்டு என்ன படிப்பு. காலாட்டறதை முதல்ல நிறுத்து."



"முடியாது."

"என்னடாது எதுக்கெடுத்தாலும் பிடிவாதம்?"

"என் ஸ்நேகிதா எல்லாம் பார்க்ல உட்கார்ந்து பேசிண்டிருக்கா. நான் மட்டும் திண்ணையில உக்காந்து எழவு கொட்டிண்டிருக்கணுமாக்கும்." ஆதங்கத்தில் இரைந்தது.

நிதானமாய் கேட்டிருந்தால் அம்மா பார்க் போக அனுமதித்திருப்பாள். கெட்ட வார்த்தை அவளைக் கோபமுறச் செய்தது. பட்டென்று வாயில் அடித்தாள். "நகர்ந்தே. கொன்னுடுவேன்."

"சீச்சீ. அவனை விடு வைதேகி. கொஞ்சநேரம் படிச்சுட்டு அப்புறம் பார்க் போகலாம்..." அப்பா இடையில் நுழைந்து சமாதானப்படுத்தினார்.

கொஞ்சநேரம் என்பது என்ன. இமைக்கும் நேரமா. இடி இடித்து இறங்கும் நேரமா? இருபது நிமிடமா... இரண்டு மணியா? இல்லை வாழ்க்கை முழுவதுமே படித்துக் கொண்டிருக்க வேண்டுமா?

பிள்ளை அம்மாவின்மீது கோபம் காட்ட இன்னும் காலை வேகமாய் ஆட்டினான் மனசு ஒட்டாமல் உரக்கப் படித்தான்.

எதிரே தெருவில் வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. முரளி வீடு தெரு திருப்பத்தில், முதல் கட்டிடம். மார்க்கட் சந்தின் நெரிசலை விரும்பாத வாகனங்கள் முரளி வீட்டுத் தெருவின் வழியே போகும். தெரு திருப்பத்தில் தார் சாலையில் மேடுகட்டி வேகத்தடை போட்டிருந்தார்கள். எல்லா வாகனங்களும் வேகத்தை மீறி மீறி தடையைத் தரைமட்டமாக்கியிருந்தன. பாதசாரி மட்டும் தடுக்கி விழும்படியாய் தெருவின் இரண்டு பக்கமும் தடை உடைபடாமல் இருந்தது.

முரளி கடைசி பாரா படிக்கும்போது பெரிய லாரி திரும்பிற்று. சொன்னபடி இயங்காத ஸ்டியரிங் கிட்டத்தட்ட நடை பாதையை உரசும் அளவு திரும்பி, உயர்ந்திருந்த தடையில் ஏறி குலுங்கி குலுக்கல் தாளாமல் டிரைவர் கால் ஆக்ஸிலேட்டரில் அதிக மிதியலைக் கொடுக்க... எஞ்சின் சீறி இரண்டு தடவை ஸ்டியரிங் சுழன்றும் திரும்பாமல் நடை பாதையில் ஏறி முரளி வீட்டு சுவர் உடைந்து, கம்பிகள் நொறுங்கி. கடப்பக்கல் திண்ணையில் கால் ஆட்டிக் கொண்டிருந்த முரளியின் 'ஐயோ'வைக் கவனிக்காமல்

லாரியின் இரும்புப் பம்பர் முட்டியில மோதி அவனைப் பின்னுக்குத் தள்ளி - பம்பருக்கும் கட்டப்பக்கல்லுக்கும் இடையே கால் அழுந்தி நசுங்கி இரண்டு துண்டாக, திண்ணை பல துண்டுகளாய் சிதறி நொறுங்க மேலும் முன்னேறி சுவரை இடித்து நின்றது.

முரளி கல் குவியலில் நினைவற்றுக் கிடந்தான். மேற்கூரை மௌனமாய் சகலமும் பார்த்துவிட்டு மெல்ல சரிந்து அவனையும் லாரியையும் மூடிக் கொண்டது.

இடது பக்கத் திண்ணைக்கும் அப்பாவுக்கும் ஒரு சிராய்ப்புகூட இல்லை. கூரை தூசு மட்டும் அப்பாவை அப்பி அடையாளம் தெரியாமல் செய்தது. கூரையைப் பிளந்து லாரியை இழுத்து பிள்ளையை யாரோ தோளில போட்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினபோது அப்பா நிலை கொள்ளாமல் கதறினார்.

"முரளி... முர... நீ படிக்க வேண்டாண்டா. நீ படிக்க வேண்டாண்டா. என் கண்ணே. இனிமே நீ படிக்க வேண்டாண்டா."

கொஞ்ச நேரம் என்பது என்ன.. இமைக்கும் நேரமா.. இடி இடித்துத் தரை தாக்கும் நேரமா.. இருபது நிமிடமா.. இரண்டு மணியா.. இல்லை வாழ்க்கை முழுவதுமா...?

இதற்குப் பிறகு அப்பா படிக்கச் சொல்வதேயில்லை. அரசு பொது மருத்துவமனைக்குத் துண்டான காலை ஈரத் துணியில் சுற்றி எடுத்துக் கொண்டு போனார்கள். டாக்டர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு "மார்ச்சுவரியில குடுத்துடுங்கோ. - புதைச்சுடுவா" என்று திருப்பிக் கொடுத்துவிட்டார். முரளியின் முழங்காலுக்கு மேல் இரண்டு அங்குலம் ஆபரேஷனில் கோடு போட்டு சுத்தமாய் வெட்டி நொறுங்கின எலும்புகளை அப்புறப்படுத்திவிட்டு சதையை தையல் போட்டார்.

நாலாவது நாள் முரளி முனகினான்.

ஐந்தாம் நாள் தலையசைத்தான்.

ஆறாம் நாள் கண் திறந்து மூடினான்.

ஏழாம் நாள் ஜ்வரத்தில் பேசினான்.

எட்டாவது நாள் முதுகு தூக்கி 'கால் வலிக்கறதுப்பா' என்றான்.

ஒன்பதாம் நாள் அவனுக்குத் தெரிந்து விட்டது.



பிள்ளை கதறியதை. ஆஸ்பத்திரி மொத்தமும் வாயில் துணியடைத்து அவன் அழுகையைப் பார்த்தது.

"நான் பேட்மிட்டன் விளையாட மாட்டேம்பா. நான் இனிமே ஒழுங்கா படிக்கறேம்பா. எய்ட்டி பைவ் நிச்சயம் வாங்கறேம்பா. யாரையும் எழவுன்னு சொல்ல மாட்டேம்பா. டாக்டர்கிட்ட சொல்லி கால் ஒட்ட வைப்பா. எப்படியாவது கால் ஒட்ட வைப்பா."

சில்லு ஒட்டுமோ.. அந்த மாயன் செய்த மண்பாண்டம் ஒட்டுமோ... விளிம்பு உடைந்த பானை மாதிரி முரளி முடமாய்க் கிடந்தான்.

"எப்படி கொண்டு வந்தா தெரியுமா? இந்தப் பையன் பொழைச்சது புனர்ஜன்மம். பெத்தவா புண்ணியம்." யாரோ வேடிக்கை பார்த்தவர்கள் சொன்னார்கள்.

அப்பா உடைந்தார். "என்னடா புண்ணியம் பண்ணியிருக்கேன். இப்படி உன்னைப் பார்க்க என்ன புண்ணியம் பண்ணியிருக்கேன்? மரக்கால் மரக்காலா வாசலல வந்து பிச்சை கேட்டவனுக்கு அரிசி போட்டிருக்கேனே... எம்புள்ளைக்கு மரக்கால் எலக்கணும்கறானே. சொல அரிசி எடுத்துண்டு வந்தா பாடம்னு கலத்துல கொண்டு வருவேனே மரக்கால் அரிசியை. ஸ்ரீசக்ரம் சொல்றவனுக்கு போடுவேனே.. வந்தவன் மேல்துண்டு கிழிஞ்சு அரிசி சிந்துமே. கிழிசலை எடுத்து உள்ள போடுன்னு சொல்வேனே.. எம்புள்ளையை முடமா பண்ணிடுத்தே என் புண்ணியம்."

"அவனைப் பொழைக்க வச்சதே அந்தானு நினைச்சக்கணும்" - டாக்டர் அழுகிற அப்பாவின் முதுகு தொட்டார்.

"அவன் பேட்மிட்டன் சாம்பியனாச்சே.."

"ஜோ லாட் பனிஞ்சதுக்குடுவே விளையாடலாம். அவனுக்கு தைரியம் குடுங்கோ."

"கட்டையை இடுக்கிண்டு நடக்கணுமே எம்புள்ளை.."

"அவசியமில்லை. ஜெய்ப்பூர் கிளாஸ்ல கால் பண்ண முடியும். பூனால செய்யறா.."

"மரக்கால் மரக்கால்தானே.."

"என்ன சார் குழந்தை மாதிரி.. அந்தப் பையனுக்கு நீங்க குடுக்கற உற்சாகம்தான் டானிக். நீங்களே அழுது அவன்

மனசைக் கஷ்டப்படுத்தக் கூடாது ப்ளீஸ்... சியர் அப்!"

இடிந்த வீட்டுக்கும் உடைந்த காலுக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி காம்பன்சேஷன் தர முன் வந்தது.

"கால் குடுத்துருவேளா... காசு எதுக்கு... வேணாம்."

"என்ன பைத்தியக்காரத்தனம். மரக்கால் சும்மா தர மாட்டான். காசு வேணும். உங்களுக்கு வேண்டாம். உங்கப் புள்ளைக்கு இனிமே காசு அவஸ்யம் வேணும். அவன் பேர்ல போட்டு வையுங்கோ. வாங்கிக்கங்கோ..." ஊர் நிதானப்படுத்திற்று.

ஒரு வருடம் படுக்கையில் படுத்துக் கிடந்தான். படுத்துக்கொண்டே 'ஹிண்டு' முழுவதையும் வேறு வழியின்றி திரும்பத் திரும்பப் படித்தான். வலி முற்றிலும் நின்று சுவர் பிடித்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே சுற்றினான். அறுவை சிகிச்சை செய்த இடம் தழும்பாகி, தழும்பும் கெட்டித் தட்டிப்போன பிறகு பூனா போனார்கள். ராணுவ வீரர்களுக்கு இழந்த உறுப்பு செய்து தரும் இடத்தில் அளவு எடுத்தார்கள்.

பதினைந்து நாள் காத்திருந்த பிறகு அவன் காலின் மாதிரி செய்து முழங்காலில் பொருத்தி நடக்கச் சொன்னார்கள். மிஞ்சிய தொடையில் பெல்ட் கட்டி இறுக்கி இரண்டு கம்பிகளுக்கு நடுவே நடக்கச் சொன்னபோது நரகம் எதுவென்று தெரிந்தது. ஒவ்வொரு அசைவுக்கும் தசை ஃபைபர் கிளாஸோடு உராய்ந்து ரணம் ஏற்படுத்தியது. நடக்க மறுத்து வலியில் அழுத முரளியை ஒரு மேஜர் முதுகில் அடித்தார்.

"ஜவான் நடப்பிக்கும் திங்களை... நடே... நட" சளீர் சளீரென்று பிரம்பில் அடி விழும். அடிக்கு பயந்து வேகமாய் நடக்க, தொடையிலிருந்து ரத்தம் கசியும். ரணத்தின் மேல் ரணம் பட்டு காயும். காய்ந்து காய்ந்து பெல்ட் இறுக்கின இடமெல்லாம் கட்டிப் போயிற்று. தோல் உரப்பாயிற்று.

முரளி தூங்கும்போது காலைக் கழற்றி தலைமாட்டில் வைத்துக் கொள்வான். காலையில் எழுந்து பேண்ட் மாதிரி மாட்டிக் கொள்வான்.

நாலு மாதத்தில் கால் வீசி நடக்க முடிந்தது. பேண்ட் போட்ட மரக்காலுக்கு ஒரு அளவும் உயிர் காலுக்கு ஒரு அளவுமாய் ஷூ வாங்கி மாட்டி தெருவில் இறங்கியபோது சந்தோஷமாய் இருந்தது. மாடி ஏறும் சூட்சுமம் பிடிபட்டது.



கால் தடுக்காமல் நடக்கத் தெரிந்து விட்டது. ஆட்டோ டாக்ஸியில் ஏறும்போது கொஞ்சம் அவஸ்தை. இடப்பக்கமாக உள்ளே நுழைந்து வலக்காலை கைகளால் தூக்கி உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். "உனக்கு கால் ஒட்ட வச்சுட்டாரா..." விவரம் தெரியாதவர்கள் வியந்து கேட்டார்கள்.

"காலேஜுல இது காட்டியே இடம் வாங்கிடுவே இல்ல..." விவரம் தெரிந்தவர்கள் ஆதங்கப்பட்டார்கள்.

"ஹாண்டி கேப்..."

முரளி அந்தப் பதக்கத்தை நெஞ்சில் பொருத்திக் கொண்டான்.

எந்த வேல் தைத்ததோ அதையே பிடுங்கி எடுத்துத் தன் ஆயுதமாக்கிக் கொண்டான்.

"ஹாண்டி கேப்க்கு ஹண்ட்டி பர்ஸண்ட் வேண்டாம் சார். செவன்டி போதும். உங்க பையனுக்கு நிச்சயம் காமர்ஸ் தரேன். காஸ்ட் இங்க முக்கியமே இல்லை. உங்க பையன் ஊனமுற்றவன். அதுதான் இனிமே அவன் ஜாதி."

இச்சொல் முதலில் வலித்தாலும் பிறகு மரத்துப் போயிற்று. தழும்பேறி தழும்பேறி கெட்டிப் பட்டது.

பேட்மிட்டன் கோர்ட் மட்டும் கொஞ்சம் ஏக்கம் தரும்.

அந்த ஏக்கத்தையும் தீர்க்க கல்லூரி நண்பர்கள் கிடைத்தார்கள்.

"வா மச்சி... எங்க டீம்ல வந்து ஆடு வா. சென்டர் எடுத்துக்க... நின்னு விளையாடலாம். ரொம்ப குனிய வேணாம்." வலது பக்கம் குனியாமல் ராக்கெட் மட்டும் தழைத்து வைத்துக் கொண்டு பேயாய் முரளி ப்ராக்டீஸ் செய்தான். அவன் டீம் இரண்டாவதாக வந்தபோது, அவன் குழுவினர் அவனைப் பரிசு வாங்க முன்னே தள்ளினார்கள்.

மெல்லிய விறைப்புடன் மேடையேறி அவன் ரன்னர் - அப் கோப்பையை வாங்கியபோது கல்லூரி முழுக்க எழுந்து நின்று கை தட்டியது. முதலாவதாய் வந்தவர்களை சகலரும் மறந்து போனார்கள். வலது காலில்லாத ஒருவன் பேட்மிட்டன் கேப்டன். அவன் குழு ரன்னர் - அப் பரிசுக் கோப்பையைக் கையில் வாங்கி, தலைக்கு மேல் உயர்த்தியபோது முரளியின் மனசுக்குள் ஒருவன் வாளை உருவி சபதம் செய்தான்.

ஜெயிப்பேன். ஜெயிப்பேன். இனி சகல இடங்களிலும் ஜெயிப்பேன்.

யுத்தம் என்பது எதிரியை வீழ்த்துவது அல்ல. தன் இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்வது... அதில் ஏற்படும் வலியைத் தாங்குவது உலகில் மிகப் பெரிய வலி அவமானம். அவமானம் என்று ஒன்றுமில்லை. அவமானம் மறுத்தவனுக்கு வலியுமில்லை. வலியற்ற நிம்மதிக்கு ஆசைப்படுவது மனித குணம். இந்த நிம்மதியின் பொருட்டே யுத்தம்.

## 4

ஆனால் ரன்னர்-அப் கோப்பையோ அடுத்த வருடம் கிடைத்த முதல் பரிசு சுழற்கோப்பையோ போதவில்லை.

பேட்மிட்டன் போதையாயிற்று. நாற்பது கிலோ மீட்டர் வேகத்தில் வரும் மஞ்சள் பந்தை சின்ன மணிக்கட்டு அசைவில் திசை திருப்புவதும் சர்வீஸ்களிலேயே ஸ்பின் கொடுப்பதும் எதிர்ப்பக்க ஆட்களை நாலு பக்கமும் அலைக்கழித்துவிட்டு ஆள் இல்லாத இடத்தில் ப்ளேஸ் பண்ணுவதும் நல்ல கேம் முடிந்து வியர்வை கொப்பளிக்க புல் தரையில் மல்லாந்து படுத்து கண்மூடிக் கிடப்பதும் இரவுக் கனவுகளில் மஞ்சள் பந்து கண் முன்பு தட்டாமாலை ஆடுவதும் நாள் தவறாது தேவையாயிருந்தன.

புஜங்களில் திண்மை ஏறியது. நெஞ்சு, சுவாசத்தில் விரிவடைந்து உறுதி பெற்றது. முதுகும் இடுப்பும் சுழன்று சுழன்று வலுப்பட்டன. நல்ல பசி, வயிறார உணவு, மனசுக்குத் தெம்பு, உடலுக்குப் பயிற்சி, டீம் ஸ்பிரிட். அதே சமயம் வெற்றி பெறும் ஆர்வம், தாக்குவதில், மும்முரத் தாக்குதலை எதிர்த்தலில் வரும் தீவிரம்...

உடம்பு வளம் பெற புத்தி மலர்ந்திருந்தது. கன்னங்களில் செழுமை, கண்ணில் பிரகாசம். நெஞ்சு படத்தில் உறுதி, மனசில் உற்சாகம்.

மல்லாந்து படுக்க நண்பர்கள் உதவி வேண்டாம். எழுந்திருக்கும்போது மட்டும் யாராவது வேண்டும். 'போலாமா முரளி..?' யாராவது கை நீட்டுவார்கள். இடது காலை மடித்து ஊன்றி வலது கையை நீட்டி விலுக்கென்று எழுந்து விட முடியும். எழுந்து நடக்கும்போது லேசாய் ஒரு விந்தல்



தெரியும். கணுக்காலில் லேசாய் சுளுக்கு பிடித்த மாதிரி - காலில் முள் தைத்த மாதிரி சின்ன நொடிப்பு தெரியும்.

தொடர்ச்சியாய் ஓட முடியாது. பஸ்ஸில் தொத்தி ஏறிவிட முடியும். சுவர் ஏறிக் குதிப்பது கடினம். மோட்டார் சைக்கிள் கிக் ஸ்டார்ட் முடியும்.

எது இயலுமோ அதெல்லாம் நண்பர்கள் ஆராய்ந்து கற்றுக் கொடுத்தார்கள். எல்லா இடங்களிலும் முரளிக்காக காத்திருந்து கூட்டிக் கொண்டு போனார்கள். ஒருநாள் முதல் ஷோ டிக்கெட் கிடைக்கவில்லை. 'திரும்பிடலாம் மச்சி' என்ற நண்பர்களைத் தடுத்து வாசலில் முரளி நிற்கச் சொன்னான். 'இரண்டு நிமிஷத்துல டிக்கெட்டோட வரேன்டா' என்றபடி தியேட்டர் மானேஜரிடம் போனான். மானேஜரிடம் போகும்போது கொஞ்சம் அதிகம் விந்தி நடந்தான். போன உடனே 'உட்காரட்டுமா சார்' என்று தடுமாறி எதிரே உட்கார்ந்து கொண்டான்.

"ரொம்ப நேரம் நிக்க முடியாது. ஸாரி சார்..." என்று மன்னிப்பு கேட்டான்.

வாட்டசாட்டமான ஆளுக்கு அதிக நேரம் நிற்க முடியாமல் என்ன வந்தது என்று எரிச்சலோடு தியேட்டர் மானேஜர் பார்க்க, வலது கால் பேண்டைத் தூக்கி, "இதுவுடன் லெக் சார். ஒரு ஆக்ஸிடெண்ட்ல கால் போயிடுத்து. ரொம்ப நேரம் நிக்க முடியாது."

"தம்பி இவருக்கு ஒரே ஒரு டிக்கெட் குடு."

"அஞ்சு டிக்கெட் வேணுங்க. என்னோட நண்பர்கள் வந்திருக்காங்க."

"அவங்களுக்கும் கால் இல்லியா?"

"கடவுள் புண்ணியத்துல எல்லோரும் நல்லபடியா இருக்காங்க சார். எனக்கு மட்டும்தான்."

"தம்பி, சாருக்கு ஒரே ஒரு டிக்கெட் குடு."

"தேங்க் யூ... வேண்டாம் சார்."

"ஏங்க?"

"காலில்லாத எனக்காக எவ்வளவோ செய்யற என் நண்பர்களுக்கு என்னால ஆன ஒரே உதவி இந்த டிக்கெட் சமாச்சாரம். நான் மட்டும் டிக்கெட் வாங்கிட்டுப் போறது- தேங்க் யூ சார்."

"அதெப்படி எல்லாருக்கும் டிக்கெட் தர முடியும்?"

"கேக்கலாமேன்னுதான் கேட்டுப் பார்த்தேன். இந்த முடவனாலேயும் ஒரு காரியம் ஆகட்டுமேன்னு நினைச்சேன்... முடியாதுன்னா தேங்க் யூ. மேஜையைப் பிடித்துக் கொண்டு இடது கவர் பிடித்து நின்று மெல்ல தயங்கி அதிகம் விந்தி விந்தி வாயிலில் தடுமாறி தடுமாறி நடக்க "சார் உங்களுக்கு அந்த டிக்கெட் கொடுக்கச் சொன்னாரு மானேஜர், வரீங்களா..?"

"தேங்க் யூ தம்பி... நீங்களே இங்க கொண்டாந்து தரீங்களா..?"

டிக்கெட் வாங்கி பணம் கொடுத்த பிறகு நடைதுள்ளும். ஒற்றை மரக்கால் குதி போடும்.

"அசிங்கமா இருக்கு முரளி உன் ட்ராமா" நண்பர்களில் ஒருவன் கோபித்துக் கொண்டான்.

"போடா.. போசாத நியூஸ் ரீல் பாரு."

"கொஞ்சம் நயவஞ்சகமாப் படலை உனக்கு."

"ஆமாம் என்ன இப்ப..?"

"எதுக்கு அனாவசியமா..? இது கடவுளுக்கே அடுக்காது."

"வீட்டுக்குள்ள உக்காந்து பாடம் படிச்ச பையனுக்கு கால் போச்சு. பட்டம் விட்டு கால் ஒடியலை. ரேஸ் மோட்டார் சைக்கிள் ஓட்டி கால் போகலை. ஹாக்கி விளையாடியோ, பொம்பளை தகராறிலேயோ கால் வெட்டுப்படலை. இப்படி விந்தலை. வீட்ல உக்காந்து பாடம் படிச்சுண்டிருந்தேன். என் காலை உடைச்சு முடமாக்கறது கடவுளுக்கு அடுக்குமன்னா நான் செய்யறதும் அடுக்கும். போடா."

"சினிமா தியேட்டரல செஞ்சது போவட்டும் கண்ணா. எம்காமுக்கும் பிஸிக்கலி ஹேண்டிகேப்டுன்னு கோட்டாயா எழுதி அப்ளை பண்றியே."

"அதுக்குன்னு தனியா கோட்டா உண்டு. கேக்கறேன்."

"உன்னை ஹேண்டிகேப்டா நீ நினைக்கக் கூடாதுன்னுதான் நாங்க உன்னை பேட்மிட்டன்லே சேர்த்துக்கிட்டோம்" முரளி சிரித்தான். "நீங்ககூட எனக்கு கால் இருந்துச்சுன்னா சேர்த்திருக்க மாட்டீங்கடா. ஐயோ பாவம் நொண்டின்னு விளையாட்டுக்குச் சேர்த்துட்டீங்க."

"இருக்கலாம். உன் மனசுலேர்ந்து அந்த எண்ணம்



அறவே போகலை. போக நாங்க உதவி செய்யலை."

"நீங்க பெரிய உதவி செஞ்சீங்க. உடம்பும் மனசும் வளர உதவி செஞ்சீங்க. தேங்க்யூ வெரிமச். ஆனா அறவே போகலையான்னு இனிமே கேக்காதே. இதுக்கு நான் பதில் சொல்ல முடியாது."

"ஏன்..?"

"சொன்னா புரியாது."

"வாட் டூ யூ மீன்?"

"உன் கேள்விக்கு நான் என்ன பதில் சொன்னாலும் புரியாது. உனக்கும் கால் உடைஞ்சி, அதை அறுத்து குப்பைத் தொட்டில போட்டுட்டு மரக்கால் வச்சாங்கன்னாதான் தெரியும்... உனக்கும் தெரியும். அறவே போகுமா போகாதான்னு. ஆனா என் எதிரிக்குக்கூட இப்படி ஒரு நிலை வரக்கூடாதுடா."

"ஸெல்ஃப் பிட்டி."

"நோ டியர். எனக்கு வலது கால் இல்லேங்கறது ஒரு உண்மை. அதை அறவே மறக்கறது முடியாது. அப்பப்ப மறக்கலாம். உங்களோட பேட்மிட்டன் ஆடறச்சே... ஸ்கூட்டால போறச்சே உக்காந்து பேசறப்ப உங்களுக்கு சினிமா டிக்கெட் வாங்கி சந்தோஷம் வரப்ப மறக்கலாம். ஐயோ எனக்குக் கால் இல்லையே, கால் இல்லையேன்னு உக்காந்து புலம்பாம அப்பப்ப மறக்கலாம். மறக்கத்தான் படிக்கறேன். மறக்கத்தான் உங்களோட பழகறேன். மறக்கத்தான் யாரையோ ஏமாத்தி உங்களுக்கு சினிமா டிக்கெட் எடுத்துக்கிட்டு ஓடிவரேன். புரிஞ்சுதா?"

நண்பர்கள் அவன் கோபக் கூச்சலுக்கு அமைதியானார்கள். அவனை அணைத்துக் கொண்டு, பேச்சுத் தவறுக்கு மன்னிப்பு கேட்டார்கள். மறந்தார்கள்.

"மச்சி ஒன்னு கேக்கறேன், கோச்சுக்காத பதில் சொல்லு. இது மாட்டறதுக்கு ரொம்ப டைம் ஆகுமா?"

ஒரு மாலையில் ஒரு நண்பன் தயங்கிக் கேட்டபோது முரளி மற்றவன் உதவியுடன் எழுந்து நின்றான். உட்கார்ந்திருந்த பூங்காவைச் சுற்றி ஒருமுறை பார்த்தான். மெல்லிய இருட்டு கவிழ்ந்து கொண்டிருந்தது. பெண் குழந்தைகள் இரண்டு பேர் தவிர பூங்காவில் எல்லோரும் ஆண்கள்.

முரளி நின்றபடி பேண்ட் பட்டனையும் ஜிப்பையும் இழுத்தான்.

"டேய்... பார்க்டா. நின்ன வாக்கில் பேண்ட் அவுக்கறியேடா."

"ஜட்டி போட்டிருக்கேண்டா... இப்ப பாரு" வலது தொடையில் தோல் பட்டை இறுகக் கட்டி, ஷீக் போட்டு அதில் மரக்கால் நாலைந்து வார்களில் பிணைக்கப்பட்டுத் தொங்கியது. தொடையின் முடிவு உள்ளே மரக்கால் குழியில் பொருந்தியிருந்தது. மரக்காலை அவிழ்த்து நண்பர்களிடம் கொடுத்தான். உட்கார்ந்து கொண்டான்.

நண்பர்கள் மரக்காலை மடியில் போட்டு பரிசோதித்தார்கள். முழங்கால் மடியும்படி வைத்திருந்த சுருள் கம்பிகளையும் உருளைகளையும் சோதித்துப் பார்த்தார்கள். கனம் பரிசோதித்தார்கள். "ரொம்ப வெயிட்ரா."

"இது கொஞ்சம் வெயிட்தான். ஃபைபர் க்ளாஸ்ல புதுசா ஒன்னு வருதாம். விலை ஜாஸ்தி."

"வாங்கிடறதுதான்."

"எங்காவது வேலை கிடைச்சு சம்பாதிக்க ஆரம்பிச்சா வாங்கணும்."

"இப்படி ஏற்பாடு பண்ணா என்ன..."

"எப்படி...?"

"என்னா ஆகும் செலவு?"

"எட்டாயிரம்."

"ஒரு சாரிட்டி ஷோ போட்டு நாமளா கலெக்ட் பண்ண முடியாது? ஒரு ட்ராமா ட்ரூப் காண்ட்ராக்ட் பண்ணி நாம டிக்கெட் போட்டு காலேஜ்லயே வித்து... எப்படி ஐடியா?"

"முரளிக்குப் புதுக்கால் வாங்கணும்னு பப்ளிஸிடி பண்ணியா? வேணாம்டா."

"அப்படி வேணாம். ஒரு நல்ல காரியத்துக்குன்னு சொல்வோம். என்னன்னு கேட்டா ட்ராமா அன்னிக்கு சொல்றதா சொல்லிடலாம்."

"வெரிகுட்."

"என்னடா முரளி?"

"ஃபைபர் க்ளாஸ் எப்ப கிடைக்கும்னு நான் கேட்டுக்கறேன்."



"வெரிகுட் கேட்டுச் சொல்லு. ஏற்பாடு பண்ணி மேடையிலே குடுத்துடலாம்."

"உனக்கு இதுல ஆட்சேபணையில்லையே?"

"எனக்கு இப்ப நாலு கால். அமலேந்திரன், கணேசன், ராமமூர்த்தி, அப்புறம் என் இரண்டு கால் சேர்த்து எனக்கு நாலு கால். அதாவது நான் நாய். நன்றியுள்ள நாய்."

"சீ போடா."

கல்லூரி முதல்வர் காதில் மட்டும் ரகசியமாய் சொன்னார்கள். முதல்வரே ஆர்வமாய் டிக்கெட் வாங்கினார். முனைந்து விற்றார். விற்கச் செய்தார்.

விழா அன்று மரக்காலுடன் வந்த முரளிக்குப் பெரிய பெட்டி அளித்ததும் கூட்டம் புரியாமல் திகைத்தது. முரளி பெட்டியைப் பிரித்து பளபளக்கிற ஃபைபர் க்ளாஸ் காலை எடுத்து ஜனங்களிடம் காட்டியபோது நாக்கு தட்டி சில்லிட்டது.

"தெரிஞ்சிருந்தா கூட குடுத்திருப்பேண்டா" பலர் தவித்தார்கள். ட்ராமா ட்ரூப் அங்கேயே அட்வான்ஸை திருப்பிக் கொடுத்துவிட்டது. முரளி மைக் அருகே வந்து நன்றி சொன்னான்.

"இப்படி கூட்டம் கூட்டி உனக்கு ஒரு ஃபைபர் க்ளாஸ் கொடுத்தா மனசுக்குக் கஷ்டமா இருக்குமான்னு என் நண்பர்கள் என்னைக் கேட்டாங்க. இல்லை எனக்குக் கஷ்டமா இல்லை. பதிலா ரொம்ப சந்தோஷமா இருக்கு. இப்படி ஒரு காரியத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் வசூல் பண்ணக்கூடிய சக்தி என் நண்பர்கள்கிட்ட இந்த காலேஜ் மாணவர்கள்கிட்ட இருக்குன்னு உலகம் தெரிஞ்சுக்கணும். இதுதான் முதன்மையான முக்கியமான விஷயம். அடடே இது தெரிஞ்சிருந்தா இன்னும்கூட குடுத்திருப்பனேன்னு உங்கள்ல பல பேருக்குத் தோணும். தோணினவங்களுக்கு ஒரு வாய்ப்பு. வாசல்ல ஒரு பெட்டி வச்சிருக்கு. 'ஓட்டுப் பெட்டி' மாதிரி தட்டி கட்டி ரகசியமா வச்சிருக்கு. உங்களால் முடிஞ்சதை அதில போட்டுட்டுப் போகலாம். எட்டணா தானே இருக்குன்னு நினைக்கிறவங்ககூட வெட்கமில்லாம போறதுக்காக ரகசியமா வச்சிருக்கோம். உனக்குத்தான் கால் கிடைச்சாச்சே எதுக்கு இன்னும் காசுன்னு கேக்கறீங்களா? இந்த நொண்டிக்கு நல்ல நண்பர்கள் இருக்காங்க சார், உதவி செய்ய காலேஜ் முழுக்க ஆட்கள் இருக்காங்க. உதவி செய்ய

ஆளில்லாத ஒரு ஊனமுற்றவருக்கு இந்தக் காலேஜ் உதவணும்சார். எனக்கு கிடைச்சவரைக்கும் போதும்னு என்னால நினைக்க முடியாது சார்."

கூட்டம் அவன் பேச்சுக்குத் திகைத்து நின்றது. பெட்டி நிரம்பி வழிந்தது. முரளீதரன் பிரம்மாண்டமானான்.

"மச்சி கலவாட்டா நீ. நாங்க ஓடி ஓடி பண்ணின கலெக்ஷன்ல முக்கா பங்கு ஒரு பேச்சுலயே பண்ணிட்டடா நீ."

"பைசா பிசகாத கணக்குப் போட்டு பிரின்ஸ்பால் கிட்ட குடுத்திரு. அவரு யாருக்குக் குடுக்கலாம்னு டிஸைட் பண்ணட்டும். கையோ காலோ தேவைப்பட்டது கொடுக்க ஏற்பாடு செய்யட்டும். ஆனா அதுல நம்ம காலேஜ் பேர் இருக்கணும்."

"எதுக்குடா முரளி?"

"நான் எழுதிண்டிருக்கேன். காலேஜ் பெயரை என் ஃபைபர் கால்ல அன்பளிப்புன்னு போட்டு."

"டேய். எதுக்குடா."

"கேட்பது பிச்சை. அப்புறம் வெட்கம் என்ன..?"

"உன்னைப் புரிஞ்சிக்க முடியலை மச்சி."

"எனக்குக் கால் இல்லைன்னு நான் நிறைய இடத்துல எக்ஸ்ப்ளாய்ட் பண்றதா சொன்னீங்க இல்லையா? வாஸ்தவம். எக்ஸ்ப்ளாய்ட் பண்றேன். ஆனா உதவி பண்ணினவங்களை நன்றியோட மனசுல நினைச்சுக்கிட்டு இருக்கேன். உதவி பண்ணவங்க பேர் எழுதிக்கிட்டா எக்ஸ்ப்ளாய்டேஷன் என்கிற பேர் போயிடுமில்லை?"

"வாத்யாரே.. கொன்னுட்டடா."

"இந்தக் காலேஜ் வாழ்க்கை முடிஞ்சாலும் கடைசி வரைக்கும் நாம பிரியாம இருக்கணும். இன்னும் நாலு நல்ல காரியம் பண்ற அளவுக்கு நாம வளரணும். இந்த முரளிக்கு மட்டும் கொம்புத்தேன் கிடைச்சா போறாதுடா. உலகத்துல எல்லா முடவனுக்கும் கொம்புத் தேன் தரணும். நாம தேன் அறுத்து எடுத்து வந்து எல்லா ஊனமுற்றவர்கள் கால் கீழயும் போடணும்." ஆவேசத்தோடு முரளி கை நீட்டினான்.

நண்பர்கள் சத்தியம் செய்தார்கள்.

முரளியின் மனசுக்குள் யாரோ ஒருவன் ஓங்காரமாய்



வாள் சுழற்றிச் சிரித்தான்.

"கம் டு லீவர்ஸ் ரைட் ஸைட்." பிறவியிலிருந்து இடது காது கேட்காத ஜூலியஸ் லீவர் சொல்வானாம். லீவருக்கு சகலரையும் வலது பக்கம் சேர்க்கும் திறன் இருந்தது. முரளிதரனுக்கும் அந்த ஆசை வந்தது.

## 5

பத்து வயதிலேயே குறி தவறாது அம்புவிடத் தெரிந்த வில்லாளிக்கு இருபது வயதில் புத்தர் - சங்கீதம்.

கல்லூரி வாழ்க்கையில் பொறுப்பு படிந்துவிட்டால் பொது வாழ்க்கையில் வெற்றி நிச்சயம். நாடகம் நடத்தி விழா எடுத்து காசு சேகரிக்க முடிந்த நண்பர்கள் விழாவின் கதாநாயகனாய் நின்று தன் ஊனத்தைக் கூச்சமின்றி பறைசாற்றி எட்டு நிமிடப் பேச்சில் கூட்டத்தை வசியம் செய்த முரளி - கல்லூரி விட்டு வெளியே வந்ததும் கலையாமல் இருந்தார்கள். தொழில் வெவ்வேறாய் இருப்பினும் உத்தியோக இடங்கள் வெவ்வேறு திசையாய் இருப்பினும் பார்க்கில் சந்தித்துக் கொண்டார்கள்.

"நம்ம ஏரியா பக்கம் க்ளப் எதுவும் இல்லைடா. ஒன்னு ஆரம்பிப்பமா?" அமலேந்திரன் பேச்சு ஆரம்பித்தான்.

"க்ளப் வேணாம். வெறும் சூதாட்ட கும்பலா போயிடும். சபா ஆரம்பிக்கலாம்" ராமமூர்த்தி திசை திருப்பினான். "சபான்னா லேடீஸ் வருவாங்க. கல்ச்சுரல் ப்ரோக்ராம் நடத்தலாம்."

"டாவடிக்கறதிலேயே இரு?"

"பேட்மிட்டன் கோர்ட் போட்டுருவமா? நமக்குன்னு சொந்தமா."

"ஸிடில இந்த ஏரியால ஓபன் கோர்ட் வாங்கணும்னா ஒரு லட்சம் ஆவும்."

"பேட்மிட்டன் கோர்ட் வாங்க சபா ஆரம்பிப்போம். மாசத்துக்கு ரெண்டு டிராமா. ரெண்டு சினிமா."

"ஒரு சினிமா ரெண்டு டிராமா."

"லைஃப் மெம்பர்.. ரெண்டாயிரம் ரூபா."

"அடுத்தபடி வருஷத்துக்கு அறநூறு ரூபா ஃபர்ஸ்ட் கிளாஸ்."

"மூன்னூறு செகண்ட் கிளாஸ்."

"கடைசி நூத்தம்பது."

"முதல்ல வாடகைக்கு ஒரு ஆபீஸ் ரூம்."

"நாலு பேரும் தலைக்கு ரெண்டாயிரம் போடறோம்."

"லாபம் வருமாடா?"

"மெம்பர்ஷிப் சேர்க்கறது பொறுத்து லாபம்."

"ஓ.கே. தான்."

"சபாக்கு, பிரஸிடெண்ட் முரளி. சரியா?"

"அலையணுமேடா. அவனுக்கு முடியாது."

"அலையக் கூடாதுன்னுதான் பிரஸிடெண்ட்னு சொல்றேன்."

ஆனால் முரளியும் அலைந்தான்.

"எதுக்கு சார் நீங்க இப்படி அலையறேள். நான்தான் பணம் அனுப்பறேன்னு சொன்னேனே."

"அது மரியாதையா... பெரிய மனசு பண்ணி லைஃப் மெம்பரா சேர்ந்திருக்கீங்க."

"மாசா மாசம் நல்ல ப்ரோக்ராமா ஏற்பாடு பண்ணுங்கோ."

"ஓ.கே. தான்."

மந்திரியும் நடிகையும் சபாவுக்கு வர, கூட்டம் பேயாய் அலை மோதிற்று. சினிமா வெளி வரும் நாளுக்கு முதல்நாள் சபாவுக்குத் தனி ஷோ. சபாவில் குத்துவிளக்கு ஏற்றிய நடிகையின் ஐம்பதாவது படம். கேட் கலெக்ஷன் அரைமணி நேர வேலை. அரங்கம் பிதுங்கிற்று. நடிகையைப் புகழ்ந்த பத்திரிகையாளர்கள் சபாவின் துவக்கம் பற்றியும் எழுதினார்கள்.

"லைஃப் மெம்பர்தான் காலியா இருக்கு சார். மத்தது இல்லை."

பெரிய மனிதர்கள் நண்பர்களாயினர். நண்பர்கள் உதவி செய்தனர்.

சி.ஏ. படிக்கும் முரளி கணக்கு வழக்கில் சுத்தமாய் இருந்தான்.

கணேசனுக்கு எலக்ட்ரிக்கல் ஷாப் வைக்க பலர் நட்பு உதவிற்று.



தந்தையின் இங்கிலீஷ் மருந்துக் கடையை ராமமூர்த்தி ஏக வியாபாரம் விரிவுபடுத்தினான்.

அமரேந்திரன், உறவில் திருமணம் செய்து கொண்டான். மாமனார் சில [illegible] நுணுக்கம் சொல்லி கொடுத்தார்.

"அமரேந்திரா, இந்த அலுமினியக் கம்பெனி ஷேர் வாங்கு. டயர் கம்பெனி ஷேர் வித்திடு" முரளி பேப்பர் படித்துச் சொல்ல, பங்கு எட்டு மடங்கு லாபம் காட்டினான். நாலு பேரும் ஷேர் மார்க்கெட் கவனிக்க ஆரம்பித்தார்கள். அதிகம் தெரிந்து கொண்டார்கள்.

சி.ஏ. முடித்தவுடன் முதல் பார்ட்டி மருந்துக்கடை ராமமூர்த்தி. பிறகு கணேசன், அமரேந்திரன். இவர்கள் சொல்லி இன்னும் பத்து பேர். வீடே அலுவலகம். அலுவலகமே வீடு. கடைப் பக்கத் திண்ணையை இடித்து விட்டு சுவர் எழுப்பி மொஸைக் தரையும் லாய் பேக்கரும் டைப்ரைட்டரும் கிளார்க்குமாய் முரளி தொழில் துவங்கினான்.

எங்கு கால் ஊன்றினதோ அங்கே கொடி ஏற்றினான். எங்கே விழுந்தப்பட்டானோ அங்கே வித்தை காட்டினான்.

இளமை, செல்வம், கூரிய அறிவு, ஓர் கபடு வராத நட்பு. வாழ்க்கை இனித்தது. புரவியென பிடரி சிலிர்த்து நுரை கிளப்பி ஓடிற்று. பாதை அறிந்து செல்லும் விவேகம் இருந்தது.

ஆனால் சங்கடங்களே இல்லாத வாழ்க்கை எவருக்கும் இல்லை. சோதனைகளே மனிதர்களை நிதானப்படுத்துகிறவை.

"மச்சி, ஒரு சின்ன ப்ராப்ளம். ரெண்டு நாளா நம்ம சபையில எப்படி இதைச் சொல்றதுன்னு யோசிச்சுக்கிட்டே இருந்தேன். விஷயம் கை மீறி போறதுக்கு முன்னே சொல்றது நல்லதுன்னு வந்துட்டேன்."

"எந்த பிரச்சினைக்கும் நாம பயப்படப் போறதில்லை. ரெண்டு நாள் சொல்லாத ஏன் இருக்கணும். யார்கிட்ட பயம் உனக்கு?"

"சபா விஷயமில்லை முரளி. நம்ம ஆள் சொந்தப் பிரச்சினை. சபாக்கு வர பொண்ணு ஒண்ணை நம்ம கணேசன் கணக்கு பண்றான். பார்க்ல, சினிமால பார்த்துருக்காங்களாம். பொண்ணு வீட்டுக்குத் தெரிஞ்சு கண்டிச்சிருக்காங்க. சும்மா ஃப்ரெண்ட்ஷிப்புன்னுட்டாங்க. பொண்ணு மறுபடியும்

சேர்ந்து வந்தாரா தகவல் போயிருக்கு. இன்னிக்கு ஆபீஸ் வந்து யாரு கணேசன்னு கேக்கறாங்க? யாருன்னு சொல்றது? என் சிநேகிதன் எலக்ட்ரிக்ஷாப் ஓனர்னு சொல்றதா, சபா செக்ரடரின்னு சொல்றதா. எனக்குத் தெரியலை. பொண்ணுக்கு அப்பனோட கூட வந்த ஆளு ரொம்ப வேகமா பேசறாரு. மொட்டைப் பசங்கன்னாரு. பொம்பளைங்க கூட்டம் பாக்கறதுக்கே சபா ஆரம்பிச்சிருக்கீங்களாடான்னாரு. முறைச்சுட்டேன். உன்னை வைக்கிற இடத்துல வைக்கிறேன்னு போய்ட்டான்."

"கணேசன் கிட்ட கேட்டியா?"

"கட்டிக்கப் போறானாம். அந்தப் பொண்ணை. தெய்வீக காதல் அது இதுன்னு அளக்க ஆரம்பிச்சான். எனக்கு இந்த வார்த்தையே அலர்ஜி. காதைப் பொத்திக்கிட்டு ஓடிவந்துட்டேன். நான் இத டீல் பண்ணினா அடி தடியிலதான் முடியும். லோ முரளி உன்கிட்ட விட்டுர்றேன்."

"கணேசன் லவ் பண்றது தப்பில்லை. ஆனா, சபா செக்ரட்டரி சபாக்கு வரப் பொண்ணை கணக்குப் பண்றதுதான் தப்பு."

"சொதப்பாதடா."

"கணேசனை ஆள் அனுப்பி வரவை."

"சொல்லிவிட்டிருக்கேன்."

"அந்தப் பொண் பேரென்ன?"

"பொம்பளைக்குப் பேர் எதுக்குடா? அம்மா, அக்கா, பொண்டாட்டி, மச்சினிச்சி டெலிகேஷன்தான். கணேசன் ஆளுன்னு தெரியும். பேரெல்லாம் எவன் கேட்டான்?"

"சாரி உன்கிட்ட பேசறது தப்பு நீ ஒதுங்கிக்க."

"சபாலேர்ந்தா?" அமலேந்திரன் கோபப்பட்டான்.

"முட்டாள்... ஏன் ஆத்திரப்படற? இந்த விஷயத்த உன்னால நிதானமா பார்க்க முடியாதுன்னு ஒதுங்கிக்க சொல்றேன்."

கணேசன் உள்ளே நுழைய மௌனமானார்கள்.

விசாரித்தார்கள். கணேசன் பரஸ்பரம் புரிந்து கொண்டு காதலிப்பதாகவும் பிரிவதென்பது இருவராலும் முடியாதென்றும் பேசினான்.

"சரி. அந்தப் பொண்ணு அட்ரஸ் குடு."



"எதுக்கு?"

"ம்ம். புடிங்கிக் கொண்டாந்து உன் வீட்ல நட்டு தண்ணி ஊத்த."

"அவசரப்படாத முரளி" கணேசன் தடுத்தான்.

"சினிமா தியேட்டரில் கை போட்டு உட்கார்ந்துக்கறது இன்னும் முடியலையா?"

"சும்மா இரு அமலேந்திரா."

"சபா தேடி வந்துட்டாங்க கணேசா உன் பேரு உன் கடை பேரு தெரியலை. நீ சபா செக்ரட்டரின்னு தெரிஞ்சிருக்கு. இனி உன் கல்யாணம் சபா விஷயம்."

கணேசன் தயங்கி விலாசம் தர முரளி அமலேந்திரனுடன் அந்தப் பெண் வீட்டிற்குப் போனான். மிரட்டினார்கள். ஆள் ஆளுக்குக் கத்தினார்கள். பெண்ணுடன் பேச வேண்டும் என்ற போது மறுத்தார்கள்.

"சரி சார். நான் போலீஸுக்குப் போறேன் எங்க சபா செக்ரட்டரி கணேசன் மனைவியாகப் போற ஒரு மேஜர் பொண்ணை நீங்க சட்ட விரோதமா மறைச்சு வெச்சிருக்கறதா கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறேன்" முரளி எழுந்திருக்க -

பணிந்தார்கள். பேசினார்கள். பெண்ணை கூடத்துக்கு அழைத்து வந்தார்கள்.

"இப்படி ஒரு நல்ல பெற்றோர்கள் இருக்கறபோது நீங்க பண்றது என்ன நியாயம்? கணேசனைப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு?" தகப்பனுக்கு சாதகமாய் பெண்ணைத் திட்டித் தீர்த்தார்கள். "ஆறு லட்ச ரூபா கடன் இருக்கு. கடைல இன்னிக்கு ஓடி ஓடி உழைச்சா கடனடைக்க ரெண்டு வருஷம் ஆகும். காத்திருக்க உங்களால முடியுமா?" கேள்வி கேட்டார்கள்.

பெண் மிரண்டது.

அவள் உள்ளே போனதும் கணேசனின் நல்ல குணங்களை உழைப்பை - முதலீட்டை - கடை வியாபார விஷயங்களை அள்ளி வீசினார்கள். யோசிக்கச் சொல்லி விட்டு வெளியே வந்தார்கள்.

"கணேசன் சரியான மடையன் முரளி. இதப் போய் புடிச்சிருக்கானே. நாப்பது ரூபாய்க்கு மேல செய்ய

மாட்டாங்க. ரெண்டு வருஷம் பொறுத்து நாலு காண்ட்ராக்ட் முடிச்சு இவன் இடம் ஓஹோன்னு உசந்திரும். லட்ச ரூபா குடுக்கற எடத்துல பொண் எடுக்கலாம்."

"அமலேந்திரா, எல்லா இடத்துலயும் காசு கணக்குப் பாக்கற நீ."

"காசு இல்லன்னா பெத்தவாகூட மதிக்க மாட்டாங்க."

"இல்ல. அப்படி இல்ல நல்ல மனைவி கிடைச்சா அதுவே பெரிய செல்வம். மனசுக்கு இதமா வீடு இருந்தா சம்பாதிக்க உற்சாகம் அதிகம் வரும். உன்னை மாதிரியே எல்லோரும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது. காதல் ஒரு விஷயம்."

"போடா காதல் கலியாணம் எல்லாம் இதுக்குத் தான் மச்சி..." அமலேந்திரன் சாகை செய்தான். காசு தூக்கிப் போட்டா தினம் ஒரு பொம்பளை வாங்கலாம். ஒளிவு மறைவு இல்லாத நடத்தலாம். இதுக்குத்தான்னு கணேசன் ஒத்துக்கட்டும். நூறு பொம்பளை காட்டறேன் சிடில நான் மாமா வேலை செய்றேன் அவனுக்காக. சும்மா காதல், கீதல்னு கதை வுட்டுக்கிட்டு..."

"ஒரு வயசுல லவ் வரல. அப்புறம் வரவே வராது அமலேந்திரா. உனக்குப் புரியாத பேசற."

"உனக்குத் தெரியுமா?"

"மாமா வேலை பத்திக்கூட எனக்குத் தெரியாது. செய்யறதில்லை. ஆனால், அதை – அப்படி ஒரு நிலைமைய மறுக்க மாட்டேன். நான் காதலிச்சதில்லை. ஆனா, காதலே இல்லைன்னு சொல்ல மாட்டேன்."

நான்கு மாதத்தில் கணேசன் திருமணம் நடந்தது. நண்பர்கள் சாட்சி கையெழுத்திட்டனர். அமலேந்திரன் கணேசனைத் தனியே கூப்பிட்டான். "மகனே ஆறு லட்ச ரூபா கடனை இந்த ரெண்டு வருஷக் கெடுவுக்குள்ள நீ அடைக்கலை நீ மனுஷன் இல்லை."

கணேசன் குறுநகைத்தான். சவாலை ஏற்றுக் கொண்டான்.

ஸ்டாக் டேக்கிங் போதும், கணேசன் மனைவியும் ஏணி போட்டு ஏறி கடைப் பொருட்களை வகைப்படுத்தியபோதும், பேலன்ஸ் ஷீட் டைப் செய்தபோதும் கடை ஆடிட்டிங் பற்றி முரளியிடம் விவாதித்ததைப் பார்த்தும் நண்பர்கள் சந்தோஷமடைந்தார்கள். 'அண்ணி' 'அண்ணி' என்று கூப்பிட்டார்கள்.



அடுத்து ராமமூர்த்திக்குத் திருமணம் நிச்சயம் ஆயிற்று. சுந்தரம் பற்றி நண்பர்கள் விவாதிக்க குழந்தை பேறு பற்றி கவலைப்பட, முரளி கேட்டபடியாய் இருந்தான். "என்னம்மா ஒண்ணுலயும் கலந்துக்க மாட்டேங்கற?" அமலேந்திரன் தெரியாமல் கேட்க முரளி உதடு பிதுக்கினான்.

"இதுபத்தி ஒண்ணும் தெரியாமலே போயிடலாம்" என்று பதில் சொன்னான்.

நண்பர்களுக்கும் வலித்தது. முரளியின் ஊனம் அதிகம் யோசிக்க வைத்தது.

"முரளி கண்ணா, நான் உனக்குப் பொண்ணு பார்க்கட்டுமா?" அமலேந்திரன் தனியே கேட்க முரளி வேண்டாமென்று தலையசைத்தான்.

"ஏண்டா?"

"முதல்ல பொண்ணுன்னா என்னன்னு தெரியணும்."

"என்ன சொல்ற?"

"கணேசனுக்கு மாமா வேலை பார்க்கக்கூட தயார்னு சொன்னியே அமலேந்திரா?"

"அதான ப்ராப்ளம். வுடு கண்ணா."

அமலேந்திரனும் முரளியும் போனார்கள். ஸ்கூட்டரைவிட்டு இறங்கி சந்தில் நுழைந்து ஒரு பெரிய வீட்டுப் பின்பக்கம் முற்றம் இருட்டாய் இருந்த திரை விலக உள்ளே ஒரு தனி சாம்ராஜ்யம் தெரிந்தது.

ஏழு எட்டு பெண்கள்.

அமலேந்திரன் ஜாடை காட்ட, ஒரு பெண் முரளியின் அருகில் வந்து அவன் தலையைக் கலைத்தாள். வெறும் நீலச்சட்டையும் பாவாடையும் அணிந்திருந்தாள். "ஏய், நீ ஐயரா?" என்று கேட்டாள். காலர் வழியே தெரிந்த பூணூலை இழுத்து ஹை ஹை என்று குதிரை ஓட்டினாள். முரளி பயந்தான்.

அவள் நகர்ந்து அவன் வலது தொடையில் உட்கார்ந்தாள். முரளி 'ஐயோ' என்று கத்தினான். அவள் திடுக்கிட்டு பின்பக்கம் துடைத்துக் கொண்டாள். வலக்காலைத் தொட்டுவிட்டு "நீ நொண்டியா" என்றாள். முரளி நடுங்கினான்.

# 6

முரளி குன்றிப் போனான்.

'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்' தலைவாசலை மிதித்ததோடு மட்டுமில்லை. அந்தத் தலைவாசல் தடுக்கி குப்புற விழுந்தாயிற்று. மதியாதார் நிறைந்த வீடு கை கொட்டிச் சிரித்தது.

பொய்க்காலைக் கூட்டமாய் வந்து தொட்டுத் தொட்டுப் பார்த்தது.

"ஐயோ... மரகதம், பளபளன்னு இருக்குடி. முடியே இல்லை. காலு செஞ்சவன் முடி போட செய்யக் கூடாதா? என்னா இங்க கிள்ளிவிட்டா தொடை வ நோவுமா?" சிரித்தார்கள்.

"அந்தக் காலு காமி. ஏன் இங்கேயும் ஒன்னு வாங்கி போட்டுக்குறது மேட்சா இருக்குமில்ல..." சிரித்தார்கள்.

"இதப் போட்டுக்கினா என்னாண்ட வரப்போறு? வாணாம்பா எங்கியாவது படாத இடத்துல பட்டுதுன்னா பேஜாரு. இது போட்டுக்கினு வாறுதுன்னா கூட இருபது ரூபா - குடுக்கணும்" - சிரித்தார்கள்.

"இதக் கழட்டி மாட்றதுக்குள்ள ரெண்டு பார்ட்டி முடிச்சுரலாம். இந்தாப்பா, போவணும்னா இதெல்லாம் கழட்டிரு" சிரித்தார்கள்.

"கழட்டிட்டா எப்படி போவும்? நீதான் தோள்ல தாங்கிக்கினு போவணும். வேணா அதுக்கு ஒரு பத்து ரூபா கூட வாங்கிக்க."

"எங்க இந்த மாதிரி ப்ளாஸ்டிக்ல காலு, கை மட்டும் தான் செய்றாங்களா... இல்ல வேற ஏதாச்சும்" விரல் நீட்டி ஒரு பெண் அளவு காண்பித்தாள். அந்த இடமே அதிரும்படி சிரித்தார்கள்.

அவனைச் சுற்றி மூச்சுக் காற்றுப் படும்படி விதம் விதமான பெண்கள் நின்றார்கள்.

"வாடி மரகதம். இத்தை கழட்டிப் பார்க்கணும் போல இருக்குடி. போவ் கழட்டேன். நிக்கிறியே திருதிருன்னு" - சிரித்தார்கள்.

முரளி எழுந்தான். விரைப்பாய் திரும்பினான்.

"கோச்சுக்கிச்சுடி... பார்ட்டி."



"அட வந்துட்டு சும்மா போனா வுட்டுருவமா" ஒருத்தி அவன் மேல் சாய்ந்தாள். முரளி கனமும் கூச்சமும் தாங்காது தள்ளாடினான். உதறினான்.

உதறப்பட்டவள் கதவில் சாய்ந்து சுதாரித்தாள். பல் கடித்துச் சீறினாள்.

"கம்மனாட்டி சொன்னாங்க. திண்டி தின்ற புள்ளைக்கு நீ கட்டுப்பட்டு தொண்டு நடக்குற புள்ளைக்கு நெருங்கக் கட்டுப்பட்டு ஆசையா தொட்டாப் புடிச்சுத் தள்றியே போடேய்."

"வுடுங்கடி. அத உங்க வெறுப்ப பார்ட்டி மேல காமிக்காதீங்க. வாணாம்மா போயிருங்க. சீக்கிரம் சீக்கிரம்." பின்பக்கக் கதவு வழியே வெளியேறினான். கொல்லைக் கதவு பூட்டப்பட்டது. பூட்டிய பெண் கம்பிகள் வழியே அவனை நின்று பார்த்தாள்.

"கோச்சுக்காதீங்க சார். இதுங்க எல்லாம் கெட்டுப் போன நாய்ங்க. ஏமாந்த ஆள் கிடைச்சா குதிச்சு போட்டுரும். உங்களுக்கு ஏன் இந்த இடமெல்லாம்? எங்களையே கூட்டிக் கண்டிச்சிருக்காள். இன்னும் எதுக்கு பாவம் பண்றீங்க. நல்லப் புள்ளையா போயிடுங்க. இந்த இடத்துக்கெல்லாம் உங்களை மாதிரி ஆளுங்க வரக்கூடாது. வந்தா இதுதான். ஐயோ பாவம். நிக்க முடியலேன்னா கிணத்தாண்ட ஒரு தோய்க்கற கல்லு இருக்கு. உக்காந்துக்கங்க. உங்க சிநேகிதரு இப்ப வந்துருவாரு. பாவம்."

இந்த இரக்கம் இன்னும் நெஞ்சை அறுத்தது. முகம் பொத்தி தலை குனிய வைத்தது. கண் ஓரம் நீர் கட்டி உதடு துடிக்க வைத்தது. இருட்டாய் இருந்த அந்தக் கிணற்றடியில் தோய்க்கும் கல்லில் முரளி உட்கார்ந்தான். எதிரே இருந்த கருப்பை வெறித்தான். கண்ணில் நீர் வழிந்தது. துடைத்துக் கொண்டான். ஏக்கத்துடன் பூட்டிய கதவுகளைத் திறந்து பார்த்தான்.

சின்னக் கிள்ளுக்குப் பயந்து போய் திரும்பி விட்டேனா.

நண்பர்களிடம் நடுப்பார்க்கில் கால் அவிழ்த்துக் கொடுத்தோமே. மடியில் போட்டுப் பார்த்தார்களே.

அவர்கள் நண்பர்கள்.

இவர்கள்...

மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம். பொய்க்கால் இடறி விட்டு விட்டது. இல்லை இடறியது கால் இல்லை, மனசு

தன்னைச் சுற்றி எப்போதும் சிரித்த போதெல்லாம் தாங்க ஆள் இருந்தது. இங்கே தள்ளி விட்டுச் சிரிக்கும் கூட்டம் இருக்கிறது.

தணிந்து மாக்கால் அவிழ்த்துக் காட்டியிருந்தால்... முரளி முகம் துடைத்துக் கொண்டான். "போல் இன்னும் எங்கெல்லாம் மரத்துல செஞ்சு வச்சிக்கினுக்கீறு..." சிரிப்பார்கள்.

"எல்லாத்தையும் கழட்டிரு" சிரிப்பார்கள்.

"ஐயே இங்கப் பாருடி, கள்ளங்கரேல்னு காச்கப் போய் கிடக்குது. தொடைல ஐய்யோப்பா. எனக்குப் பாக்கவே முடியலை. எனக்கு வேணாம் இந்தப் பார்ட்டி." தொட்டவள் விலகி ஓட சிரிப்பார்கள்.

"போவ். காளை காளையா எவ்வளவு காலும் இருக்கிறவனே மூச்சு வாங்குறான். உனக்கெல்லாம் எதுக்கப்பா எழுந்து போ..." சிரிப்பார்கள்.

"பாவம்டி. கேலி பண்ணாதீங்க. ஐயரே கூட ஏதாச்சும் டிப்ஸ் குடு. போட்டி போட்டுக்கிட்டு வருவானுங்க."

கேலியைவிட இந்த இரக்கம் மனதை சிதறி அடித்துவிடும். வீரியம் மொத்தமும் இந்த இரக்கம் இறக்கிவிட்டு விடும்.

"உனக்கு ஒன்றும் முடியாது எழுந்து போ. சும்மா கசகசன்னு மேல விழுந்துக்கினு. காலு கையெல்லாம் வளிக்கினு வெளிய போ. அடுத்த பார்ட்டி நிக்குது."

முரளி முகம் பொத்தி நடுங்கினான். மெல்ல நடந்து இருட்டில் தடுமாறி தெருவுக்கு வந்தான். தன் வீடு நோக்கி மெல்ல நகர்ந்தான்.

அமலேந்திரன் மறுநாள் பார்த்தபோது, "என்ன முரளி என்ன ஆச்சு" தோள் தொட்டு கேட்டான்.

"ப்ளீஸ். டோண்ட் ஆஸ்க் மீ எனி திங்."

"ஏதாவது கலாட்டா பண்ணிட்டாங்களா, சொல்லு. போய் செருப்பாலே அடிக்கிறேன்."

"அடிக்கிறதா இருந்தா உன்னை நீ அடிச்சுக்கணும். என்னை நான் அடிச்சுக்கணும். அவங்க மேல எந்த தப்பும் இல்லை."

"சீ. காசு குடுத்தா வழிச்சுக்கிட்டு வர்ற நாய்ங்க..."



"ப்ளீஸ் ஸ்டாப் இட்... தயவு செஞ்சு இதுபத்தி எதுவும் கேக்காத, போதும்."

"முரளி, உன் கல்யாணம் பத்தி உங்கிட்ட பேசறதுக்கு எனக்கு தைரியம் இல்லடா. எங்கள் எல்லாருக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. சத்தியமா சொல்றேன் முரளி. ராத்திரி என் பெண்டாட்டியோட சந்தோஷமா இருக்கறப்ப நம்ம ஃப்ரெண்ட்ஸ் எல்லாரையும் நினைச்சுக்குவேன். ராமமூர்த்தி, கணேசன் எல்லாரும் இப்ப சந்தோஷமா இருப்பாங்க. நம்ம முரளி மட்டும்... அவனுக்கும் ஏதாச்சும் செய்யணும்னு நினைச்சுக்குவேன். டேய்... நீ ஆசைப்பட்டுதான்டா கூட்டிட்டுப் போனேன். நான் வந்ததே உனக்காகத்தான்டா. எனக்கு இதுல இஷ்டமில்ல. முரளி சரி உனக்கு நல்ல பொண்ணா பாக்கட்டுமா சொல்லு."

"வேணாம்."

"ஏன்டா?"

"இப்படியே இருந்துடறேன்."

"உனக்கு என்னடா குறைச்சல். படிப்பில்லையா, பண்பில்லையா, அழகில்லையா, அறிவில்லையா. உனக்கென்ன குறைச்சல்?"

"ஒரு கால் குறைச்சல்"

"டேய்."

"ஒரு கால் குறைஞ்சதாலே நெஞ்சுல தைரியம் குறைச்சல். நெஞ்சுல தைரியம் இல்லாதவன் திருமணத்துக்கு லாயக்கில்லாதவன்."

"என்னடா பேசறே நீ. எங்கிட்ட வுடு இத."

"வேண்டாம். ஏதாவது ஒரு பொண்ணை என் தலைல கட்டி என்னோட எழவேன்னு அவ குடித்தனம் பண்ற கொடுமை வேணாம். அமலேந்திரா, ப்ளீஸ்" கை கூப்பினான்.

"ப்ச்சு... இன்னிக்கு ராத் தூக்கமே வராது முரளி. டேய் காலில்லைன்னு ஆத்திரப்பட்டு எல்லா இடமும் ஜெயிச்சவன்டா நீ."

"ஆனா பொம்பளைய ஜெயிக்க முடியும்னு தோணலை."

"முரளி...?"

"ஸ்கிப் இட். இது என் ப்ராப்ளம். என் சொந்த ப்ராப்ளம். இதுக்காக உன் ராத்தூக்கம் கலைச்சுக்கறது முட்டாள் தனம்.

ஷிப் இட்."

காலம் நெருக்க ரணம் ஆற்றும். காலம் மட்டுமே ஆற்றும். ஆற்றிற்று. கடந்தது கனவாய் போயிற்று. வேறு கனவுகள் வந்தன. நனவாயின. பம்பாய் கம்பெனி சென்னை தெற்குக்கு லைசென்ஸ் கேட்டிருந்தது. நேரே போய் நின்றான். தன் படிப்பை, மார்க்கெட் திறமையை வெளிப்படுத்தினான். விளம்பர நுட்பங்களை வெளியிட்டான். பேங்க் பாலன்ஸ் காட்டினான். தன் ஆடிட் தொழில் வருமானம், தன் பார்ட்டிகளின் செல்வாக்கு, டிரான்ஸ்போர்ட் பலம், சபா மூலம், பாட்மின்டன் க்ளப் மூலம் நகரில் தனக்குள் தொடர்பு, கடன் வாங்கும் வசதி, சொத்து விவரம் எல்லாம் தெரியப்படுத்தினான்.

அவர்கள் சகலரும் திருப்தியடைந்தபோது தன் பேண்டை உயர்த்தி ஃபைபர் கிளாஸ் காலைக் காட்டினான்.

மருந்து கம்பெனி மார்க்கெட்டிங் குழு பரிதாபப்பட்டது.

"நகருக்குள் உங்களால் பயணம் செய்ய முடியுமா முரளிதரன்?"

தனது கார், ஸ்கூட்டர் லைசென்ஸை விரித்துக் காட்டினான்.

"உங்களால் விரைவாக நடக்க முடியுமா நண்பரே?"

"சேலஞ்ச். நரிமன் பாயிண்டிலிருந்து விடி ஸ்டேஷன் வரை இங்குள்ள அனைவரும் நடக்கலாம். நான் முதலில் தொட்டால் என் அப்ளிகேஷனை ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையெனில் கிழித்துப் போடுங்கள்."

"தட்ஸ் எ குட் ஸ்பிரிட்."

"நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை நண்பரே?"

"அதற்கு தகுதியுடைய முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறேன்."

"புரியவில்லை முரளிதரன்."

"நான் ஊனமுற்றவன். இந்தக் குறையை இனி நீக்க முடியாது. ஆனால், முயற்சி செய்து என் செல்வ நிலையை உயர்த்திக் கொண்டால் ஒரு வேளை என் குறை சற்று மறையக்கூடும். உங்கள் கம்பெனி என் உயர்வுக்கு உதவ முடியும்."



"அதிக பணம் உங்களுக்குத் திருமண சாத்தியங்களை அதிகப்படுத்துமா?"

"அப்படியல்ல. குறையுள்ள என்னை மணக்க வரும் பெண்ணுக்கு என் வருமானம் அதிக நம்பிக்கையை வாழ்வில் தரக்கூடும் என்று யோசிக்கிறேன். பெண்கள் பாதுகாப்பை இயல்பிலேயே விரும்புவார்கள். என் மரக்கால் தரும் பாதுகாப்பின்மையை என் பணம் மட்டுப்படுத்தலாம்."

"நல்ல பதில். உங்கள் நம்பிக்கை சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், பணம் மட்டுமே வாழ்க்கையா..."

"இல்லை. என் மனது அறிந்த பெண் கிடைப்பாளேயானால் அதுதான் உயர்வு, சந்தோஷம். அதற்காக நான் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்."

மார்க்கெட்டிங் குழு கைதட்டிற்று. 'குட் லக்' என்று கை குலுக்கிற்று. தென் சென்னை முழுவதுக்கும் அவனை டீலராக்கிற்று. பெரிய தொகை காப்பீடாய் கேட்டது. கடுமையான கணக்கு வழக்கு சட்டங்களை விதித்தது. வரவேற்பறையுடன் கூடிய ஆபீஸ் நகரின் நடுப்பகுதியில் வேண்டும் என்று எதிர்பார்த்தது. முரளி இடைவிடாது அலைந்தான். ரியல் எஸ்டேட் அமலேந்திரன் ஆபீஸ் பார்த்துக் கொடுக்க, கணேசன் அதை விளம்பர விளக்கலங்காரம் செய்ய, ராமமூர்த்தி லீஸ் போட்டு விட்டு கூடமாட ஓட சகலமும் சித்தமாயிற்று. பாங்கில் பெரும் தொகை கடன் கிடைத்தது. காலையில் பம்பாய் கிளம்பி இரவு வீடு திரும்பும் பயணங்கள் அதிகமாயின.

மருந்துக்கடை மருந்துக்கடையாக ஏறினான். வெயில் மழை என்று பாராமல் அலைந்தான். எல்லா டாக்டர்களையும் அறிமுகம் செய்து கொண்டான். பம்பாய் கம்பெனி பிரபலமான மருந்து கம்பெனி. நயமான சரக்கு. கடுமையான கட்டுப்பாடு. ஆண்டிபயாடிக்கில் நாற்பது சதவீதம் லாபம் கிடைத்தது. இருமல் சிரப்பில் இருபது சதவீதம் கிடைத்தது. விட்டமின் மாத்திரைகள் சுலபமாய் விற்றன. டெலிவரி பையன்களை கவனமாய் தேர்ந்தெடுத்தான். தேர்ந்தவனை மரியாதையாய் நடத்தினான். ஊக்க போனஸ் கொடுத்தான். உடனில் பழைய அம்பாஸிடர் கார் வாங்கினான். வீட்டை மேலும் புதுப்பித்தான்.

நாலு வருடத்தில் அவனை சென்னையில் அதிக பேருக்குத் தெரிந்தது. அவன் கணக்கு வழக்கு சுத்தம்

பம்பாய் கம்பெனியைச் சந்தோஷப்படுத்திற்று. வேறு இடங்களில் மார்க்கெட்டிங் செய்ய அவன் ஆலோசனை கேட்கப்பட்டது.

வியாபாரத்தில் தபால் என்பது முக்கியமான விஷயம். கடைசி நேரக் கட்டில் அன்றைய கடிதங்கள் சேர்க்க போஸ்ட் மாஸ்டர் தயவு அவசியம்.

அவன் பகுதி போஸ்ட் மாஸ்டர் சந்திரசேகரன் அறிமுகமானார். அவன் கொடுத்த சின்ன பரிசுகளில், மாதிரி மருந்துகளில் நண்பரானார். வீட்டுக்கு அழைத்தார்.

"இவ பெரியவ, பேரு உமா. இவ சின்னவ பேரு உஷா. பெரியவ பியூஸி. முடிச்சுட்டு மியூஸிக் காலேஜ்ல எம்.ஏ. படிக்கிறா. சின்னவ சைன்ஸ் கிராஜுவேட். மெடிக்கல் ட்ரை பண்ணோம். கிடைக்கல. மகா கெட்டிக்காரி. கொஞ்சம் வாயாடி. உஷா, சார் யார் தெரியுமா? பெரிய மருந்து கம்பெனி டீலர். சபா ப்ரஸிடெண்ட். தமிழ் பாட்டெல்லாம் நிறைய சொல்றார்."

"எம்பேர் முரளிதரன்" கரம் குவித்தான்.

பெரியவள்தான் முதலில் கை கூப்பினாள். சின்னப் பெண் பேச ஆரம்பித்தாள். பேச்சா அது. அரட்டை. கெமிஸ்ட்ரியிலிருந்து கமலஹாசன் வரை... உலகப் போரிலிருந்து உப்பு பெறாத விஷயம் வரை பேசினாள். "அவங்க பேசவே இல்லை. அவங்க பேரு உமாதான..."

"உமா நன்னா பாடுவா சார்."

"பாட்டாவது கேக்கலாமே."

"நடந்த கால்கள் நொந்தவோ,
நடுங்கு ஞான மேனவாய்,
இடந்த மெய் குலுங்கவோ
விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்
கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு
வாழி கேசனே."

தம்பூரின் சுருதியோடு திருச்சந்த விருத்தம் நெஞ்சுள் வெகுநேரம் சுழன்றது. எல்லாம் கிடைக்க இந்தப் பாட்டு ஏன்? பாட்டினால் கேள்வி எழுந்தது. கேட்க நினைக்கும்போது பயம் வந்தது. சரளமாய் அரட்டை அடிக்கிறவர்களிடம்



விளையாட்டாய் எதுவும் கேட்கலாம். அமைதியாய் உட்கார்ந்திருக்கிறவர்களை சட்டென்று உலுக்க முடிவதில்லை. அவர்கள் அமைதி கலைக்க விருப்பம் வருவதில்லை.

## 7

பெண்ணற்று ஏன் ஆணால் இருக்க முடியவில்லை? அப்படி என்ன ஒரு கொலை பாதக ஈர்ப்பு வலிவற்று அவள் முன்னே ஒழுக்கத்துடன் நிற்க என்ன காரணம்?

இது ஒரு இடைப்பட்ட தளர்ச்சியா? நான் வாழ்க்கையில் சற்று குழம்பட்டும் என்று ஏற்படுத்திய மாயமா? தவறா? வழி மயக்கமா? பெண் சொத்து என்பதெல்லாம் நடைக் பின்னால் வந்த விவகாரம். சொத்தா இல்லையா என்பதெல்லாம் இன்னும் முடிவு பெறாத நாகரீகக் கூட்டம். இதற்கும் முன்னால் முதுகு குனிந்த குரங்குக்கும் நிமிர்ந்து நின்ற மனிதனுக்கும் இடைப்பட்ட காலத்தில் கூட இந்த ஈர்ப்பு இருந்திருக்க வேண்டும்.

பாசம் என்பதேயில்லை. சகலமும் பாலுணர்வு என்கிற அடிவேர் உணர்வுகூட தவறு. பாலுணர்வுக்கு மட்டுமே எனில் மனிதன் பெண்களுக்கு மனைவி என்கிற அந்தஸ்து கொடுத்திருக்க மாட்டான். மண்டி போடவே மாட்டான்.

பெண்களுக்கு ஆண்கள்மீது இத்தனை ஈடுபாடு உண்டோ? பெண்கள் நேசிக்கப் படுகிறார்களே தவிர பெண் நேசிக்கிறாளோ. தெரியவில்லை. தவிர்க்கவே அம்மாவின் மார்பில் முகம் புதைத்து ஆண்கள் மூக்குறிஞ்சி பால் குடித்து அவள் உடல் வெப்பத்தில் தூங்கி மெத்தென்ற மடியில் புரண்டு கழுத்தில் முகம் புதைத்து பின்பக்கம் முதுகோடு ஒட்டி சட்டென்று நடக்கத் தெரிந்ததும் அம்மா பிள்ளையைப் பிரித்து விடுகிறாள். வளர வளர எட்டிப் போய் விடுகிறாள்.

அந்த சுகம் - அந்த இதம் - அம்மா கொடுத்த பாதுகாப்பு அரவணைப்பு இருபது வயது பொறுத்து நினைவுக்கு வந்து விடுகிறது. வெறும் காமம் மட்டுமா காதல்? இதைத் தீர்க்கவா கல்யாணம்?

ஆனால், ஆண் நண்பர்களுக்கு நடுவில் தன் வயது ஒத்த ஆண்களுக்கிடையே பழகுவது எத்தனை விட்டேத்தியாய் இருக்கிறது. அமலேந்திரன் பெண்ணாய் இருந்தால் இப்படி

ஒரு நட்பு வருமா? வாய்ப்பே கிடைத்திருக்காதே.

முழங்காலை அவிழ்த்து நண்பர்களிடம் கொடுத்தது போல, அந்தப் பெண்களிடம் ஏன் முடியவில்லை? அந்தப் பெண்களிடம் ஏன் நட்புறவில்லை? ஏகப்பட்ட பேர் மரக்காலுக்கு கேலி செய்திருக்கிறார்கள். பரிதாபப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் சுற்றிப் பேசியதும் கண்ணில் நீர் முட்டியதே.

ஒரு முறை மிதிபட்ட பிறகும், ஏன் அந்த ஆசை - பெண்ணாசை நெஞ்சில் துளிர் விடுகிறது?

பஞ்சகச்சம் கட்டி தீ வலம் வந்து கால் மடித்து உட்கார்ந்து மந்திரம் ஓதி முடியுமா? இல்லை முடியாது.

இந்த நாடகங்களில் மணமகன்தான் ஹீரோ. ஆனால், நான் ஹீரோ இல்லை. கோமாளி, பஃபூன். சாஸ்திரிகள் கூட கேலி செய்யலாம்.

"நொறுக்கு நொறுக்குன்னு நடக்கறானே... மெரிச்சுடப் போறான் சித்த தள்ளி உக்காரு."

நான் கோமாளி எல்லா அங்கஹீனர்களும் கோமாளிகள். பேண்ட் போடும் வழக்கம் காப்பாற்றுகிறது. தட்டுச் சுற்று வேஷ்டி கூட தடுக்கும். லுங்கிகூட சிக்கும். பைஜாமாதான் சௌகர்யம்.

அப்படியே திருமணம் என்று ஒன்று நடந்தால்கூட இந்த ஆட்டங்கள் தனக்கு அவமானம்தான் தரும்.

முரளி விட்டம் பார்த்தபடி கிடந்தான். இந்த வேதனையை யாரிடம் போய் சொல்ல முடியும்? யாருக்குப் புரியும்?

ஆனால், வீட்டில் யாரும் முரளி கல்யாணம் பற்றி பேசவேயில்லை.

சபாவில் அன்று ஏதோ சிரிப்பு நாடகம். முரளி கேட் கலெக்ஷனை எண்ணிக் கொண்டிருந்தான். உள்ளே இரண்டு நிமிடத்திற்கொரு முறை சிரிப்பலை எழுந்து எதிரொலித்துக் கொண்டிருந்தது. வசனங்கள் தெளிவாய் காதில் விழவில்லை. மொத்தமாய் நூறு பேர் சிரிக்கிறதை கேட்கிறபோதே சிரிப்பு வந்தது.

முரளி கேட்டில் டூட்டியிலிருக்கிறபோது நாடகம் பார்ப்பதில்லை. பார்க்க வேண்டிய நாடகமாய் இருந்தால் வேறு சபாவுக்குப் போய்விடுவான். வரவேற்று, அவன் கால் நீட்ட வசதியாய் முதல் வரிசை நாற்காலியில் உட்கார



வைத்துவிடுவார்கள்.

பணத்தை எண்ணி கட்டுகளாக்கி தோல் பையில் போட்டு சீட்டுகளை இன்னொரு பண்டிலாக்கி எடுத்து வருகையில் யாரோ ஒரு பெரியவர் இருமியபடி வெளியே வந்தார்.

சிரித்துச் சிரித்து புரைக்கேறி விட்டது போலும். இருமியபடி சிரித்தார். கண்களில் இருமலின் சீற்றம் தாங்காமல் நீர் வழிந்தது. இருமலில் தண்ணீர் குடிக்க மேலும் புரைக்கேறிற்று தவித்தார்.

முரளி அவர் அருகில் விரைந்தான். போஸ்ட் மாஸ்டர்.

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துவள தாங்கிக் கொண்டான். மெல்ல தரையில் கிடத்தினான்.

தண்ணீரா கூமா இல்லை... சிரிப்பா... நெஞ்சுக் கூடுக்குள் எது சிக்கிக் கொண்டதோ தெரியவில்லை. வலி தாங்காமல் போஸ்ட் மாஸ்டர் துடித்தார். அமலேந்திரன் தொலைவிலிருந்து கவனித்து விட்டு ஓடி வந்தான்.

நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு அதீதமாய் இருக்கிறதென்று கவலைப்பட்டான். போஸ்ட் மாஸ்டர் திணறினார். முரளியின் காரை ரிவர்ஸ் எடுத்து வாசல் போட்டுக் கொண்டு நர்ஸிங் ஹோம் நோக்கி விரைய அரங்கத்திலிருந்து இரண்டு மூன்று பேர் மட்டுமே ஆவலுடன் திரும்பிப் பார்த்தனர்.

"ஒன்றுமில்லை. எக்ஸைட்மெண்ட் ஆஸ்த்மா பேஷண்டு போல இருக்கு. இப்ப பல்ஸ் ஓகே. தூங்க ஊசி போட்டிருக்கேன். நீங்க என்ன உறவு..." டாக்டர் எழுந்திருந்தார்.

முரளி விவரம் சொன்னான். "அட அந்த சபாவா? இன்னிக்கு ஒரு நல்ல டிராமா இருக்கே."

"அதனால வந்த வினைதான்."

"தனியாவா வந்திருந்தார்? வீடு எங்கே?"

"தேடணும் டாக்டர்."

"முரளி, சபா வாசலுக்குப் போய் விசாரிக்கட்டுமா, கூட யாராவது வந்திருக்காங்களான்னு."

"அந்த டிராமாவை விட்டுப் பாதில யாரு எழுந்து வரப் போறா? வந்து என்ன இப்ப... தானா தெரிஞ்சு வரட்டும்."

"வீடு எதுன்னு போய் கேக்கலாமே."

"அம்பத்தஞ்சு வயது ஆள் காணும்னு தேடாதயா போவாங்க? சும்மா இரு."

"என்னடா சொல்ற நீ?"

"இவங்க வீடு தெரியும் எனக்கு."

"எங்கப்பா இருக்காரா..? உமா உள்ளே பதட்டமாய் ஓடி வந்தாள். பின்னால் அவள் தங்கை ஓடி வர அக்காவும் தங்கையும் வாயடைத்து அப்பாவைப் பார்த்தனர். அருகில் போய் மெல்ல தொட்டு அசைத்து உசுப்பி கண் கலங்க, முரளி அவர்களை அமைதிப் படுத்தினான். மறுநாள், போஸ்ட்மாஸ்டர் நர்ஸிங் ஹோமிலிருந்து நடந்தே வீட்டுக்கு வந்து விட்டார்.

"சிரிச்சுண்டே தண்ணி குடிச்சேனா... இருமல் வந்துடுத்து. என்னமோ சொடக்குன்னு ஒரு வலி நெஞ்சில, விழுந்துட்டேன்."

வீட்டிற்குப் போய் அமலேந்திரனும் முரளியும் நலம் விசாரிக்கையில் போஸ்ட்மாஸ்டர் புகையிலை அதக்கலுடன் பேசிக் கொண்டிருந்தார். சிறியவள் பலமுறை இருவருக்கும் நன்றி சொல்ல, பெரியவள் எதுவும் பேசாது காபி கொண்டு வந்து வைக்க, அந்தக் கணம் ஒரு பொறி விழுந்திருக்க வேண்டும்.

மூன்றாம் மனிதரிடையே அப்பாவைத் திட்டாத பெண், உதவிக்குப் பலமுறை நன்றி சொல்லாத பெண், புடவை விலகாது நடந்து போகிற பெண், முகத்தில் சதா ஒரு கவலையோடு இருக்கிற பெண்.

அமலேந்திரனிடம் இதுபற்றி திரும்புகையில் சிலாகித்தபோது, விழிக்கோடியில் முரளியை உறுத்துப் பார்த்தான்.

"கண்ணா, ஜோக் அடிக்கிற பொண்ணு. ஜோக் அடிச்சா பெரிசா சிரிக்கிற பொண்ணு. பாத்தா ஆம்பளைக்குக் கொஞ்சம் பயம். நம்ம ஜோக்குக்கு மட்டுமா சிரிப்பா..? இன்னும் எத்தினிபேர் ஜோக் அடிப்பானோ எப்படியெல்லாம் சிரிப்பாளோன்னு முதல் பயம். ஜோக் அடிக்க புத்திசாலித்தனம் வேணும், புத்திசாலி ஆம்பளையா இருந்தாலே நமக்குத் தாங்காது. பொம்பளையா இருந்தா... லோ அடக்கமா இருக்கறவதான் உசத்தின்னு ஒரு நப்புக் கணக்கு. அந்த தங்கச்சிக்காரிக்கிட்ட போய் நாளைக்கு



எனக்குக் கல்யாணம்னு சொல்லு. டக்குன்னு அமைதியாயிடும். அதாவது அமைதிங்கறது பொம்பளை போடற முதல் வேஷம்.

பொம்பளை சிரிச்சா போச்சுன்றது பொண்ணுக்கு எதுவும் போவாது. சத்தி இருக்கிறவன் காலிங்கு அர்த்தம். ஆகவே அடக்கமானவள் தான் உசத்தின்றத நான் நம்பமாட்டேன். ஏன்... என் வீட்டு பொம்பளை கல்யாணத்துக்கு முன்னே ஒரே வெக்கம்... கேலி பண்ணா அழுதுடும். எயறு அதட்டினா உடம்பெல்லாம் நடுங்கிப் போயிடும். இப்ப ரெண்டு பெத்ததுக்கப்புறம் பாரு... அச்சமாவது நாணமாவது. தலைல எண்ணெய் வச்சுக்கிட்டு மார் குறுக்க பாவாடை முடிஞ்சுக்கிட்டு இதுமட்டும் பாத்துட்டு குளிக்கப் போறேன்னு டிவி முன்னாடி உக்காந்திருக்குது சரி... ஊட்ல நான மட்டும் தான். இல்லேங்கல... கல்யாணத்தன்னிக்கு மூஞ்சி சிவந்து வெக்கப்பட்ட பொம்பளை எங்கே... வேஷம் தான்... வெக்கப்படற பொம்பளையை நான் நம்பறதில்லை."

ஏன் இவன்கூட பேசினோம் என்றாகி விடுகிறது எழுவது கேட்டது அமலேந்திரன மனைவி மட்டுமில்லை. அமலேந்திரனும்கூட இதைக் குத்திக்காட்டியபோது அமலேந்திரன் மேலும் ஒருபடி தாவினான்.

"காதல்னு ஒன்னு கிடையாதுன்னு சொல்லியிருக்கேன் உனக்கு. ரொம்ப நாள் முன்னாடியே. அதே மாதிரி காமம்கூட இல்லாத நேரம் வரும் பழகப் பழக காமம்கூட போர் வெறும் புளிப்பு. பொம்பளை மேல் இருக்கிற காமம் போயிடும். காச மேல இருக்கிற காமம் தான் அறுக்கறது கஷ்டம். காச தாண்டா சுகம். நல்ல சாப்பாடு... தூக்கம்... ஊரல ஒரு கௌரவம்... டேங்கப்பா... இதான் பெரிய காமம்."

"ஆனா அமலேந்திரா என்னிடம் காசு இருக்கிறது. காசுக்குக் காமம் தீர்க்கலாம். காதல் வருமோ? காதல் கடையில் கிடைக்குமோ? அமலேந்திரா நீ பேயை நேசிக்கிறாய். நான் பெண்ணை நேசிக்கிறேன். நமக்குள் இடைவெளி இருக்கிறது நண்பனே."

8

ஆனால், இவையெல்லாம் சந்திப்புகள்தான். அதே உமா என்று எந்த கூட்டத்திலேயும் கண்டு பிடித்து விடுகிற மாதிரி அடையாளம் மனசுக்குள் பதித்துக் கொள்கிற

சந்திப்புகள் தான். கைவீச்சும், பின் பக்கத்திலிருந்தபடியே இடுப்புச் சரிவையும், தோள் பட்டை சரிவையும் வைத்து அடையாளம் தெரிந்து கொள்ளக் கூடிய பரிச்சயம்தான்.

எத்தனை வருஷம் கழித்து இனி உமாவைப் பார்த்தாலும் 'உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கு' என்று சொல்ல முடியாது. கண்களை வைத்து அடையாளம் கண்டு கொண்டு விட முடியும். மூக்கும் வாயும், முகவாயும், கன்னமும் சுருங்கி அமைப்பு மாறினாலும் 'பார்வையின் அமைப்பு மாறுவதேயில்லை. உலகத்தில் கைரேகை மாதிரி பார்வையும் தனித்தன்மையான விஷயம் தான். ஒரு அடையாளம்தான்.

இந்த நட்பு, இல்லை பழக்கம் கொஞ்சம் மயக்கம் கொடுத்ததே தவிர உருக்கிப் போடவில்லை. உருக்கிப் போட்ட நாளும் வந்தது.

போஸ்ட் மாஸ்டர் குருசாமியானபோது ஐயப்ப பூஜை என்று ஒரு விசேஷம் வந்தபோது உள்ளே மின்னல் அடித்து நட்பு நேசமாயிற்று. விரதம், பூஜை என்று கார்த்திகை மாதம் டொனேஷன் சீட்டாய்... தகர உண்டியலாய்... உள்ளங்கை விரிப்பாய் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் வருவதுண்டு. வந்த ஆளுக்குத் தகுந்தபடிதான் பர்ஸிலிருந்து காசு வருமே தவிர ஐயப்பசாமி என்கிற பரவசம் வந்ததில்லை. ஏனோ கோவில் குளம், பூஜை ஒட்டவில்லை. எதற்கு இவையெல்லாம் என்கிற எதிர்ப்பு இல்லை. இணக்கமும் இல்லை.

என்ன தவம் செய்தாலும் இந்தக் கால் முளைக்காது என்று பதினாறு வயதில் பட்டிருக்கவேண்டும். தனக்கு இது பெரிய தண்டனை என்கிற கோபம் வந்திருக்க வேண்டும். நமக்குத் துணை இனி நாம்தான் என்கிற உறுதி வந்திருக்க வேண்டும்.

இந்த எண்ணங்கள் எதுவுமே திட்டமிட்டு வரவில்லை. தோன்றித் தோன்றி மறைந்து மனதின் உள்ளே பூஜை புனஸ்காரங்களோடு ஒட்டாத தன்மை வந்திருக்க வேண்டும்.

ஆனால் திடுமென்று அமலேந்திரன் ஐயப்பசாமிக்கு மாலை போட்டுக் கொண்டு வந்தான். நெற்றியில் சந்தனக் கீற்று புதிய கருப்பு வேட்டி சட்டை கழுத்தில் துளசி மாலை இரண்டு நாள் தாடி.

"என்னடா இது திடீர்னு?"

"என் வீட்ல கம்பல் பண்ணாங்க. வருஷத்துல கொஞ்ச நாளாவது ஒழுக்கமா இருன்னாங்க."



முரளி சிரித்தான்.

"சிரிக்காத சாமி காரியம்."

"சரி சிரிக்கல. நீ ஒழுக்கமா இருக்கணுமே."

"போடா சாமிகிட்ட விளையாடக்கூடாது. இருக்கணும்னா இருந்துடுவேன். நூத்தியொரு ரூபா காசு எடு."

"எதுக்கு?"

"உன் பேருக்கு அர்ச்சனை."

"எங்கடா?"

"போஸ்ட்மாஸ்டர் வீட்ல."

"அடடே."

"அவருதான் குருசாமி. நாப்பது பேரு பஸ் ஏற்பாடு பண்ணிப் போறோம். டீலக்ஸ் கோச்."

"நூறு சொல்லு."

"வேணாம் விளையாடாத காசு எடு."

முரளி செக் எழுதிக் கொடுத்தான்.

"சாமி சரணம். இது மட்டும் போறாது பஸ் ஓனர் பாத்து நீ கொஞ்சம் பேசி ரேட் இறக்கணும்."

"உனக்குன்னா செய்றேன்."

"சாமிக்குச் செய். பூஜைக்கு வந்துரு." தெரு முழுக்க இருபதடிக்கு ட்யூப்லைட், மின்னும் ஒலிப் பெருக்கிகள். போஸ்ட் மாஸ்டர் வீட்டில் பந்தல். தென்னங் குருத்துத் தோரணம், வாழை, கமுகு வரிசை. வந்தவுடன் காபி. கரகம் காவடியுடன் யானைமீது படம் வைத்து ஊர்வலம். செண்டை முழக்கம். தீப வரிசைகள்.

கூவிக் கொண்டிருந்த அமலேந்திரன் திடுமென்று நான்கு ஐயப்பன் சாமிகளைக் கூட்டி வந்து அறிமுகப் படுத்தினான்.

"சார் முரளிதரன். இவருதான் ஆடிட்டர்."

கை கூப்பினார்கள்.

"என்னடா இது?"

"வாடா போடான்னு இப்ப அவரை சொல்லக் கூடாது. என்ன சாமின்னுதான் கூப்பிடணும்" அறிமுகமானவர் வலியுறுத்தினார்.

முரளிக்கு மெல்லியதாய் கோபம் வந்தது.

"கோவப்படாத சாமி. உனக்கு இன்னும் நாலு பார்ட்டு வரும் பார். இதுனால இந்தத் தடவை பூஜைக்கு வந்துட்டேன். அடுத்த தடவை நீயா வந்து மாலை போட்டுக்க போற பார். ஐயப்பன் சக்தி இது."

முரளி அமைதியாய் நின்றிருந்தான்.

எதிர்க்கிற இடம் இல்லை. இது எதிர்க்கிற நேரமும் இல்லை. ஆனால் அமலேந்திரா, எந்த இடத்தில் தந்திரம் அழிகிறதோ, எந்த இடத்தில் குயுக்திகள் பொடிப் பொடியாகின்றனவோ, எங்கே ஆரவாரம் குறைந்து அமைதியாகின்றனவோ, எங்கே வேடமற்ற நிர்வாணம் வருகிறதோ, எப்போது வெறுமே இருத்தல் முடிகிறதோ, அதுவே உத்தமமான நிலை.

இறை வணக்கம் - தந்திரம் கூட்டுமானால், கூச்சலின் இடமானால், போட்டி கணக்கு வந்து விட்டால், அந்த வணக்கத்தை ஒழி.

இருமுடி கட்ட ஆரம்பித்து கூட்டம் ஒரு இடத்தில் குவிய ஆரம்பித்தது. முரளி இருந்த இடம் விட்டு அசையாது இருந்தான்.

இதை யாரிடம் சொல்வது. உணர்தலே இறை என்று எவரிடம் சொல்வது? சொல்ல வாதம். விவாதம் வரும். மறுபடி கூச்சலில் முடியும். இவர்களைத் தவறு என்று சொல்ல நான் யார்.

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொய்களாம்
பேசுவதும் திருவாயான்
மறைபோலும் காணேடி...
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ.

உள்ளே சட்டென்று பத்தாவதில் படித்த பாட்டு நினைவுக்கு வந்து கண்ணில் ஈரம் கட்டிற்று.

வீட்டிற்குள்ளிருந்து உமா வெளியே வந்தாள். அருகில் உள்ள நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"ஏன் தனியா உக்காந்திருக்கீங்க?"

"உள்ள போக பயமா இருந்தது. இங்கயே இருந்துட்டேன்."



"ஏன் என்ன பயம்?"

"இதுக்கெல்லாம் எனக்கு போக்கியதை இல்லையோன்னு ஒரு பயம்."

"புரியலையே."

"இதையெல்லாம் மனசார செய்யணும். பிளாஸ்டிக் பவுனை சாமின்னு கண்ல ஒத்திக்கணும். உடம்பும் மனசும் ஒடுங்கி இதான் சாமின்னு ஒரு பையை தலையில் பரவசத்தோட வச்சுக்கணும்."

"ம்ம்.. என்ன அதனால?"

"எனக்கு செய்யும் போதே கேள்வி வரும். இது சாமிதானான்னு."

"அட..." உமா திரும்பி முரளியைப் பார்த்து உட்கார்ந்து கொண்டாள். "கேள்வில என்ன தப்பு கேட்டுக்கலாமே."

"கேக்கறதுல தப்பில்லை. கேட்டுத் தெரிஞ்ச பிறகு, ஆமாம் இதுதான் சாமின்னு செய்யலாம். கேள்வியே கேட்காமலும் இருக்கலாம். கன்னத்துலயும் போட்டுண்டு இது இல்லா சந்தையா கேள்வி வந்தா இரண்டும் அர்த்தமில்லாம போறது."

"ஸோ..."

"ஸோ.. எனக்குக் கேள்வியும் வேண்டாம்; செய்கையும் வேண்டாம்னு வேடிக்கை பார்க்கறவனா இருக்கேன்."

"போன வார கச்சேரில கூடவா?"

"ஆமா."

"அசையாத உக்காந்து வேடிக்கை பார்த்தா வியப்பு இல்லையா?"

"வியச்சது அந்த சப்தத்தில பாட்டுக்கு அர்த்தம் புரியலை. அந்த சப்த ஒழுங்கு வியக்க வச்சது. வயலின் சேர்ந்து வர்ற ஸ்வரம் அதன் கணக்கு எதுவும் தெரியலை. ஆனாலும் இரக்கம் இருந்தது."

"பெரிய பிலாசஃபியா இருக்கே."

"அடடே அப்படி எந்தக் கௌரவமும் இல்லை. எனக்கு வேண்டவும் வேண்டாம்."

"கொஞ்சம் கோபமா இருக்கேளா?"

முரளிதரன் தலையைக் கோதிக் கொண்டான். "வாஸ்தவம்

கோபமில்லை ஒரு மாதிரி பதட்டம். இவ்வளவு ஆரவாரம் இத்தனை ட்யூப்லைட் இவ்வளவு படாடோபம், இவ்வளவு லவுட்ஸ்பீக்கர் பாக்கற போது பதறிப் போறது. இது இல்லையே இது இல்லையேன்னு கதறல் வர்றது. சொல்லத் தெம்பில்லை சொல்லத் தெரியலை. சொன்னாலும் யாருக்குப் புரியும்?"

"எனக்குப் புரியறது." அவள் அமைதியாய்ப் பேசினாள்.

முரளி வியப்போடு பார்த்தான்.

"உள்ளே இருக்கப் பிடிக்காமதான் நானும் இங்க வந்துட்டேன். யாரோ ஒரு அம்மா எனக்குப் பக்கத்துல சாமி வந்து கூச்சல் போட்டா. எல்லோருக்கும் ஆசீர்வாதம்னு கத்தினா. இத்தனை பயமுறுத்தலா? இவ்வளவு அதிகாரமா, இத்தனை உரத்த குரலா? மனசுல வாழ்கன்னு நினைச்சா போறாது. குரல் எதுக்கு?"

"டேயப்பா... இதுதான் பிலாஸஃபி. ஆனா உங்களுக்குக் கோபம் வரலையோ இது பாத்து?"

"இல்லை ரொம்ப சோகமா இருந்தது. எழுந்து வந்துட்டேன். இப்படி சாவாற நடக்கலாமா? வேகறது உள்ள."

நடந்தார்கள்.

உடம்பு வெப்பம் குறைந்து குளிர் காற்றை உடம்பு உணர ஆரம்பித்தது. மனசு லேசாயிற்று.

"ஒரு விஷயம் கேக்கணும் உங்களை." முரளி மௌனம் கலைத்து ஆரம்பித்தான்.

"கேளுங்களேன்."

"இத்தனை வயசுக்கப்புறம் நான் பாட்டு கத்துக்கலாமா. எனக்குப் பாட வருமா?"

"எல்லாருக்கும்தான் பாட வரும். பாடாதவர் யாரு. நன்னா பாடறதுன்னா... அதுக்குப் பயிற்சி வேணும். அவ்வளவு தான்."

"இல்லை. சங்கீதமா ஸ்வரஞானத்தோட..."

"எதுக்குக் கத்துக்கணும் திடீர்னு என்ன அவஸ்யம் இப்போ?"

"இன்னும் ஆழமா பாட்டை ரசிக்கலாமே."

"தேவையில்லை. ஆரோகணம், அவரோகணம், அரை மாத்திரை, கால் மாத்திரை, அந்தத் தாளம் இந்த தாளம்னு கணக்குல புத்தி போகும். ரசனை குறைஞ்சு சந்தேகம் வரும்.



ரசிப்பு குறையும். ஒழுங்கான சப்தம் இறங்க அடிக்கிறதுன்னேனே... அதுதான் உசத்தி. நானே [illegible]ண்டதை மறக்கணும்னு நினைக்கிறேன்."

"ஏன்..?"

"பாதி நாள் தம்பூர் சுருதி எத்திட்டுப் பாடாதயே இருந்துடறேன். சுருதி போதும் என் சப்தம் எதுக்குன்னு படறது?"

"அடேங்கப்பா."

"அலட்டிக்கலை. எங்கப்பா, சோம்பேறி, வாயத்தொறந்து பாடுங்கறார். எப்படி புரிய வைக்கறது. சங்கீதம்கூட சிலிருன் மாதிரிதான். இடது வலதும், மேல கீழுன்னு நிறைய சடங்கு வந்துடறது. இந்த ராகத்துல நிஷாதம் கலக்காதேங்கறார் அப்பா. கலந்தா என்னன்னு தோணறது?"

"ஒழுங்கு முறை அவஸ்யம்தான்."

"எதுக்கு ஒழுங்கு? மனசு ஒரு முகப்பட்டதானே."

"மனசு ஒன்னா கூடிட்டா அதுல சங்கீதமா இருந்தா என்ன? தாரை தப்பட்டை சத்தமா இருந்தா என்ன?"

"எங்கேயோ வந்துட்டோம்." முரளி அதிசயித்தான்.

"ஆமாம். பேச்சு ரொம்ப உயரத்துலதான் போயிடுத்து."

"நான் நடந்த தூரம் சொன்னேன்."

"அட... அதுவேற கவனிச்சேனா. இது என்ன இடம் எனக்குத் தெரியலையே?"

"இதுதான் என் குறை. பேசறபோதே நடக்கற தூரம் தெரியறது. செய்ற போதே இது என்னன்னு கேள்வி வர்றது. ஒரே நேரம் ரெண்டா இருக்கேன். உள்ள ஒரு ஆள், வெளிய ஒரு ஆளா அலையறேன்."

"தப்பில்லை. இது சகஜம். பிரிஞ்சு ரெண்டா நினைத்தாக்கன்னா இடதும் இல்லை வலதும் இல்லை. வெறுமிடம்தான்."

"இந்த ஈடுபாடுங்கறது பத்தி எனக்கு ஒரு ஸ்நேகிதர் சொல்லிக் கொடுத்தார். சொன்னது புரிஞ்சது. ஆனா செய்கையா வரலை. காரத்தே மனி கேள்விப்பட்டிருக்கேளா."

"ம்ம.. ஒரு சினிமால பாத்திருக்கேன்."

"வெறும் சினிமா ஆக்டர் இல்லை அவர்."

"தெரியும். ஏதோ ஸ்கூல் நடத்தறார்னு படிச்சேன். காராத்தே ஸ்கூலா?"

"அப்படி வெறும் சண்டை கத்துக் குடுக்கற ஆளும் இல்லை. ரொம்ப ஆழமான ஆசாமி. சாதாரணமா பேசமாட்டார். பேசினா எங்கயோ போயிடும். நாம பேசின மாதிரி."

"சொல்லுங்கோ."

"ஒரு க்வான் சொன்னார்."

"என்னது?"

"க்வான். ஜென் புத்த கதைன்னு வச்சுக்கலாம்."

"ஒரு சின்ன சம்பவம். கதை மாதிரி சொல்லப்பட்டிருக்கும். யோசிச்சா... யோசிப்புகூட இல்லை. அந்த சம்பவம் உணர்ந்தா சட்டுன்னு உள்ள ஒரு நிலை மாறிப் போயிடும்."

"விகசிப்புங்கறாளே...? அது மாதிரி... ப்ளீஸ்னு இங்கிலீஷ்ல சொல்றாளே... அதுமாதிரி."

"இருக்கலாம். கதை சொல்றேன் கேளுங்கோ."

முரளி மௌபரீஸ் ரோட் பஸ் ஸ்டாண்ட் விளக்கு வெளிச்சத்தில் பனிக் காற்றில் நின்றபடி அவளுக்கு க்வான் சொன்னான். தனக்குத் தெரிந்ததை தான் கற்றதைப் பகிர்ந்து கொள்ளும் ஆவலில் ஒரு உற்சாகம் பிறக்கப் பேசினான்.

கேட்பவருக்கு செவியும் புத்தியும் மனசும் கூர்மையானால் சொல்பவனுக்கு உள்ளே ஒரு நெகிழ்வு வரும். நெகிழ்வில் சிரத்தை வரும். சிரத்தை உள்ள செயலில் சத்தியம் தெரியும். சத்தியமே சந்தோஷம். உறவு பரஸ்பரமானது. பகிர்ந்து கொள்வது. இன்னதுதான் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிற வரைமுறை அற்றது. வரைமுறைகள் வரும்போது சொல்பவன், கேட்பவன், குரு, சீடன் என்கிற வெவ்வேறு இடங்கள் தோன்றி விடுகின்றன. ஆண் பெண் உறவில் கணவன் மனைவி ஸ்தானத்தில் பீடங்கள் ஏதுமில்லை. பாவங்கள் ஏதுமில்லை. நட்பே உறவு.



## 9

கற்றுக் கொள்ளல் தன் அடிமைத் தனத்தை அதிகப்படுத்திக் கொள்வது நல்ல உத்தி என்று எல்லோரும் நினைக்கிறார்கள். பவ்யம் என்பது ரொம்ப முக்கியம் என்று அடித்துப் பேசுகிறார்கள். காலடியில் கை கட்டி உட்கார்ந்திருத்தல் பவ்யத்தின் முதல் படி என்று நினைக்கிறார்கள்.

வெள்ளை பேப்பராய் வெறும் சிலேட்டாய் இருத்தல் முக்கியம் என்பது தெரியவேயில்லை.

குருவாய் இருத்தல் ஒரு கொடுமை. மேய்ப்பவனைப் போல ஒரு நிலை. ஆடுகள் கடைசிவரை தீனி தின்பது தவிர ஏதும் கற்றுக் கொள்வதில்லை. எத்தனை அடிபட்டாலும் மலங்க மலங்க முழிக்குமே தவிர அறிவது என்பது வராது.

சீடனாய் இருப்பதைவிட தாசியாய் இருக்கலாம். தாசிக்கு எப்படி கூடல் கொடுமையானதோ குறைந்த உழைப்பில் நிறைய காசு என்கிற தந்திரம் வருமோ, அதேபோல சீடனாய் இருப்பவனுக்கும் படிப்பு ஆவல் அற்ற விஷயமாய் போகும். குருவை ஏமாற்றும் புத்தி போகும். நான் எத்தனை துணி தோய்த்து காகிதம் கற்றுக் கொண்டேன். நீலம் சலவைத் துணிகளை நீரில் நனைத்து மறுபடி சலவைச் செய் என்கிற கொடுமை சீடன் குருவாய் வரும்போது வருகிறது. அவனுடைய சீடன் இன்னும் கடுமையாய் மாற படிப்பு அறிதல் அறவே அழிந்து போகிறது.

ஏகலைவன் எப்படி கற்றுக் கொண்டான் என்பது கேள்வியில்லாமல் போய் விட்டது. அப்படி ஒரு வழி இருக்கிறது என்பதை உலகம் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டது. தொலைவில் நின்றபடி கற்றுக் கொள்ளும் ஆசையை வைத்துக் கொண்டு அர்ஜுனனுக்கு இணையாய் அறிந்து கொண்டான் ஏகலைவன். அதுதான் படிப்பு.

அவனிடம் தட்சணை கேட்ட உபாத்தியாயன் திருடன். சீடனை அவமதித்ததால் பிள்ளைப் பாசத்தில் செத்துப் போனான்.

ஏகலைவன் கட்டை விரல் கொடுத்திருக்கக் கூடாது. 'கட்டை விரலா எடுத்துக் கொள்ளுங்கள் முடிந்தால் துரோணரே' என்று வில் வளைத்திருக்க வேண்டும். உலகம் திசை மாறியிருக்கும்.

குருவால் சீடனும், சீடனால் படிப்பும் பாழாயிற்று. 'குருவற்று இரு' என்று சொன்னவன் ஞானி. உனக்கு நீயே குரு என்று அவன் சொன்னது அகந்தை வளர்ப்பதற்காக இல்லை. அறிவர்கடனை முழுவதும் தாண்டச் சொன்னவை. மந்தையில் ஒன்றாய் இல்லாமல் மனசு ஒழுக்கக் கண்ணாய் இருக்கச் செய்யும் நிலை.

படிப்பு என்பது பகிர்தலில் வர வேண்டும். கேட்பவனும் சொல்பவனும் அந்த நிலையில் விழிப்பு துவங்கும். விழித்திருக்கிறவன் சகல நேரமும் படிப்பவன்.

க்வான் சொன்ன முரளியும், கேட்ட உமாவும் தங்கள் ஆண் பெண் பேதமையை மறந்து உலகியல் அந்தஸ்து கடந்து சொல்லப்பட்ட விஷயத்தை அனுபவித்தார்கள். அந்த ஜென் புத்தக் கதைக்குள் ஆழ்ந்தார்கள்.

ஒரு ஜப்பானிய டீ மாஸ்டர், ஒரு சமுராய் வீரனை தாங்குகிறபோது இடறி விழுந்து விட்டான். டீ மாஸ்டர் லேசான போதையில் இருந்ததால் சமுராய் வீரனை ஏசி விட்டான்.

சமுராய் என்பவன் நீண்ட உடைவாள் கொண்ட போர் வீரன்.

ஜப்பானில் தேனீர் விருந்து என்பது ஒரு பெரிய கலை. அந்தக் கலையில் உயர்ந்தவனை டீ மாஸ்டர் என்பார்கள்.

தடுக்கி விழுந்து ஏசிய டீ மாஸ்டரை சமுராய் வீரன் தனிப் போருக்கு அழைத்தான். ஜப்பானில் தனிப் போருக்கு அழைத்தால் ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையெனில் ஹராகிரி செய்து கொள்ள வேண்டும். அதாவது கத்தியை வயிற்றில் செருகி தற்கொலை செய்து கொள்ள வேண்டும்.

டீ மாஸ்டருக்குக் கத்தியை கையாளத் தெரியாது. அவன் போர் வீரனில்லை. டீ மாஸ்டர்.

சமுராய் தெரிந்த ஒரு புத்த மடாலயத் தலைவரிடம் டீ மாஸ்டர் நடந்ததைச் சொன்னான். முப்பது நாட்கள் கழித்துத் தனிப்போருக்கு நாள் குறிப்பிட்டதைச் சொன்னான். சமுராய் போர் முறை கற்றுத்தரக் கேட்டான். தான் கத்தியே தொட்டதில்லை. தான் ஒரு டீ மாஸ்டர் என்பதை வெளிப்படுத்தினான்.

மடாலயத் தலைவர் புன்னகை செய்தார். "ஒரு நாளைக்கு எத்தனை முறை தேனீர் விருந்துக் கலையைச் செய்கிறீர்



நண்பரே."

"மூன்று முறை."

"இனி ஏழுமுறை செய்யவும்."

"சரி."

இருபது நாட்கள் கழிந்தன. டீ மாஸ்டர் மடாலயத் தலைவரிடம் மறுபடி விண்ணப்பித்தான். "வாள் பயிற்சி ஆரம்பிக்கவில்லையே. நாட்கள் கடந்து விட்டனவே."

"பயம் வேண்டாம். பயிற்சி தரப்படும். இப்போது ஏழுமுறை தேனீர் விருந்து கலைப்பயிற்சி செய்கிறீர்கள் அல்லவா. அதைப் பதினாறு முறையாக்குங்கள்."

தினமும் பதினான்கு முறை தேனீர் விருந்து கலை நடத்தப்பட்டது.

அன்று மதியம் தனிப்போர்.

டீ மாஸ்டர் மடாலயத் தலைவரை வணங்கினான். 'வாள் பயிற்சி இனி இயலுமா' சந்தேகம் தெரிவித்தான். கலங்கினான்.

"பயம் வேண்டாம் நண்பரே.. தனிப்போருக்கு செல்லுங்கள். போருக்கு முன் அந்த சமுராய் நண்பரைத் தேனீர் விருந்துக்கு அழைப்பு விடுங்கள்."

"பிறகு.."

"நடப்பதைப் பாருங்கள்."

தனிப்போர் நேரம் வந்தது. சமுராய் வீரன் ஆரவாரமாய் வந்து டீ மாஸ்டர் முன்பு நின்றான். "தயாரா?" என்று கேட்டான்.

"தயார். ஆனால் அதற்கு முன் என் தேனீர் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும். வருவீர்களா?"

"நிச்சயமாய்."

தேனீர் விருந்து நடந்தது. துளி தேனீர் சிதறாமல், பாத்திரம் ஓசைப்படாமல், சிறிய பதட்டம்கூட இல்லாமல் அமைதியாய் அழகாய் விருந்து நடந்தது.

சமுராய் வீரன் அதிசயித்தான். கொஞ்சம்கூட பதட்டமில்லாத டீ மாஸ்டரை ஆச்சரியத்துடன் பார்த்தான். இந்த டீ மாஸ்டர் இப்படி அமைதியாய் தேநீர் விருந்து தருகிறானே.. சமுராய் கத்தி வித்தையை முற்றிலும் அறிந்து கொண்டானோ? முப்பது நாட்களில் மூர்க்கமாய் பயிற்சி செய்து பலம் பெற்று விட்டானோ..?

"யார் உனக்கு பயிற்சி அளித்தது?"

"இந்த மடாலயத் தலைவர்"

"ஓ... அவர் நல்ல சமுராய். நான் சண்டையிட விரும்பவில்லை. நீங்கள் வெற்றி பெற்றதாகவே இருக்கட்டும். என் அறைகூவலுக்கு வெட்கப்படுகிறேன்." தேனீருக்கு வந்தனம் சொல்லி எழுந்து போய் விட்டான்.

"என்ன புரிந்தது உமா?" முரளி மிருதுவாய் கேட்டான்.

உமா யோசிப்பின்றி பளிச்சென்று பதில் சொன்னாள்.

"நம்முடைய வேலையில் அது எதுவாயினும் சரி. தெளிவும் ஈடுபாடும் இருந்தால் அதில் இம்மிகூட பிசிறில்லாத சுத்தம் இருந்தால் அந்த தெளிவே பலன். அந்த பலமே ஆரவாரம் கொண்டவர்களை பயமுறுத்தும். எதிரி என்பவரை இல்லாது போகச் செய்யும்."

முரளியின் முகம் முழுவதும் சந்தோஷம் படர்ந்தது. கற்றாரை கற்றாரே காமுறுவர். முரளி காமம் கொண்டான். இது உடல் காமம் இல்லை. புத்தி தாகம். வாழ்க்கை முழுவதும் வஞ்சனையின்றி பரிமாறிக் கொள்ள இப்படி ஒரு பெண் கிடைத்தால் என்கிற ஏக்கம்...

"என்னைக் கல்யாணம் செய்துக்கறியா உமா?"

உமா சம்மதித்தாள்.

அப்பா கை விரித்தார். "நான் போய் பொண்ணு கேக்கமாட்டேம்பா. எம்புள்ளைக்கு காலில்லை இருந்தாலும் பரவாயில்லை, பெண் குடுங்கோன்னு நான் கேக்கமாட்டேன். கல்யாணம் யாரோ.... பெரியவளா, சின்னவளா. பெரிய பெண் பேரு உமா. அவதானா... சந்தோஷம். கல்யாணத்துக்குப் பத்திரிகை அடிப்பியோன்னோ... ஒன்னு எனக்கும் குடு. வரேன்."

அப்பா ஒரு மடாலயம். ஜென் பௌத்தம் என்று ஒன்று இருப்பது தெரியாமலே ஜென் பௌத்தனாய் இருப்பவர். உனக்கென்று இதற்கு முயற்சி செய்யப் போவதுமில்லை. உன் முயற்சியைத் தடுக்கப்போவதுமில்லை. உன் திருமணம் உன் காரியம்.

நடக்கக் கத்துக் கொடுத்தவர். ஒடிந்த காலுக்கு ஒத்தடம் கொடுத்தவர். படிப்புக்குக் காலேஜ் தேடி ஓடியவர். வேலைக்குப் போக வழிகாட்டியவர். என் திருமணத்துக்கு ஏன் உடன்பட மறுக்கிறார். என் முடம் இப்போது ஏன்



அவமானமாயிற்று.

"அடடே... இது எனக்கு அவமானமில்லை. உன்னை ஏத்துக்கறப்போ உன்னை, குறையை முழுசா ஏத்துக்கணும். என் வற்புறுத்தலில் உன்னிடம் தாலி கட்டிக்கக் கூடாது. அப்படி வாழ்க்கைப்பட்டவ உன்கூட சந்தோஷமா இருக்க முடியாது. அப்பா நல்லவர்னு புள்ளைக்கு வாழ்க்கைப்பட்டது அபத்தம் முரளி."

புரிந்தது.

அப்பாவின் மறுதலிப்பை உமாவிடம் சொன்ன போது சிரித்தாள்.

"சரி. எங்கப்பாக்கிட்ட கேட்போம்."

கேட்டான்.

உமாவின் தந்தை போஸ்ட் மாஸ்டர் வாய் பொத்திய படி சகலமும் கேட்டார்.

"சார்... நீங்க நிதானமா அழகா கேட்டேள். கேட்டதும் தப்பில்லை. என் குழந்தைகளுக்கு யாரையும் வசீகரிக்கற குணம் உண்டு. அப்படி வளர்த்தேன். நாலு வித்தைக் கத்துக்குடுத்தேன். கேட்டதுல தப்பேயில்லை. ஆனா, வக்கில்லாதவனாயிருந்தா உங்க பேர் புகழுக்குக் காசு பணத்துக்குச் சரின்னுடுவா. எனக்கு கொஞ்சம் வக்கு இருக்கு சார். ரெண்டு நல்ல இடத்துல என் ரெண்டு பொண்களையும் கரை சேர்க்க என்னால முடியும்."

"இந்த வீட்ல யாராவது உங்க வயசுப் பையன்கள் வந்து போனானா. எவனையாவது பாத்திருக்கேளா. உங்களை நான் வரவிட்டது உங்க காசு பணத்துக்காவா... உங்களைவிட பணக்காரர் இந்த ஊர்ல இல்லையா. சரி உங்களுக்குக் கால் ஊனம். அடிக்கடி வரவேண்டாம்னு சொல்லி உங்க மனசை வேற ஒடிக்கக் கூடாதுன்னு மௌனமா இருந்துட்டேன். இதை அட்வான்டேஜா நீங்க எடுத்துக்கக் கூடாது. ஐயோ பாவம்னு இரக்கப்பட்டதை அப்பன் சோணகிரின்னு நினைச்சிக்கக் கூடாது. இந்த நினைப்பு தப்பு. விட்டுருங்கோ. உமாவுக்கு இன்னும் நல்லா பார்க்கறேன். காசு பணம் பெரிசில்லை சார். பையன் முழுசா இருக்கணும். நான் உங்களைத் தப்பா சொல்லலை. நீங்க கேட்டதை தப்பா எடுத்துக்கலை. ஒரு வீட்ல கல்யாணத்துக்குப் பொண் இருந்தா நாலு பேர் கேட்பா. நாலு பேர்னா நாலு விதம் இருக்கத்தான் செய்யும்.

எனிவே தேங்க்ஸ். என் பொண் கல்யாணம் ஒரு வருஷம் போகட்டும்னு நினைச்சேன். நீங்க இப்படி கேட்டவுடனே சட்டுப்புட்டுன்னு முடிக்கறதே சரின்னு படறது. வரன் பார்த்து நிச்சயம் பண்ணி கூப்பிடறேன். அவசியம் வரணும்."

நினைப்புக்கு எதிர்ப்பதமாய்விஷயம்வருவதை வீரன், சோதனை என்கிறான். கோழை, வேதனை என்கிறான்.

முரளி மௌனமாய் அவர் விஷச்சொற்களை ஏற்றான். சோதனைக்குத் தயாரானான்.

## 10

அப்பா பெண் கேட்க மறுத்ததின் நியாயம் விளங்கிற்று. அப்பாவுக்கு இந்த அவமானம் கொடுக்காமல் இருந்தோமே என்கிற சந்தோஷம் வந்தது.

நான்கு நாள் கழித்து உமாவை சபா வாசலில் சந்தித்தான்.

"ரொம்ப ஒடுங்கிப் போயிட்டேளா?"

"இல்லை."

"நெஜமாவா?"

"எதிர்பார்த்தது தானே. கழுத்தைப் பிடிச்சு தள்ளாதது. அரிவாள் எடுத்துண்டு வராதது பெரிய விஷயமில்லையோ. உனக்கொன்றும் வருத்தமில்லையே உமா."

"இருந்தது. அப்புறம் சரியாயிடுத்து."

"எப்படி?"

"என்னை உலுக்கிக் கேட்டார். அந்தப் பையன் அத்தனை தைரியமா வந்து கேக்கணும்னா உன் சம்மதம் அவன் கேட்டிருக்கணும். நீ குடுத்திருக்கணும்னார்."

"ம்ம்."

"ஆமான்னேன்."

"அப்புறம்?"

"வீடு ரெண்டாச்சு. தங்கை, அம்மா எல்லாரும் கத்தினா. நல்ல வேளை உங்க மேல ஒட்டு மொத்தமா எல்லாரும் பாயலைன்னு சமாதானப் படுத்திண்டேன்."

"கால்தான் குறையா?"

"ஊர் சிரிக்குமாம். மூத்தவளுக்கு என்ன குறைன்னு



ரெண்டாவது பொண்ணுக்குப் பெண் பாக்கவர்றபோது கேள்வி வருமாம்."

"வரும். நியாயந்தான்."

"என்ன நியாயம். எனக்கும் குறை உண்டு. அவ்வளவு அழகில்லை. பெரிய படிப்பு இல்லை. நாலு இடம் பூந்து கொடிபிடிக்கிற கெட்டிக்காரத்தனம் இல்லை. எனக்கு இவர் ஜாஸ்தின்னேன்."

"டேய்ப்பா."

"நீங்க கத்துக்குடுத்தது தானே."

"நம்ம சண்டை அப்புறம். மேல..."

"லவ்வா.. லவ்வான்னு கூச்சல்."

"கடவுளே."

"ஆமாம். லவ்தான். ஐ லவ் முரளின்னேன்."

"ஈஸ்வரா."

"அப்புறம் ஒரு சத்தமில்லை."

"என் ஜாதகம் பத்து காப்பி எடுத்து மளமளவென்று நாலு மேரேஜ் பீரோவுக்குப் போஸ்ட் பண்ணி பக்கத்து வீட்டு ராயர்லேர்ந்து பால்கனி வரைக்கும் நல்ல பையனா இருந்தா சொல்லு மூத்தவளுக்குன்னு புலம்பல்."

"தட் மீன்ஸ்."

"என் கல்யாணம் எப்பவேணா நிச்சயம் ஆகலாம். கூட அஞ்சு பவுன் கேட்டாலும்சரி. டெம்பரரி குமாஸ்தாவா இருந்தாலும் சரி. சிம்பிளா கல்யாணம் பண்ணணும்னாலும் ரெடி. க்ராண்டா வேணும்னாலும் சரி."

"அவ்வளவு காயமா என் கேள்வி."

"உங்க ஜனம் அவங்களுக்கு அவமானமாயிடுத்து. உறவுன்னு வரபோது."

"நட்பு வேற. உறவு வேறயா?"

"நிச்சயமா. அவங்களுக்கு அப்படித்தான். நட்பு பச்சாதாபத்துல. உறவுன்னா சம அந்தஸ்து. இல்லை வேறு உயர்வு வேணும்."

முரளி மரக்காலைத் தடவிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"எனக்கு வருத்தமா இருக்கு உமா. நல்லவங்களை

"வருத்தப்பட வெச்சுட்டேனோ?"

"ஆமா. அவங்க எதிர்பார்க்கறது கௌரவம். ராஜா மாதிரி மாப்பிள்ளை. நான் ராஜா மாதிரி இல்லைங்கறது தெரியலேயில்லை."

"எங்கப்பாவைக் கெஞ்சிப் பேசச் சொல்லட்டுமா?"

"எதுக்குக் கெஞ்சணும்?"

"கெஞ்சாம என்ன செய்யறது. ஓடிப்போறதா?"

"எதுக்கு ஓடணும்? நடந்து போகலாம். சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ, டாக்ஸி பிடிச்சு ரிஜிஸ்டர் ஆபீஸ் போவோம். கல்யாணம் பண்ணிப்போம்."

"ரொம்ப கஷ்டம் உமா."

"உங்களுக்காக."

"உனக்கு. பின்னால நமக்குக் கல்யாணம் சரியா நடக்கலையேன்னு வேதனை வரும்."

"நான் ரொம்ப நாளா ஆசைப்பட்ட கல்யாணம் இதுமாதிரிதான்."

"நெஜமாவா."

"போதும்; தயங்க வேண்டாம். முதல்ல ரிஜிஸ்டர் பண்ணுவோம். சிநேகிதர்கள் இருந்தா கூப்பிட்டு மாலை மாத்திப்போம். போறும்."

"உன்னை ஒரு இக்கட்டுல வச்சுட்டேன் இல்லையா."

"வேண்டாம். விட்டிருந்தாதான் இக்கட்டு."

"எப்படி?"

"நடுவீட்ல நின்னு உங்களை லவ் பண்றதா சொல்லிட்டு அவரை நான் மறந்துட்டேம்பா... வேற இடம் பாருன்னு தேம்பறதுதான் வேதனை."

"எங்கப்பா வரேன்னுருக்கார்... கல்யாணத்துக்கு."

"அது போதும்."

"அப்ப ஏற்பாடு பண்ணிடட்டுமா?"

"நாலு நாள்ல சகலமும் முடிஞ்சிருக்கும்னு நெனைச்சேன்."

"எனக்கு ஒரு கால் இல்லையே. சட்டுன்னு விஷயம் முடிக்கறதுக்கு."



"இப்போ..."

"சிறகே முளைச்சாச்சு. கால் பத்தி என்ன கவலை."

நாட்கள் பறந்தன.

நண்பர்களுக்கு உமாவை அறிமுகம் செய்தான். விஷயம் சொன்னான்.

"என்னைக் கூட்டிட்டுப் போயிருக்கணும். இத்தனை பேரில போஸ்ட்மாஸ்டரை சும்மா விட்டுறதா..." அமலேந்திரன் கூவினான்.

"அதான் கூட்டிட்டுப் போகலை."

"விடுறா. நடக்க வேண்டியதைப் பாரு." ராமமூர்த்தி வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டான்.

கணேசன் எப்படி என்னவிதமான நடவடிக்கைகள் என்று பட்டியல் போட்டான்.

சகலமும் நடந்தன. ரகஸ்யமாய் பத்திரிகையின்றி காதோடு காதாய் பரிமாறி விஷயங்கள் நடந்தன. பழம் பெரும் தேசபக்தர், ஆளும் கட்சி எம்.எல்.ஏ. எதிர் கட்சி வட்டச் செயலாளர், சப்ரிஜிஸ்ட்ரார், கௌரவ மாஜிஸ்ட்ரேட், தொழில் அதிபர், சினிமா தயாரிப்பாளர் என்று ஏழு பேர் முன்னிலைப்படுத்தப்பட்டார்கள். அப்பாவும் அம்மாவும் வந்து சபா வாசலில் நின்றார்கள். நிறைய நண்பர்கள் வந்தார்கள்.

எட்டரை மணிக்கு உமா வந்தாள். க்ரீன்ரூமில் புதுப்புடவை மாற்றிக் கொண்டாள். பூ வைத்துக் கொண்டாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நமஸ்கரித்தாள். சபைக்கு வந்தாள்.

'மனித அறிவின் சாட்சியாய், மனித குல மேம்பாட்டுக்கு உதவிய உலகத்தில் உள்ள நல்லவரின் சாட்சியாய் இவளே என் மனைவி' என்று முரளி உறுதி மொழிப் பத்திரம் படித்தான்.

'உலகமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இசையின் சாட்சியாய், பஞ்சபூதங்களின் சாட்சியாய் இவரே என் கணவர்' என்று உமா உறுதிமொழி சொன்னாள்.

முதல்நாள் முழுவதும் அமலேந்திரன் வீட்டுக்கருகே உள்ள அம்மன் கழுத்தில் தொங்கவிட்டிருந்த ஆறு பவுன் தங்கத்தாலியை முரளி உமாவுக்கு அணிவித்தான். மாலை மாற்றினான். எல்லோரையும் குனிந்து கும்பிட்டான்.

அப்பாவிடம் நெருங்கி சாஷ்டாங்கமாய் விழுந்தான். அப்பா கண்களை மூடிக் கொண்டார்.

"சென்னிபோங்கு தண்திருவேங்கடமுடையாய் உலகு
என்னையும் என் உடைமையையும் உன்
சக்கரப் பொறியொற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்தேனின்யென் திருக்குறிப்பே."

என்று பாடினார்.

பையனையும் மருமகளையும் கட்டிக்கொண்டு என் உடைமைகள் என்றார். திருமாலின் சக்கரப்பொறியை ஒற்றியது போல் அவர்கள் சிரசில் கை வைத்தார். "கோவிந்தா இவர்களை இனி என்ன செய்யப் போகிறாய். என்ன உன் திருக்குறிப்பு?" தேம்பினார்.

"எம்மன்னாய் என் குல தெய்வமே
என்னுடைய நாயகனே
நின்னுள்ளேனைப் பெற்ற நன்மை
இவ்வுலகினில் யார் பெறுவார்
நம்மன் போல வீழ்த்தமுக்கும்
நாட்டிலுள்ள பாவமெல்லாம்
சும்மெனாதேகை விட்டோடித்
தூறுகள் பாய்ந்தனவே."

என்று கண்மூடி இறைஞ்சினார்.

பத்து நிமிடம் கல்யாணம்.

பதினொன்று நிமிடத்தில் காபி, டிபன்.

முரளியின் வீட்டுக்கு வந்து பட்டுப்புடவையை உமா களைந்து வேறு புதுசு உடுத்திக் கொண்டு கோயிலுக்குக் கிளம்புகையில் அவள் தங்கை ஆத்திரத்துடன் வீட்டு வாசலுக்கு வந்தாள்.

"உமா கிளம்படி."

"எங்க?"

"நம்ம வீட்டுக்கு."

"ஏன்?"

"இப்ப நீ வரவேண்டாம். வீட்டுக்கு வா. அப்பாவே உன்னைக் கொண்டு வந்து இங்க விடுவார்."

"ஸாரி நான் இப்ப அப்பாவுக்கு உடைமை இல்லை. யூ ஆர் லேட்."



"நான் பேசறேன்மா அப்பாகிட்ட."

"ஒரு விஷயத்தை ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விதமா பேசவா. பேசினது போதும்."

"அப்பா அழறார்."

"சரியாயிடும். சமாதானப்படுத்து."

"வரமாட்டியா?"

"வருவேன். அவரை வான்னு நீ கூப்பிட்டியானா."

"சரி கூப்பிடறேன். எங்க முரளி? ஸார், நீங்களும் உமாவும் வீட்டுக்கு வாங்கோ." வாசலில் இருந்தே கை கூப்பினாள்.

ஆனால் பெத்த மனம் பித்து ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு பேச்சு.

"மகாபாவி. சிரிக்க வச்சுட்டியேடா என் குடும்பத்தை. ஒத்தைக் காலாலே தேச்சுட்டியேடா.. என் கௌரவத்தை." வசவாய் ஒரு க்ஷணம் இறைத்தது.

"கிளியா பேசுமே.. குயிலா பாடுமே. உனக்கு வேகமா நடக்க முடியலேன்னா அதை நீ கோச்சுண்டாக் கூட என் மனசு தாங்காதே." மறுக்ஷணம் அழுதது.

"ஏம்மா, அதுக்கு இப்படி பண்ணுவியா. மளிகைக் கடைக்குப் போற மாதிரி, ரிப்பன் குஞ்சலம் வாங்கிண்டு வர மாதிரி, மாப்பிள்ளை வாங்கிண்டு வறியேடி. தாலி கட்டிண்டு நிக்கறயேடி. உனக்கு நான் என்னம்மா கெடுதல் பண்ணினேன். ஏன் இப்படி பண்ணினே..?" கைபிடித்து கெஞ்சிற்று.

"பெத்தவா வயித்தெரிச்சல் கொட்டிண்டா நன்னாயிருந்ததில்லை. ஆனா நீ நன்னாயிருக்கணும். எனக்கு ஒண்ணுமில்லை. நான் பழங்காலத்து ஆள். கொஞ்சம் பைத்தியம். மேஜைல முழங்கால் இடிச்சுண்ட மாதிரி கத்தறேன். எனக்கு சரியா போயிடும். பகவானே, எனக்கு சரியா போகணும். வந்து போயிண்டிரு. வேண்டாம், கொஞ்ச நாள் கண் மறைவாவேயிரு."

பெத்த மனம் பித்து. பிதற்றிற்று.

ஒரே மனிதன் நாலு கணங்களில் நாலு முகம் காட்டுகிற இம்சையை முரளி உணர்ந்தான். குழம்பினான்.

அதைவிட பெரிய குழப்பம் மாலை நெஞ்சை வதைத்த போது அமலேந்திரனுக்கு போன் செய்து அவசரமாய் வரவழைத்தான்.

## 11

"என்னன்னு சொல்லித் தொலைடா." அமலேந்திரன் பொறுமையின்றி கூச்சலிட்டான். முரளி முகம் கருப்பேறிக் கிடந்தது. கண்களில் கலவரம் மின்னிற்று. விரல்கள் எதையோ பற்றி விடுவித்துத் தவித்தன. விஷயம் மட்டும் சொல்லாய் வெளி வரவில்லை.

"ஒன்னுமில்ல அமலேந்திரா. என்னவோ சட்டுன்னு போன் பண்ணிட்டேன். ஸாரி." முரளி பேச மறுத்த போது அமலேந்திரன் "சொல்லித் தொலைடா" என்று கூச்சலிட்டான்.

வீட்டிற்குள் இருந்த பெண்கள் எட்டிப் பார்த்தார்கள். அம்மா அவர்களை வியப்போடு இரண்டு நிமிடம் பார்த்துவிட்டு "இன்னொரு காபி அனுப்பட்டுமா?" என்று கேட்டாள்.

முரளி மறுத்து விட்டு, கதவைச் சாத்தி விட்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

"புரியலை."

"ச்சு... எப்படிச் சொல்றது அமலேந்திரா? நான் சந்தோஷப்படுறதோ இன்னொருத்தரை சந்தோஷப்படுத்தறதோ முடியாத போகும்."

"நான் அப்படி தத்தித் தத்தி பாத்ரூம் போறது பாத்து அழுதான்னா... அமலேந்திரா, நீ கூட என்னை அப்படி பார்த்ததேயில்லை இல்லையா? மரக்கால் அவுத்துட்டு ஒரு கால் ஊனி நாற்காலியப் பிடிச்சுக்கிட்டு ஊசலாடற முரளிய நீ கூடப்பாத்ததேயில்லை."

"முரளி எம்பா கண் கலங்கற."

"தப்பு பண்ணிட்டேன் அமலேந்திரா."

"........................"

"நான் கல்யாணம் பண்ணிண்டிருக்கக் கூடாது. ஒரு பெண்ணை சந்தோஷப்படுத்த முடியுமான்னு சந்தேகப்பட்டவன் கல்யாணம் பண்ணிண்டிருக்கக் கூடாது. எல்லாரும் பொம்பளையோட ஜோடி போட்டுப் போறாங்களேன்னு ஆசைப்பட்டு நானும் துணிஞ்சிட்டேன். ஜோடி சேர்த்துட்டேன். நான் ஒத்தை செருப்புக்காரன்றது மறந்து போச்சு அமலேந்திரா."



"முடியாதயே போயிடுமோன்னு நினைக்கறியா முரளி?"

"தெரியலை. முடியாத போச்சன்னா...?"

"கஷ்டம்தான். ஆனா இதுக்கெல்லாம் இப்ப மருந்து இருக்கு முரளி."

"மனசுக்கு மருந்து கடைல கிடையாது அமலேந்திரா."

"வாஸ்தவம். ஆனா முரளி, நீ வீணா பயப்படறியோன்னு தோணுது. நம்மளைவிட இந்தப் பொம்பளைங்க பல இடத்துல கெட்டி. நான் தம் அடிக்கறது என் பொண்டாட்டிக்கு கல்யாணத்துக்கு முன்னாடியே தெரியுமாம். ஃபர்ஸ்ட் நைட்ல தலைகாணிக்குக் கீழ் சிகரெட் பொட்டிய ஒளிச்ச வச்சேன். எதுக்கு ஒளிக்கணும்? நான் ஒன்னும் சொல்லலை. ஜாஸ்தி பிடிக்க வேணாம்னு அதுலே நெருப்பு பத்த வச்சது. என்னடா புது மாதிரிப் பொண்ணா இருக்கேன்னு நினைச்சேன். நாலு வருஷத்துல இதைச் சொல்லி அதைச் சொல்லி சிகரெட்டே இல்லாத பண்ணிடுச்சு. பொம்பளைங்க கெட்டிக்காரங்க முரளி. நாம நினைக்கிற மாதிரி இல்லை."

"சிகரெட் பிடிக்கறதும் நொண்டி நடக்கறதும் ஒண்ணா அமலேந்திரா? ஐயோ இவ்வளவு கருப்பா இருக்கே முழங்கால் பக்கம்னு அவ கத்திட்டான்னு வச்சுக்கோ. உடம்பு குன்னிப் போயிடும் எனக்கு."

"மாட்டாங்கன்னு தோணுது."

"அப்படி நடந்துட்டா..."

"நீதான் மெல்ல அவங்க மனச மாத்தணும். கத்திடு வாங்கன்னு நினைச்சு ஒதுங்கறதவிட அப்படி ஒரு கூச்சலுக்குத் தயாராய் உன் மனச வச்சக்கணும். உனக்குக் கஷ்டமாயிருந்தா தூங்குன்னு அவங்களை சமாதானப் படுத்தணும்."

"கல்யாணம் பண்ணிட்டு முதல் இரவுல, சரி தூங்குன்னு ஒரு பெண்கிட்ட சொல்ற நிலைமை பரிதாபம் இல்லையா அமலேந்திரா."

"யாருக்குப் பரிதாபம்."

"பொண்ணுக்குத்தான்."

"கெட்டிக்காரப் பொண்ணு அந்த நிலைமைக்குக் கொண்டு போகாது."

"உமாவை நீ கெட்டிக்காரிங்கறயா?"

"தெரியலை. பழகின நீயே பயப்படறியே. நான் என்ன சொல்றது?"

"நான் தப்பு பண்ணிட்டேனோன்னு தோணுது அமலேந்திரா."

"நடு யுத்தம். அதுல வெட்டுப்பட்டா நோவுமேன்னு யோசிக்கக் கூடாது. நோவு ஏற்பட்டுச்சன்னாக்கூட நோவே இல்லாத மாதிரி சிரிக்கணும்."

கலவரம் மாலை முழுவதும் மனசில் படர்ந்து பெருங்கொடியாய் கிளர்ந்து வளர்ந்தது.

அம்மா, பெண்கள் கூட்டம் அதிகம் சேர்க்காமல் தன் சுமங்கலி சகோதரி, நாத்தனார் என்று முக்கியமாய் மூன்று பேர்களைத் தேர்ந்தெடுத்து சின்னதாய் பாட்டுப் பாடி மிக லேசாய் கேலி செய்து உள்ளே அனுப்பினாள்.

முழுவேகத்தில் மின் விசிறி சுழன்ற போதும் வியர்த்தது. கட்டிலில் உட்கார்ந்து தலைகுனியச் செய்தது. இதை இரண்டு நாட்கள் கழித்து வைத்திருக்கலாமோ என்று ஒரு திருகல் நெஞ்சுக்குள் ஏற்பட்டது.

அவள் நமஸ்கரித்தாள்.

உண்ணச் சிறிதும், குடிக்கச் சிறிதும் கொடுத்தாள்.

"என்ன முகத்தில் இத்தனை சோகம்?" என்று அருகில் உட்கார்ந்து பேசினாள். பேசிக்கொண்டே இடைபில்லைத் திருகை எடுத்து விட்டுக் குஞ்சலங்களைப் பிரிக்க ஆரம்பித்தாள்.

"உங்கம்மாகிட்ட குஞ்சலம் வேண்டாம்னு கெஞ்சினேன். குஞ்சலம், ஜிமிக்கி மாதிரி அழகான பொருள் உலகத்திலேயே இல்லையாம். எனக்கு என்னவோ யாரோ பின்மண்டையப் பிடிச்சு இழுக்கற மாதிரியே ஒரு ஃபீலிங். ப்ளீஸ் எடுத்துறட்டுமா ஒன்னும் தப்பில்லையோன்னோ... என் சுரத்தே இல்லை மூஞ்சில."

"ஒண்ணுமில்லை."

குஞ்சலம், இடைபில்லை, காது மாட்டல், கண்ணாடி வளையல், காசுமாலை எல்லாம் கழற்றி மேஜை மீது வைத்தாள்.

"அப்பா... பாதி பாரம் இறங்கிடுத்து. இந்தப் புடவைய மாத்திக்கட்டுமா? ப்ளீஸ் சாயந்திரமே இங்கே வந்து என் காட்டன் நைட்டிய ஒளிச்சு வச்சுட்டேன். நான் நைட்டி



போட்டுக்கலாமோன்னோ.. ஏன் பேச்சே இல்லை?"

முரளி விநோதமாய்ச் சிரித்தான்.

விளக்கணைந்தது. காட்டன் நைட்டி மாட்டுகிற நிழலை விநோதமாய்ப் பார்த்து விளக்கு போட்டதும் இதுவரை பார்த்தேயிராத ஒரு உமாவை புதுக் கோலத்தில் பார்த்தான்.

"நீங்க அவுக்கலையா?"

"ம்ம்?"

"கால் சுழட்டி வச்சுட்டுத்தான தூங்குவீங்க?"

"ம்ம்."

"நான் சுழட்டி விடவா?"

மரக்கால் ஓரத்தில் வைக்கப் பட்டது.

"உமா."

"ம்ம்."

"இங்கேயிருந்து அந்த மரக்காலைப் பாக்கறப்ப உனக்கு விநோதமா படலை..?"

"என்ன விநோதம்?"

"தினம் காலை அவுத்து சுவரோரம் வைக்கணுமே. அது ஒரு மாதிரியான வேதனை தரலை?"

"ஓஹோ. அதான் முகத்தில் இத்தனை பயமா? நான் எங்க மிரளப் போறேனோன்னு நினைச்சு நீங்க மிரண்டாச்சாக்கும். முரளி.. நான் உங்களைப் பேர் சொல்லி கூப்பிடலாமா? எப்ப கல்யாணத்துக்கு சரின்னு சொன்னேனோ அப்பவே நான் சகல கற்பனையும் செய்தாச்சு. நீங்க நிக்கறது, நடக்கறது, படுக்கறது எல்லாம் மனசுக்குள்ளே நடந்தாச்சு. விளக்கை அணைக்கட்டுமா? இருட்டில் உக்காந்து பேசுவோமே?"

இருட்டு கவிழ்ந்து திசை தெரியாது முப்பது விநாடிகள் திகைக்க அருகே தலையணைகளை உயர்த்தி முதுகுக்கடியில் கொடுத்தபடி படுத்துவிட்டாள்.

"முரளி ஒரு சின்ன விஷயம் புரிஞ்சுக்கோங்க. இருநூறு ஃபைல் இருக்கிற ஒரு சார்ட்டட் அக்கௌண்டெண்ட் சிடில ஒரு சபா நடத்தற அளவு திறமை உள்ள ஒரு ஆண், காரும், சொந்த வீடும் உள்ள ஒரு புருஷன் எனக்கு... என் யோக்கியதைக்கு அதிகம். அவனுக்கு வலக்கால் இல்லையேன்னு ஏங்கறதவிட அப்பா இத்தனை

கெட்டிக்காரத்தனம் இருக்கேன்னு எனக்கு யோசனை பண்ணத் தெரியும். சட்டுன்னு என் ஸ்டேட்டஸ் அதிகமாயிடுத்து பாத்தேளா? வெறும் போஸ்ட் மாஸ்டர் பொண்ணில்லை நான். ஒரு சி.எ.க்கு மனைவி. வேற ஒரு உலகம். பற்று வரவு, வரி, சலுகை, கறுப்பு, வெளுப்புன்னு ஆயிரம் கணக்குக் காட்டற உலகம். தம்பூர் சுருதி, தியாகையர் கீர்த்தனை மட்டுமேயில்லை. போனிஸம், பிங்கலாயிட்டுன்னு வேற உலகம் சுருக்க வரும். எனக்குத் தெரியாதுன்னு கண்ணை மூடிப்பானேன். நான் தொட்டாசிணுங்கியில்லை. கொஞ்சம் தடலடி. வெளிய ஆ ஊன்னு பேசிட்டு இருட்டித்துன்னா நெஞ்சுல கை வச்சு நடுங்கற பொம்பளை இல்லை. பேச்சும் புத்தியும் ஒரே மாதிரி."

"முரளி, வெளிப்படையா இருங்கோ. கற்பனை பண்ணி மிரண்டு போறதவிட நிஜம் சொல்லி சண்டை போடலாம் என்ன."

உழைப்பாளர் சிலையில் நெட்டிக் கொண்டிருக்கும் கல் சட்டென்று உருண்டு விழுந்ததுபோல ஒரு அதிசயமான மகிழ்ச்சி ஏற்பட்டது. சற்று நேரம் நினைவுத் தூசி கண்ணை மறைத்தது. திரும்பி அவன் கன்னங்களை வருட அவன் கழுத்தை உயர்த்தி உதடுகளில் முத்தமிட்டாள். முரளியின் வலக்கை எடுத்து மார்பில் பதித்துக் கொண்டாள்.

வெட்கப்படுகிற பெண் ஆணுக்கு மிக அன்னியமானவளாய், புரிந்து கொள்ள முடியாத பொருளாய் போகிறாள். 'அப்படி இருப்பதே பாதுகாப்பு' என்று மேலும் தொடருகிறாள். ஆனால் வெட்கம் அழியும்போதுதான் உண்மையான தொடர்பும் புரிதலும் நிகழ்கின்றன.

நாற்பது வயதுக்கு மேல் வெட்கம் விட்ட பெண்கள் தான் நம் தேசத்தில் அதிகம். புரிதலும் இது போலவே காலம் கடந்துதான் நிகழ்கின்றது. புரிதல் நிகழும்போது பாரம் மிக அதிகமாய் போக மௌனமே அதிகமாய் புருஷன் மனைவிக்கு இடையே நிலவுகிறது.

உமா வெட்கம் உடைத்தாள். முரளி அச்சம் நீங்கினான்.

கலவியில் குழப்பமில்லாதபோது மற்றவையில் சந்தோஷம் தானாய் வருகிறது. மழை ஈரம் படிந்த தியேட்டரில் புருஷன் கையைத் தோளில் போட்டுக் கொண்டு அவள் இடுப்பை வளைத்துப் பிடித்து அவனுடன் பேசியபடியே படியேற உதவி செய்யும் மனைவி பத்தினி.



எல்லோரும் கேலி செய்வார்களே என்று கூடையோடு புருஷனை தலைக்கு மேல் வைக்கையில் எப்படி சதி சாவித்திரி கருதவில்லையோ, உமாவும் புருஷன் மரக்கால் பற்றி மறந்தே போனாள்.

## 12

வெட்கம் என்பது மனசின் காரியம். வெட்கம் விடுதலும் மனசே செய்யும். அச்சம் அதிகமானாலும் வெட்கம் இல்லை அன்பு அதிகமானாலும் வெட்கமில்லை.

"இது என்னம்மா இடுப்புல பெரிய தழும்பு. பட்டையா?"

"இதுவா பாவாடைய இறுக்கக் கட்டி கட்டி இப்படி பதிஞ்சு போச்சு."

புருஷன் தடவிக் கேட்ட சந்தோஷத்தோடு மனைவி சொல்கிற நேரம். வெட்கம் விட்ட நேரம்.

"கண்மை ஏதாவது தொட்டுட்டீங்களா... என் விரல்ல ஏதோ கருப்பா ஒட்டறது..."

"இல்லை என் மீசைக்குக் கருப்புப் பென்சில் போட்டுப்பேன்."

"ஏன்?"

"நாலஞ்சு நரைச்சிருக்கு."

"எங்க?"

"இந்தப் பக்கம் மூணு நரை.. இந்தப் பக்கம்.."

"கஷ்டம். இதுக்குப் போய் கருப்புப் பென்சிலை தேச்சுப்பானேன். என் மூஞ்சீல்லாம் கருப்பா இருக்கா?" மனைவி சிடுசிடுக்க ஆமென தலையசைக்க வேண்டியிருக்கும்.

இது புருஷன் வெட்கம் விட்ட நேரம்.

முரளி அவிழ்த்து வைத்த மரக்காலை விடிகாலை எடுத்து மாட்டிக் கொள்ளும்போது உமா உதவி செய்தாள்.

"முழங்கால் தழும்பேறி கெட்டிப்பட்டிருக்கா?"

"ஆமாம்."

"இந்த இடம் கண்டினா வலிக்குமா?"

"கண்டறதைப் பொறுத்து."

"நான் கேட்கறது."

"உணர்ச்சி இருக்கான்னு கேட்கறயா? உனக்குப் பாதம் மாதிரி எனக்கு இந்த முழங்கால் தோல் தடிமனாயிடுத்து. அதே சமயம் உணர்ச்சி உண்டு."

"கடவுளே, எவ்வளவு வலி இருந்திருக்கும் முதல் முதல்ல போட்டு நடக்கறப்ப."

"அநேகமா தினமும் அழுவேன்."

"வலி தாங்காமயா."

"வலி, அவமானம், இப்படி எனக்கு ஆயிடுத்தேன்னு கழிவிரக்கம்."

"ஈஸ்வரா" உமா குனிந்து அவன் முழங்கால் முடிவில் முத்தமிட்டாள். கன்னம் பதித்தாள்.

"கொடுமைதான் இல்லையா? பதினாறு வயசு வரைக்கும் நன்னாயிருந்த கால்..."

"ஆரம்பத்துல கொடுமையா பட்டது. அப்புறம் போகப் போகச் சரியாயிடுத்து. கால் இல்லாதது சில சமயம் மறந்துகூட போயிடும்."

"எப்ப ஞாபகம் வரும்...?"

"மாடிப்படி ஏறும்போது, கார்ல... ஆட்டோல ஏறும்போது, ஓடணும்னு ஒரு நிலை வந்தா... சினிமால யாராவது துள்ளி ஆடறதை க்ளோசப்ல காமிச்சா ஞாபகம் வரும்."

"அப்புறம்...?"

"தியேட்டர்ல எவன் காலையாவது இருட்ல மெதிச்சுடுவேன். ஐயோன்னு கத்துவான். 'ஸாரி'ன்னு சொல்லுவேன். மரக்காலான்னு கேப்பான். ஆமாம்பேன். அப்புறம் திரும்பி அந்தப் பக்கம் போறச்சே என்னைப் பாத்ததுமே அவன் ரெண்டு காலையும் முன்ஜாக்கிரதையா ஸீட்ல வச்சுப்பான். கொஞ்சம் சிரிப்பா வரும். ரொம்ப வேதனையாயும் இருக்கும்."

"ஈஸ்வரா..." உமா மறுபடி அந்த முழங்கால் நுனியில் முத்தமிட்டாள்.

"என்கூட சினிமாவுக்கு வரும்போது நான் முன்னாடி போறேன். என்ன..."

உமா அவன் தலையைக் கோதினாள். முரளி கண்கிறங்கினான்.



காமம் சிறக்கமானதில்லை. காமத்தில் பொங்கும் காதலே சிறக்கும். மதி சிறக்கமானதில்லை. மனைவி முன்னின்று செய்யும் உதவியே சிறக்கும். இரவு சிறக்கமானதில்லை. இரவின் குளுமை மாதிரி சொல் வருகிறதே அதுவே சிறக்கும்.

இப்படி சொல்லும் செயலும் சிறக்கமாய் வழங்கும் மனைவி அமைவதே பாக்கியம்.

உமாவும் முரளியும் கிறங்கினார்கள். அன்பு செய்வதில் இரவும் பகலும் அந்தியும் விடியலுடன் அழிந்து போயின.

உமா சூல் கொண்டாள். அவன் ஆபீஸ் அறைக்குள் நுழைந்து தனித்து இருக்கும்போது விஷயம் சொன்னாள்.

"டாக்டர் சார். உங்களுக்கு மாசாமாசம் ஆயிரம் ரூபா கூட செலவு வரும். தாங்குவேளா...?" முரளி கூச்சமாய் சிரித்தவன் மலர்ந்தான்.

"உமா இது செலவா? வரவு இல்லையா...?"

"வரவுனால செலவு உண்டு..."

"செலவழிக்கத்தான் வரவு உமா."

சரம் வெடிக்கிற நேரம்தான் திருமணம் நடந்தது என்கிற குறையை இருவரும் கொண்டிருந்தார்கள். சீமந்தத்தை நின்று இரவெல்லாம் எரியும் கார்த்திகை மாதிரி கொண்டாடினார்கள்.

வளைகாப்பும் முரளி வீட்டிலேயே நடந்தது. மறு நாள் ஆயிரம் பேர் விருந்தாய் கொண்டாடும்படி அமைந்தது. போஸ்ட்மாஸ்டர் மனப்பூர்வமான வாழ்த்துக்கள் என்று கார்டு மட்டும் எழுதினார். வேதனைப்பட்ட உமாவை முரளியே தந்தையாய் தாயாய் நின்று தடவிக் கொடுத்தான்.

நகரில் சிறந்த நர்ஸிங் ஹோம் அழைத்துப் போனான்.

நிறை சூலியாய் வலியோடு தவிக்கும் மனைவியை நேரம் தவறாமல் கொண்டு போய் சேர்த்தான். கட்டிலில் அவள் படுத்திருக்க அருகே அமர்ந்து கையைப் பிடித்துக் கொண்டு ஸ்லோகம் சொன்னான்.

பெண் குழந்தை.

தலை முழுவதும் சுருட்டை சுருட்டையாய் முடி. சிவந்த புஷ்பம் மாதிரி குழந்தை. தகப்பனைப் பார்த்து வீறிட்டது.

முரளி முதன் முதலாய் குழந்தையைப் பார்த்ததும் கை கூப்பினான்.

வருக வருக மகனே இனிது வருக என்று முகமன் கூறினாள்.

இரண்டு நாள் பொறுத்து முரளியின் மாமனார் நர்ஸிங்ஹோம் வந்தார். தலை ஆடிற்று போலும். யாருமே இல்லை என்று நினைத்து குழந்தை கையில் நூறு ரூபாய் நோட்டு வைத்து கண் கலங்கினார். உமா முகம் திருப்பிக் கொள்ள - கேவினாள்.

தாதியிடம் நெருங்கி 'குழந்தைக்குக் கைகால் முழுசா இருக்கா..? குறை ஒன்னும் இல்லையே' என்றார்.

தாதி அதிர்ந்தாள்.

'ஏன் அப்படி கேக்கறீங்க?'

'என் மாப்பிள்ளைக்குக் கால் ஊனம். அதனால கேட்டேன்.'

'என்ன முட்டாள்தனம். அவருக்கு விபத்திலதானே கால் போச்சு. பிறவி ஊனமா அவரு?' தாதி சீறி தலை சொறிந்தாள். 'நீங்க படிச்சவரா..? என்ன கேள்வி இது.'

'நான் பொண்ணைப் பெத்தவனா. பேதமையா கேட்டுட்டேன். மன்னிக்கக்கோ.' திரைக்குப் பின் பக்கம் கழுவின பாட்டிலோடு நிற்கும் முரளிக்கு சகலமும் கேட்டது. சிரித்தான். வெளியே வந்து அவர் கைகளைப் பிடித்துக் கொண்டான். 'இப்ப எனக்குப் புரியுது சார். என் குழந்தை நாளைக்குக் கால் இல்லாதவனை.. கண் இல்லாதவனைக் கல்யாணம் பண்ணிண்டாலும் நானும் தவிப்பேன். நீங்க கேட்டது தவறில்லை. குழந்தையை கைல வாங்கிப் பாருங்கோ.' மாமனார் குழந்தையை மடியில் வைத்துத் தொட்டுத் தொட்டுப் பார்த்தபோது முரளியின் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

புருஷன் என்பவன் கொடுமையானவனாய் இருக்கலாம் தகப்பன் என்பவன் பேதமையானவன்தான்.

குழந்தை வளர வளர மாமனாரின் பேதமை முரளிக்கும் வந்தது. சின்ன தும்மல் போட்டாலும் லேசான ஜுரமென்றாலும் மனசு குழந்தையிடமே இருந்தது. குழந்தை எதையோ பொறுக்கித் தின்றுவிட்டு நாலு நாள் நிற்காமல் டயரியா போனபோது வீடு அமளிப்பட்டது. குழந்தையின் கைகளில் நரம்பு சிக்காமல் தலையில் நரம்பு தேடி சலைன் ஊசி குத்தி இறக்குகையில் 'கடவுளே' என்று கதற வைத்தது.



'கடவுள் கெட்டிக்காரன் சார். நமக்கு சோதனை வந்தா -போடா இதுவும் தாங்குவேன்னு முறைப்போம். இதுவே நம்ம குழந்தைக்கு வந்தா துடிச்சுப் போயிடுவோம். நம்மைத் தண்டிக்கறதுக்குதான் சார் நம்ம குழந்தைக்கு உடம்புக்கு வரது. தாங்க மாட்டோமே.'

ஆஸ்பத்திரியில் இன்னொரு தகப்பன் அனுபவ பூர்வமாய் பேசுகையில் இறை உணர்வு நின்றும் பொங்கிற்று. பயமே கடவுள் நம்பிக்கைக்குக் காரணம். பயத்துக்குக் காரணம் பாசம். பந்தம். உறவு. பிடிப்பு.

குழந்தை பள்ளிக்கூடம் போனான். பாட்டுப் பாடினான். சுவர் முழுவதும் கிறுக்கினான். ஹால் முழுவதும் பொம்மைகள் இறைத்தான். அப்பாவின் மரக்காலின் சறுக்குமரம் ஆடினான் வளர்ந்தான்.

கருப்புப் பென்சில் மறைக்க முடியாதபடி முரளிக்கு நரைகள் அதிகமாயின. உமாவுக்கும் தினமும் சீப்பில் கருள் கருளாய் முடி கொட்டிற்று. உடம்பு பெருத்தது.

குழந்தை சௌம்யா இரண்டாவது போகும்போது பிள்ளை பிறந்தான்.

மேலும் பொம்மைகள் கூடின. உறவுகள் பலப்பட்டன. ஓட்டங்களும் உழைப்பும் அதிகமாயின.

பேட்மிட்டனில் ஜெயித்ததும் சுவலைக் கட்டிக் காத்ததும் சாதாரண விஷயமாயின. பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாய் இருப்பதே பெரிய வெற்றி. குடும்பத்தைக் கட்டிக் காப்பதே மகத்தான செயல்.

சௌம்யா ஏழாவது ஸ்டாண்டர்ட் போகும் போது பையன் யூ.கே.ஜி முடித்தான். முரளிக்கு வாழ்க்கையின் ஆதார சுருதி பிடிபட்டுப் போயிற்று. இரண்டு குழந்தைகளும் பள்ளிக்குப் போய் திரும்புவதைப் பார்க்கையில் தான் நடத்திய போராட்டம் அத்தனைக்கும் அர்த்தம் புரிந்தது.

பாரதப் போர் முடிந்த பிறகு அர்ஜுனன் கூவினானாம். 'நான் ஜெயித்தேன் நான் ஜெயித்தேன்' என்று உரக்க சங்கநாதம் செய்தானாம். பதினாறு வயதில் மரக்கால் கட்டி அழுத அழுகை ஆரம்பித்த யுத்தம் வெற்றி முனைக்குத் திரும்பி விட்டது.

நான் ஜெயித்தேன் என்று உள்ளே ஓங்காரம். குழந்தைகளைப் பார்க்கும்போது எழுந்தது.

# 13

காசு சம்பாதிப்பதே குழந்தைகளுக்காகத்தான் என்கிற நினைப்பு வரும்போதே எத்தனை சம்பாதித்தாலும் குழந்தைகள் இருக்கிற வீட்டில் போதாமை வருகிறது.

கல்யாணத்துக்கு முன் ஆயிரம் ரூபாய் கடனென்றால் கேட்ட மறுநிமிடமே கொடுத்ததுண்டு. இப்போது நூறு ரூபாய் கைமாத்து கொடுக்கக்கூட யோசிப்பு வருகிறது. எனக்கே திடீரென்று தேவைப்பட்டால் என்கிற கேள்வி எப்போதும் இருக்கிறது. தீபாவளிக்கு இரண்டு பேண்ட், இரண்டு சட்டை எடுத்தாலே பெரிய குதூகலம் வந்துவிடும். பண்டிகைக்கு மூன்றுவிதமாய் உடுப்புகள் எடுத்த பிறகும் கடைசி நிமிஷம் ஷோகேஸில் புதுவிதமாய் ஒரு உடையைப் பார்த்துவிட்டு பெண் குழந்தைக்குத் தன் பரிசாய் கொடுக்க ஆசை வருகிறது.

நாளையும் நாலு வேளை பெண் குழந்தை உடுத்திக் கொண்டு வரும். வீட்ல கேஷுவலா போட்டுக்கறமாதிரி டிரஸ்லே இல்லை என்கிற பேச்சு வரும்.

பண்டிகை முடிஞ்சு இரண்டு புதுசு வாங்கும்படியாக இருக்கும். எத்தனை வாரிக்கொடுத்தாலும் குழந்தைகளுக்குக் கொடுப்பதில் கணக்கே தெரிவதில்லை.

தனக்குப் பனியனும் வேஷ்டியும் போதும் என்று நிறுத்தி குழந்தைக்குப் பெரிய பட்ஜெட் ஒதுக்குகிற புத்தி யாரும் சொல்லாமல் வந்தது.

பத்தாயிரம் இப்ப போட்டா பதினஞ்சு வருஷம் கழிச்சு லட்சமாகும் என்கிற விளம்பரம் மிகுந்த நப்பாசை கொடுத்தது. பெண் குழந்தை பெயரில் காசு போடச் சொன்ன விளம்பரம் நியாயமாய்ப் பட்டது.

குழந்தையின் சின்ன விசும்பல்கூட மகத்தான வேதனை கொடுத்தது.

"புது பென்சில் வேணும். அவ்வளவுதானே? நேத்தி வாங்கினது என்ன பண்ணினே சொல்லு. புதுசு தரேன்."

"தொலைச்சுட்டேன்."

"எங்க தொலைச்சே?"

"தெரியலை. தொலைச்சுட்டேன்."



"இனி அழாதே புதுசு வாங்கித் தரேன். தொலைக்காதே."

பத்துப் புதுப் பென்சில் அடங்கிய பெட்டி வாங்கி வருவான். பெட்டியோடு வேண்டுமென்று மறுபடி வாங்கி வரும். இரண்டு பென்சில்களை புது பாக்ஸில் அழகாக வைக்கும்போது தொலைத்ததாய் சொல்லப்பட்ட பென்சில் பைக்கு அடியில் பளபளத்து கிடக்கும்.

கோபிக்க மனம் வராது.

"என்ன செளம்யா இப்படி பண்றே?"

பெண் குழந்தை கண் கலங்கும்.

"போ அழாதே. ஜாக்கிரதையா வெச்சுக்கோ." புருஷனுக்கும் மனைவிக்கும் சண்டை வருமே ஒழிய குழந்தையை இரண்டு பேருமே கடிந்துகொள்வதில்லை.

"அவனை அடிச்சே கொன்றுடுவேன் உமா உன்னை."

"நின்னவாக்கிலே பாட்டிலைப் போட்டு உடைக்கிறா."

"அவக்கிட்ட என் பாட்டில் போச்சு."

"எச்சக்கையா இருக்கு. ஊறுகா சாதத்துக்கு நல்லெண்ணெய் எடுத்தேன். எட்டு வயசு ஒரு பாட்டில் தூக்கத் துப்பில்லை. சதா டான்ஸ் ஆடிண்டே பாட்டில எடுத்தா."

"கொட்டிக்க உக்காரும்போதே எல்லாத்தையும் எடுத்து வச்சுண்டு கொட்டிக்கிறதுதானே...? குழந்தையை ஏன் விரட்டறே...?"

"ஆமா, நீங்க சோத்து வெச்சிருக்கிற சொத்து கரைய நான்தான் கொட்டிக்கிறேன்."

"இதைத் தவிர என்ன பண்றே. விரலை மடக்கு."

புருஷனும் மனைவியும் குதறிக்கொள்வார்கள். உம்மென்று கிடப்பார்கள்.

"அம்மா அழுதுண்டே துணி தோய்க்கறதுப்பா. ஏன்?"

பெண் குழந்தை கேள்விக்கு அதில் தொக்கி நிற்கும் பாவத்திற்கு மனசு விண்டு போகும்.

"அழாதேன்னு சொல்லுடா."

"நீ சொன்னேன்னு சொல்லட்டா."

"சொல்லு."

"அம்மா, அப்பா உன்னை அழவேண்டாங்கறார்."

"அந்தண்டை போடி."

"அப்பாவும் தலைல கை வச்சிண்டிருக்காம்மா."

"கையை எடுக்கச் சொல்லு" பிணக்கும் அவளே. பிணக்கைத் தீர்ப்பவளும் அவளே.

குழந்தைக்கு ரொம்ப செல்லம் கொடுக்கிறோமோ, கவலையா இருக்கு? மனைவியோடு பிணங்கியிருந்த கவலை மறந்து குழந்தையைப் பற்றிய கவலை பற்றிக் கொள்ளும்.

சம்சாரம் சாகரம்தான். மனைவி நர்த்தனிக்கிற படகு. புருஷன் அலைகளோடு போராடுகிற மீகாமன். பரஸ்பரம் குறை சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லை. உடையாத படகு. உரப்பான மீகாமன். இரண்டுமே முக்கியம். தூக்கியெறியப்பட்டு பிரிய நேர்ந்தால் இருவருக்குமே அர்த்தமில்லை.

தனக்கு இளவயதில் நேர்ந்த துன்பங்கள் தன் குழந்தைக்கு நேரக்கூடாது என்று முரளி விரும்பினான். இப்படி வளர்ந்து மலர்ந்து, மணம் முடிந்து, குழந்தைகள் பெறுவோம் என்கிற நம்பிக்கையே அற்றுப்போன அந்த இளைஞன், தொப்பியில் சூடிக்கொண்ட சிறகாய் கொண்டாடினான்.

இந்தக் குழந்தைகளே தன் கௌரவம் என்று நினைத்தான்.

தன் தொப்பிச் சிறகை யாரால் கசக்க முடியும். எவருக்குப் பிடுங்கி எறியும் கோபம் வரும். போராடி ஜெயித்த பதக்கத்தை எவன் தூக்கியெறிவான்?

"ரெண்டுங்கெட்டான் வயசுதானே... ரெண்டு மூணு வருஷம் கழிந்து தானே புரிஞ்சுக்கும்." என்று புருஷன் மனைவி இருவருமே சமாதானப்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் குழந்தைக்கு அதிகம் புரிந்தது - புரியும் வயசு என்பது ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது. அன்போடு போஷிக்கப்பட்ட குழந்தை அறிவில் மாணிக்கமாய் ஒளிர்ந்தாள். கோபிக்காமல் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லும் பெற்றோர் கிடைத்ததால் பதில்களை பாதி கேட்டு பாதியைத் தானே ஊகப்படுத்திக் கொண்டாள்.

"ஏய்.. என்ன பண்றீங்க ரெண்டு பேரும்?" நடுராத்திரி எழுந்து தழுவிக்கொண்டிருந்த பெற்றோரை அதட்டினாள்.



தம்பதிகளுக்கு நடுவே படுத்துக்கொண்டாள்.

எட்டு வயதுக்கு அந்த சூட்டிமை அதிகம்தான்.

பத்து வயதில் தொட்டதற்கெல்லாம் 'புல்ஷிட்' என்று பேசினாள்.

"மணி ஆறாச்சு படிக்கலையா" என்று கேட்டால் -, கோபப்பட்டாள்.

"நீ சொல்லியா நான் படிக்கறேன். நான் என் பாடம் படிச்சு 'பாஸ்' வரும்போது படி படின்னு விரட்டினா எனக்கு வெறுப்பு வரது. ஏன் படிக்கணும்னு தோணறது. இனிமே நீ படின்னாதான் படிப்பேன். இல்லேன்னா புஸ்தகத்தை தொடக்கூடமாட்டேன்."

"ஸாரிம்மா."

மறுபடி மன்னிப்பு கேட்பது தவிர வேறெதுவும் சொல்லத் தோன்றுவதில்லை.

மத்தியானம் உணவுக்கு டிபன் பாக்ஸில் ஒரே ஒரு சப்பாத்தியும் அரை வெங்காயமும் எடுத்துப் போகும் போது ஆச்சரியப்பட்டாள்.

"என்னம்மா இது?"

"நான் கொஞ்சம் ஸ்லிம் ஆகணும்மா. இது போதும்."

"யார் சொல்லிக் குடுக்கறா உனக்கு இதெல்லாம்?"

"ஃபெமினால படிச்சேன்."

இவள் பேதையா, பெதும்பையா, பேரிளம் பெண்ணா?

பத்து வயசு உடம்பு, இருபது வயது புத்தி. இப்போது இப்படியென்றால் இருபதில் எவ்வளவாய் இருப்பாள்? இருபது வயது உடம்பும் நாற்பது வயசுப் பெண்ணாகவுமா..? வத்தலை போய்விடுமோ?

பெண் அம்மாவை ஆட்டிப் படைத்தது. ஏசினால் எதிர்த்துப் பேசியது. கெஞ்சினால் உடனே மலர்ந்து ஒன்றுக்கு நாலாய் உதவிகள் செய்தது.

"எதுக்குடி ராத்திரி தூங்குறபோது தலைமாட்டுல டிரான்ஸிஸ்டர்?"

"விவிதபாரதி கேக்கறேன்."

"சும்மா சினிமாப் பாட்டா? கெட்டு குட்டிச்சுவராப் போப்போற.. எடுத்துவை டிரான்ஸிஸ்டரை. நான் சொல்றது

காதுல விழல...?"

"நான் ஏன் சினிமா பாட்டு கேக்கக் கூடாது? இதுக்கு சரியா காரணம் சொல். அப்ப கேட்கல. சும்மா அதட்டினா?"

"எனக்குப் புடிக்கல."

"ஸாரி. உனக்குப் புடிச்சதத்தான் பண்ணணும்னு கட்டாயம் இல்லை."

"நான் உனக்கு அம்மாடி."

"போ வா..."

உமா அதிர்ந்தாள். கவலைப் பட்டாள். தலைமுறை இடைவெளிகள் ஏற்படாதிருக்க நிதானம் வேண்டும். வெறும் எதிர்ப்புகள் காழ்ப்பையே வளர்க்கும்.

## 14

ஆனால் இப்போது நடப்பது என்பது குறைந்து விட்டது. நெடு நேரம் நிற்கக்கூட சோமபலாய் இருக்கிறது. தோள் பக்கமும் இடுப்பும் சதை போட்டு புஜங்கள் உருளையாகி உடம்பு முழுவதும் செம்மையேறி ஒரு மதர்ப்பு வந்துவிட்டது.

பணக்காரக் களை என்கிறான் ராமமூர்த்தி. இரண்டு தெரு தள்ளி இருக்கிற சபாவுக்கு அம்பாஸிடர் கார் தேவைப்படுகிறது.

நாள் முழுக்க உட்கார்ந்த வண்ணம் டெலிபோன் பேச்சும், வியாபார வழக்கும், பகல் தூக்கமும், கலவையான உணவும், எல்லாவற்றையும் மீறி காசு பூரிப்பும் சந்தோஷமும் அந்தப் பதினாறு வயசு முகத்தை அடையாளமே தெரியாமல் மறைத்து விட்டன.

காஸ் ஏஜன்ஸி எடுத்த நாளிலிருந்து பெரிய மனிதர்கள் சகவாசம் இன்னும் அதிகமாயிற்று. உமாவும் பருமனில் முரளியோடு போட்டி போட்டாள். அதிகம் தூங்கினாள். காசு மாலையைப் போட்டுட்டு ரெட்டை வடமா ரெண்டு பண்ணிக்கிறேன் என்றாள். மோதிரக் கல்லை மூக்குத்திக்கு மாற்றினாள். ப்ளூஜாக்கருக்கும் புடவைக்கேத்த ரவிக்கைத் துணிக்கும் பல கடைகள் ஏறி இறங்கினாள். அவன் வெற்றியில், அவன் கிரீடத்தில்தான் அதிகம் சிறகுகள் முளைத்தன. பணத்தின் மேன்மையை பரிபூரணமாய்



அனுபவித்தாள்.

தன் மூத்த பெண்ணை விட இரண்டாவதாய் பிறந்த பிள்ளையை சற்று அதிகம் சீராட்டினாள். பிள்ளை பெற்றதே பெரிய வெற்றியாய் வரப்பிரசாதமாய் அவளுக்குத் தோன்றிற்று.

பெண் செளம்யா தகப்பனோடும் ஒட்டவில்லை. தாயோடும் சேரவில்லை. தாத்தாவின் செல்லம் அவளுக்குப் போதுமானதாக இருந்தது. முரளிக்கு ராமாயணம் முழுக்கத் தெரியும் என்றாலும் தகப்பனார் சொல்கிற பாவம் வரவில்லை. தாத்தாவின மடியில் படுத்து கதை கேட்டு அவர் படுக்கையிலேயே தூங்கி அவர் காபியில் பங்கு போட்டு இன்று இன்னும் கொஞ்சம் டிகாஷன் போடும்மா என்கிற அளவு வந்து விட்டது.

"இவ்வளவு ஸ்ட்ராங் காபி எதுக்குமா?"

"கசப்பா இருந்தாதான் காபி நன்னா இருக்கும்."

"நாக்கைப் பாரு. பெருந்தீனி."

"நீயுந்தான் திங்கற."

பத்து வயசுப் பெண்ணும் முப்பத்தி மூன்று வயசு அம்மாவும் பொருமிக் கொள்வார்கள்.

"உங்கப்பா கொடுக்கற செல்லத்துக்கு அளவு வேணாம்?"

உமா உறுமுகிறபோது சரிதான் போ என்று முரளி புறக்கணித்து விடுவான்.

பெரியவர் அவளுக்குப் பத்து வயதிலேயே தியானம் சொல்லிக் கொடுத்தார். நூறு பாசுரங்கள் அவளுக்கு மனனம் ஆயிற்று. பேச்சுப் போட்டிக்கு கட்டுரை எழுதி அவளை வீட்டில் பலமுறை பேச வைத்துப் பலமுறை திருத்தி பள்ளியில் அவள் முழுங்கி முதல் பரிசோடு வந்த போது வீடு கைதட்டிப் பாராட்டிற்று. பாராட்டுக்களில் பத்து வயசுக் குழந்தைக்குக் கர்வம் ததும்பிற்று. அகந்தை பலமுறை தலை காட்டிற்று. வயசுக்கு மீறின சிந்தனையும் பேச்சும் படிப்பும் அவளைக் கடுமையானவளாய் காட்டிற்று.

"அம்மா செளம்யா. உனக்கு ஃபோன். யாரோ உன் ஸ்நேகிதி பேசறா."

"நான் இல்லேன்னு சொல்லிடுப்பா."

"ஏம்மா...?"

"காப்பியடிக்க வரட்டுமான்னு கேட்டா நான் இல்லேன்னு சொல்லிடு." ஆபீஸ் அறைக்கு வராமலேயே குரல் கொடுத்தாள். எதிரே உட்கார்ந்திருந்த நாடார் அதிசயமாய் இதைப் பார்க்க முரளி சிரித்தான். "அவ கொஞ்சம் படிப்புல கெட்டிக்காரி சிவலிங்கம்" என்றான்.

"படிப்புல மட்டுமில்லீங்க. எல்லாத்துலயும் உங்கப் பொண்ணு கெட்டிதான். சிவலிங்க நாடார் அண்ட் சன்ஸ்னு போட்டிருக்கீங்களே உங்களுக்குப் பொண்ணேயில்லையான்னு கேட்டுது நேத்து."

"இருக்குதும்மா. அவங்களுக்கு வியாபாரத்துல இஷ்டமில்லைன்னு சொன்னேன்."

"படிக்க வைக்கலியா அவங்களைன்னு பதிலுக்குக் கேட்டுது. சிரிச்சேன். வேற என்ன செய்ய? குழந்தைங்க இப்பல்லாம் நம்மைவிட ரொம்ப சூட்சுமம். பேச பயமாயிருக்குங்க. பேசினா முட்டாளாயிடுவோம்."

ஆனால் சௌம்யாவைத் தேடி நிறைய தோழிகளும் வீட்டிற்கு வருகிறார்கள். ஹாலில் உட்கார்ந்து செஸ் ஆடுகிறார்கள். மாடியில் உட்கார்ந்து அமிதாப் பற்றிப் பேசுகிறார்கள். தனியறையில் கண்ணாடி முன்பு கூடிக்கொண்டு நல்ல பவுடர் பேஸ் எது? ஆயில் மேக்கப் எப்படி என்று பார்க்கிறார்கள்.

புல்புல் என்கிற நீலப் பறவைக் குழுவோடு சௌம்யா இரண்டுமுறை டூர் போய் வந்தாள். தன் படுக்கை, தன் பேனா, தன் பென்சில் என்று அடுக்கிக் கொள்ளத் தெரிந்துகொண்டாள்.

தாத்தாவிடம் கதை கேட்பது குறைந்து காமிக்ஸ் படிப்பது அதிகமாயிற்று.

குழந்தையின் வளர்ச்சி சந்தோஷமாய் இருந்தாலும் வயதுக்கு அதிகமான பேச்சும் பார்வையும் மிரட்சி அளித்தது.

கேட்டது மறுக்கப்பட்டால் சௌம்யா அடம்பிடிப்பதில்லை. அழுவதில்லை. உறுத்துப் பார்ப்பாள். "என்னை ஏன் டான்ஸ் கிளாஸுக்கு சேர்க்கமாட்டேங்கறீங்க அதுல என்ன தப்பு, காரணம் சொல்லு?" என்று கேட்பாள்.

"டான்ஸ் கத்துண்டு என்ன பிரயோஜனம் சௌம்யா. படிப்பைவிட டான்ஸ் முக்கியம். நல்ல டான்ஸராதான்



வருவேன்னு ஆசைப்பட்டா சேர்க்கறேன். டாக்டருக்கு, கம்ப்யூட்டர் சைன்ஸ் இல்லை என்னை மாதிரி சி.ஏ. படிக்கணும்னா டான்ஸ் இடைஞ்சல். டான்ஸ் வாத்தியார் ட்யூஷன், அரங்கேற்றம் வரைக்கும் அப்புறம் போறும்னு நிறுத்தக் கூட அது டான்ஸ் மட்டும்தான் உனக்கு முக்கியமான விஷயம்னா சரி, இப்பவே சேரு... என்ன சொல்ற..." மூன்று நிமிஷம் யோசித்தாள். "சரி டான்ஸ் வேண்டாம்." தீர்மானமாய் சொன்னாள். மறந்தும்கூட அதைப் பற்றிப் பேசமாட்டாள்.

குழந்தையின் ஆசையை உடைத்து விட்டோமோ என்கிற வேதனையில் முரளி சமாதானமாய் பேச முற்பட இரண்டே வரியில் "நான் டான்ஸ் பத்தி மறந்துட்டேன்" என்றாள்.

மயூரி சினிமா வந்தது நகரெங்கும் பேசப்பட்டது. அவள் பள்ளிக்கூடம், ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வகுப்பாக அந்த சினிமாவுக்குக் கூட்டிப் போயிற்று. விபத்தில் காலிழந்த பெண் மனம் தேறி மரக்கால் அணிந்து முயற்சி செய்து கடுமையான உழைப்புக்குப் பிறகு பெரிய டான்ஸராகும் கதை.

மயூரி போறேம்ப்பா என்கிறபோது சரி என்று முரளி காசு கொடுத்தான். உமா இடைவேளையில் தின்பதற்கு மிட்டாய்களும் பிஸ்கட் பொட்டலமும் போட்டனுப்பினாள்.

அந்தி வேளையில் தெரு முனையில் பள்ளிக்கூட பஸ் குழந்தையை இறக்கி விட்டு நகர்ந்தது.

சௌம்யா வந்ததும் உள்ளே போய் தன் கட்டிலில் சுருண்டு படுத்துக் கொண்டாள். கால் அலம்ப பின்பக்கம் போயிருப்பாள். மாடியிலிருப்பாள் என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்க, சௌம்யா சுருண்டு படுத்திருப்பது பதினைந்து நிமிடம் கழித்தே புரிந்தது.

முரளிதான் முதலில் பார்த்தான்.

"என்ன தாயி, உடம்பு சரியில்லையா?" நெற்றியில் கை வைத்தான். வியர்த்திருந்தது. மின் விசிறியை முழுவதும் சுழல விட்டு கட்டிலில் உட்கார்ந்து குழந்தை முதுகில் வருடினான்.

"தலை வலியா?" மறுபடி கேட்டான்.

"இல்லேப்பா."

"படம் எப்படி, நல்லா ஓடறதாமே?"

"நல்லாருக்குப்பா."

"ஏம்மா படுத்துட்ட கால் அவமபட?"

"அப்பா."

"சொல்லும்மா."

"நீ இனிமே என் பள்ளிக்கூடத்துக்கு வராத."

"ஏம்மா."

"என், ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் இன்னிக்கு ரொம்ப அழுதாங்க."

"ஏம்மா."

"மயூரிக்குக் கால் போயிட்டு மரக்கால் வச்சு நடராஜர் முன்னாடி அழறபோது எல்லாரும் அழுதாங்க."

"சரிம்மா. நான் என் பள்ளிக்கூடம்..."

"வராதப்பா."

"ஏன் செளம்யா?"

"உங்கப்பாவை நினைச்சா இன்னும் அழுகை வருதுடீன்னு நிறைய பேர் சொன்னாங்க. உங்கப்பாக்கும் மரக்கால்தான். உங்கப்பாக்கும் ஆக்ஸிடெண்ட்லதான் கால் போச்சு. முழங்கால் கீழ மரம் இருந்தா நடக்கறச்ச வலிக்குமான்னு கேட்டாங்க."

"ம்ம்.."

"எனக்கு வெக்கமா போச்சப்பா."

"செளம்யா."

"நீ ஏம்பா மரக்கால் வச்சுண்ட...?"

"வேறென்னம்மா பண்றது. நடக்கணுமே... வேலை செய்யணுமே. சபாக்குப் போகணுமே."

"ஏன் சபாக்குப் போகணும்? வாசல்லயே ஆபீஸ் இருக்கு. அங்கேயிருந்தே சம்பாதிச்சா என்ன? மரக்கால் போட்டு விந்தி விந்தி நடக்கறியே ஏன்?"

"என்ன தப்பு செளம்யா? எனக்கு இது செளகர்யம்."

"மயூரி டான்ஸ் ஆடினது தப்புப்பா."

"என்ன இது.. புரிஞ்சிக்காம பேசற.. நீ.."

"நீ புரிஞ்சுக்கலை. அந்த மயூரி புரிஞ்சுக்கலை."



"என்ன புரிஞ்சுக்கலை."

"கால் போச்சுன்னா ஏன் டான்ஸ் ஆடணும்? பாட்டுப் பாடறது. ட்ராயிங் போடறது. கதை எழுதறது... ஏன் கஷ்டப்பட்டு டான்ஸ் ஆடி மத்தவாளையும் அழ வச்சு... ச்சீ... அசிங்கம்."

"செளம்யா."

"நீ விந்தி விந்தி நடக்கறது அம்மாவுக்கு எத்தனை கஷ்டம்! நீ கார்ல நகர்ந்து நகர்ந்து ஏறி உக்காற வரைக்கும் எல்லாரும் வேடிக்கை பார்க்கறப்ப அம்மாக்கு எத்தனை கஷ்டமாயிருக்கும்?"

"அம்மாவுக்கு கஷ்டம் ஒண்ணுமில்லையே. கேளு நீ.. கேட்டுப்பாரு அம்மாவை."

"எனக்குக் கஷ்டமாயிருக்கு. என் ஃப்ரெண்ட்ஸ் கேக்கறபோது. அவா அழறபோது எனக்கு வெக்கமா இருக்கு. இனிமே வெளியே என் கூட வராதப்பா. என் பள்ளிக்கூடம் பக்கமே வராதே."

"கால் போன பிறகும் மயூரி கஷ்டப்பட்டு விடாத டான்ஸ் ஆடினது பெரிசில்லையா செளம்யா?"

"இல்லை. எல்லாரும் பாத்து ஐயோ பாவம்னு சொல்றதுக்குத் தானே டான்ஸ் ஆடறா. கால் இல்லாதவ டான்ஸ் ஆடறப்பதானே ஐயோ பாவம்னு சொல்றா. மயூரி ஒரு இடியட்?"

மின்னலென வார்த்தை இறங்கிற்று.

"டாக்டர் ஆகணும்னா டான்ஸ் எதுக்கு? டான்ஸ் ஆடறதுதான் கடைசி வரைக்கும்னா டான்ஸ் கத்துக் கலாம்னியே. அரங்கேற்றம் வரைக்கும் வந்துட்டு வேண்டாம்னு விடறதுக்கு டான்ஸ் க்ளாஸ் வேணுமான்னியே..?"

"ஆமா சொன்னேன்."

"அதே மாதிரி தானே இதுவும்?"

"புரியலை செளம்யா."

"முதல் தடவை. ஐயோ பாவம் கால் இல்லாதவ டான்ஸ் ஆடறான்னு பார்ப்பா. அப்புறம்.."

"அப்பாவை வேதனைப் படுத்தற செளம்யா."

"நீ. என்னை. அம்மாவை. எவ்வளவு கஷ்டப் படுத்தற?"

நீ வீட்டோடே இருந்தா எங்களுக்குக் கஷ்டம் குறைச்சலுதான். யாரும் எதுவும் கேக்க மாட்டா இல்லியா? நாளைக்கு நீ பள்ளிக்கூடம் வந்தா எல்லோரும் சுத்தி சுத்தி உன் மரக்காலை வேடிக்கை பார்ப்பா. அப்போ எனக்கு எவ்வளவு கஷ்டம்?"

"ஆமாம் சௌம்யா."

"நீ வராதப்பா."

"சரி வரலை. எழுந்து போய் கால் அலம்பு. டிபன் சாப்பிடு."

"அப்பா எம்மேல கோவமாப்பா?"

"இல்லம்மா."

"நான் உன்னைக் கேலி பண்ணலை."

"புரியறதும்மா."

"மத்தவா ஐயோ பாவம்னு சொல்றதுக்காக மயூரி டான்ஸ் ஆடறான்னு படறதுப்பா."

"வாஸ்தவம்."

"தன்னைப் பாத்துட்டு எல்லாரும் அழறாம்னு வலியப் பொறுத்துண்டு டான்ஸ் ஆடறமாதிரிப் படறது."

"இருக்கலாம்."

"எனக்குப் படிப்பு வரலேன்னு என்னை நீ டான்ஸ் க்ளாஸ் சேர்ப்பியா? எம் பொண்ணு படிக்கலை. அதனால டான்ஸ் பழகறான்னு சொல்லியா? டாக்டருக்குப் படிக்கணும்னா சயன்ஸ் எடுத்துக்கணும். டான்ஸ் படிக்கணும்னா டான்ஸ் க்ளாஸ் சேரணும் இல்லியாப்பா?"

உலகம் எதிர் பக்கம் உருண்டு முரளியைக் கவிழ்த்துப் போட்டது. கையிலிருந்த கண்ணி வெடி நழுவி விழுந்து உருக்குலைந்து. மரப்பாலம் கட்டை நகர்ந்து அதல பாதாளத்தில் இறங்கிற்று.

முரளி எழுந்து ஆபீஸ் போய் உட்கார்ந்து கொண்டான். வாஸ்தவம். இந்த ஆபீஸ், இந்த படிப்பு, காலில்லை என்கிற வெறியில் கிடைத்தது. இந்த பேட்மிட்டன் கோப்பை காலில்லை என்கிற ஆதங்கத்தில் கிடைத்தது. என் கல்யாணம், என் காதல், என் பிள்ளைப் பேறு, என் குடும்பம், என் வெற்றி இவையெல்லாம் என் குறையை மறைக்க நான் எடுத்த முயற்சி. எனக்கு என்ன குறை என்று ஆதங்கப்பட்டு



வேகம் கொண்டு வெளியேறி அடைந்த வெற்றி.

இவை வெற்றியில்லை என்கிறாள் சௌம்யா.

இத்தனை வெற்றிக்குப் பிறகும் உனக்குக் கால் இல்லாதது உண்மை என்கிறாள் என் பெண். இன்னும் நகர்ந்து நகர்ந்து வண்டியேற வேண்டும். பேண்ட் அணியும் முன் மரக்கால் அணிய வேண்டும். பழிக்குப்பழி என்று கிடைத்த வெற்றிகள் வெற்றியில்லை. உண்மை மறையப் போவதும் இல்லை. இன்று பள்ளிக்கூடம் வராதே என்று சொன்ன பெண், நாளை தன் திருமணத்திற்கும் வராதே என்று சொல்லுவாள்.

எனக்குக் கால் இல்லை என்றுதான் கால் ஏஜென்சியும் மருந்தும் கம்பெனி வீடு மனையும் கிடைத்தன. குறையைக் காட்டி உயர்ந்தாலும் குறை மறையவில்லை.

நான் என்ன செய்திருக்க வேண்டும்?

என் குறையை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். மறைத்தேன். மறக்க முயற்சி செய்தேன். மறந்தது போல் நடித்தேன். மறந்துபோகும் என்று நினைத்தேன்.

இல்லை. மறையவில்லை. முழங்கால் வளரவில்லை. வளராது. அக்லெபட் - இப். ஏற்றுக்கொள். இதை ஏற்றுக்கொண்டால்,

வெற்றி என்பது இல்லை என்று தெரிய வரும்.

சகலமும் ஜெயித்தேன் என்கிற முழக்கம் போகும்.

ஜெயிப்பது என்பது ஒன்று இல்லை. ஜெயம் இல்லாதவனுக்குத் தோல்வி என்பதும் இல்லை.

காசும், வீடும், காரும் வெற்றியில்லை. என்னால் கால் வீசி நடக்க முடியாது. நடக்க இயலாது. இயலாமையை ஏற்றுக் கொள்வதே வெற்றி. உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு இல்லாமை உண்டு. எல்லாவற்றையும் ஜெயிக்க எவராலும் ஆகாது.

என் பெண் பள்ளிக்கூடம் வராதே என்பது எனக்குத் தோல்வியா.. வேதனையா.. அவமானம்..?

இல்லை. அது உண்மை. நிதர்சனம். என் பொருட்டு என் குழந்தை படும் வேதனை. காரும் பங்களாவும் இதை சரி செய்ய முடியாது. கால் உள்ள நிறைய பேருக்குக் காரும், பங்களாவும், வியாபார நெளிவும் இல்லை. அது அவர்களின்

குறை.

வளம் இல்லாதவர்கள் வெறுமையில்லை.

காட்டை எங்க மறந்து வேஷம் போடுகிறபோது ஒரே பாவம் என்கிற ஊர் பரிதாபம் வந்துவிடுகிறது. அந்தக் கழிவிரக்கம் பிடித்துப் போகிறது. உள்ளே பொறி இறங்கி மரப்பொந்தில் கனன்று காடு முழுவதும் தீப்பிடித்தது.

முரளி இண்டர்காம் எடுத்து வீட்டுக்குள் உள்ள தொடர்புக்கு பட்டன் அழுத்தினான்.

"ஹலோ..." உமா குரல் கேட்டது.

"உமா இங்க கொஞ்சம் வந்து இந்த பேட்மிட்டன் ராக்கெட், வெள்ளிக்கப் / எல்லாத்தையும் உள்ள எடுத்து வச்சுடு."

"ஏன் அழகா இருக்கே அந்த இடத்துக்கு..."

"ரொம்ப அலங்காரமா இருக்கு உமா. அவ்வளவு அலங்காரம் வேண்டாம்னு படறது."

"என்ன திமிரு?"

"இதெல்லாம் ஒரு திமிர்ல வாங்கினது."

"இருக்கட்டும். என்ன இப்போ அதுக்கு?"

"இப்ப திமிர் குறைஞ்சு போச்சு."

"புரியலையே."

"எனக்கே இப்பதான் புரிஞ்சது. குழந்தை உள்ள படுத்துண்டிருக்கா கூட்டிண்டு போய் டிபன் குடு."

"நாளைக்கு அதை எடுத்து வைக்கட்டுமா?"

"வேண்டாம். இப்பவே எடுத்துரு."

"புதுசா எதாவது வைக்கலாமான்னு பார்க்கறேளா?"

"வேண்டாம். வெத்து இடமாவே இருக்கட்டும். அதான் அழகு."

முரளி போனை வைத்தான். உள்ளே உமா புரியாமல் விழித்தாள்.

முரளி வலக்காலை மெல்ல ஆட்டினான். மரக்கால் கனத்தது. மனசு மட்டும் லேசாய் இருந்தது.

★ முற்றும் ★



# கவிதை மழை



நீ என்னை நிந்தித்தாலும்
எப்படி நீ வஞ்சித்தாலும்
உனக்காக நான் காத்துக் கொண்டிருப்பேன்
நம்மை நேற்று வாழ்த்திய
மலர்களின் இன்றைய மௌனத்தோடும்
என்றோ ஒருநாள் காதல் தோல்வியால்
நான் மரித்துப்போவேன்
என்ற தீர்க்கமான முடிவின்
ஆயத்தத்தோடும்.

**அ.மகேந்திரன்,**
சென்னை.



உறங்கும் போது
அவள் வேறு யாரோ போல் தோன்றுகிறாள்.

புன்னகைக்கும் போது
வேறு யாரையோ அவள் நினைவுபடுத்துகிறாள்.

அன்பு காட்டும் போது
மிக நெருங்கிய யாரோ ஒரு முகத்தைப்
பார்ப்பது போன்ற பிரமை.

கோபப்படும் போது கூட
அவளின் சாயல்
அவளிடமில்லை.
அவளை
அவளாகவே பார்க்க வேண்டும் போலிருக்கிறது
எனக்கு

அவனோ
நான் நினைத்ததைக் காட்டிலும்
வேறு யாரோ போல் இருக்கிறாள்.

**அ.கார்த்திகேயன்,**
சேலம்.

